திருக்குறள்
மேற்கோள் விளக்கம்.
- தாமோதரன் (அ)

திருக்குறள் மேற்கோள் விளக்கம்

டாக்டர் அ. தாமோதரன்

தொல்காப்பியம்—இளம்பூரணம்

பிழைத்தோர்த் தாங்கும் காவலும் - தம்மாட்டுப் பிழைத்தோரைப் பொறுக்கும் ஏமமும்.

உதாரணம்

மை இகழ்ந்த ... ம்பொறுப்ப தன்றிமற்
ம்மை இகழ்ந்த ... எப்பயத்தால்—உம்மை

பொருளொடு ... ர்ந்த பக்கமும்-மெய்ப்பொருள் ... ர்ந்த பக்கமும்.

... வு ... தவர்கத ...

... தாரணம்

(குறள். ௩௫௪)

"சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்" (குறள். ௩௫௯)

எனவும் வரும்.

இன்னும் பொருளொடு புணர்ந்த பக்கமும் என்றது, அறம் பொருள் இன்பம் மூன்றினும் அறனும் இன்பமும் அன்றி ஒழிந்த பொருளொடு பொருந்திய பக்கமும் என்றுமாம். பொருளாவது, நாடும் அரணும் பொருளும் அமைச்சும் நட்பும் படையும்.

"படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு" (குறள். ௩௮௧)

என்பதனானும் கொள்க. அவையிற்றின் மிகுதி கூறலும் வாகையாம். நாடாவது,

"... தள்ளா ... ளையுளும் தக்காரும் தாழ்விலாச்
... சேர்வது நாடு." (குறள். ௭௩௧)

(... ள். ௭௪௫)

"உறுபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்." (குறள். ௭௫௬)

அமைச்சாவது,

திருக்குறள்
மேற்கோள் விளக்கம்

டாக்டர் அ. தாமோதரன்

தெற்காசியக்கழகம்
ஹைடல்பர்க் பல்கலைக்கழகம், ஹைடல்பர்க்
மேற்கு ஜெர்மனி

முதற்பதிப்பு 1970

விலை ரூ. 10

விற்பனை உரிமை

மீனாட்சி புத்தக நிலையம்
60, மேலக்கோபுரத்தெரு
மதுரை - 1

சிவகாமி அச்சகம், அண்ணாமலைநகர்

காணிக்கை

என் பெற்றோர்க்கு

உள்ளுறை

அணிந்துரை

டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம்
தலைவர் மொழியியல் துறை
கேரளப் பல்கலைக்கழகம்

"திருக்குறள் மேற்கோள் விளக்கம்" என்னும் இந்த நூலில் தமிழிலக்கிய இலக்கண உரைகளில் உரையாசிரியர்களால் மேற் கோள்களாக எடுத்தாளப்பட்டுள்ள குறட்பாக்களை அவற்றிற் குரிய விளக்கக் குறிப்புக்களோடு அ. தாமோதரன் அரிதின் முயன்று தொகுத்துள்ளார். மேற்கோள்களைத் தொகுப்பதில் அவர் எடுத்துக்கொண்டுள்ள அயரா முயற்சி, அவற்றை நிரல் பட வகைசெய்து காட்டியுள்ள அமைப்புத்திட்பம், அவ்வமைப் பிற்கேற்ற உத்தி முறைகளைத் தெரிவு செய்துள்ள அறிவுத் திறன் ஆகியவை பாராட்டுதற்குரியன. நூலின் ஓரிரு பக்கங்களைப் புரட்டுபவர்கட்கும் இந்த உண்மை எளிதில் விளங்கும். நூலின் நோக்கம், அமைப்பு, அதனைப் பயன்படுத்தும் முறை (பக்-8) மேற்கோள் ஆராய்ச்சியின் இன்றியமையாமை, அதன் உட்பிரிவு கள், அவற்றின் பயன் ஆகிய செய்திகள் முன்னுரையில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. குறளாராய்ச்சியில் இந்நூல் புதியதொரு துறையைத் தோற்றுவித்துள்ளதென்பதனை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். திருக்குறள் பற்றி இதுவரை நடந் தேறியுள்ள ஆய்வுப்பணிகளையும், இனிமேல் நடைபெற வேண்டிய ஆய்வு நெறிகளையும் நாம் திட்டவட்டமாகத் தெரிந்து கொண் டாலன்றி இந்த நூலின் அருமையை அறிந்து கொள்ளவும், அறுதியிட்டுணரவும் இயலாது.

உலக இலக்கியங்களுள் திருக்குறளுக்குத் தனியிடம் உண் டென்பது உலகறிந்த உண்மை. பகவத்கீதை, திருக்குர்ஆன், விவிலியவேதம் முதலிய அறநூல்களுக்கு இணையான கருத்துச் செறிவும், மனிதவுள்ளத்திற்கு எழுச்சியூட்டும் ஆற்றலும் குறளுக்கு உண்டென்பதைப் பலரும் கூறியுள்ளனர். ஏனைய நூற்களைப்

போலல்லாமல் அனைத்துலக மாந்தர்க்கும் பொதுவான அறக் கருத்துக்கள் பலவற்றைக் கூறும் போராற்றல் இந்நூலுக்கிருப் பதைப் பல்வேறு சமயத்தினரும் சுட்டிக்காட்டியுள்ளனர். தமிழக அரசு இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டு நிதியிலிருந்து திருக் குறள் ஆய்வுகட்கென ஒன்பது லட்சம் ரூபாயை மானியமாக வழங்கியுள்ளமை பாராட்டிற்குரியது. இந்நிதியின் உதவியோடு தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்கள் மூன்றும் திருக்குறள் ஆய்வுத்துறைகளைத் தனித்தனியே தோற்றுவித்துப் பணியாற்றத் தொடங்கியுள்ளன. தமிழகத்தில் திருக்குறளின்பால் ஏற்பட்டுள்ள இந்தப் பேரார்வம் நான் அறிந்த வரையில் வேறு எந்த மொழி இலக்கியத்திற்கும் இல்லை.

குறளின் ஆய்வுமுறைகளை இரு பெரும்பிரிவுகளாக முதற்கண் பிரித்துக் கொள்ளலாம். திருக்குறளின் உள் நின்று அதன் அகநிலைச் செய்திகளனைத்தையும் திரட்டி ஆராய்தல் ஒன்று; பிற இலக்கியங்களோடு திருக்குறளை ஒப்புநோக்கி அதன் பெருமையைத் தெளிதல் மற்றொன்று. இவற்றை முறையே அகநிலை ஆய்வு, புறநிலை ஆய்வு என வகைப்படுத்திக் கொள்ள லாம். ஒப்பியல் முறையின் அடிப்படையையொட்டிப் புறநிலை ஆய்வில் மேலும் இரு உட்பிரிவுகளைச் செய்து கொள்ளலாம். தமிழ்மொழியிலுள்ள பிற இலக்கியங்களோடுமட்டும் திருக்குறளை ஒப்பிட்டு ஆராய்தல் ஒருவகை. இதனை ஒருமொழி ஒப்புமை ஆய்வு என்று குறிப்பிடலாம். தமிழல்லாத பிறமொழிகளிற் காணப்படும் இலக்கியங்களோடு குறளை ஒப்புநோக்கி ஆராய்தல் மற்றொரு வகையாகும். இதனைப் பன்மொழி ஒப்புமை ஆய்வு என்றழைக்க லாம்.

பயன் தரக்கூடிய எவ்வகை ஆய்வையும் தொடங்குவதற்கு முன்பாக அதற்குரிய முன்னேற்பாடுகளை ஆய்வாளன் தேர்ந் தெடுத்து அமைத்துக் கொள்ள வேண்டும். முன்னேற்பாடுகள் ஒழுங்குபட அமையவில்லையாயின் எத்தகு நுண்ணறிவுடைய ஆய்வாளனாலும் நிலைபேறுடைய முடிவுகளைக் கூறிவிடமுடியாது. எனவே விரிவான திருக்குறள் ஆராய்ச்சிக்கு எத்தகைய முன் னேற்பாடுகள் தேவையென விளக்கிய பின்னர் ஆய்வு முறை களைச் சுட்டிக்காட்டுதலே பொருத்தமாகும்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுயிலிருந்து (1830) திருக்குறளுக்கு எண்ணற்ற பதிப்புக்கள் வெளிவந்துள்ளன. ஆயினும் நம்பகமானதொரு திருத்தப்பதிப்பு (Critical Edition) திருக்குறளுக்கு இன்றளவும் வெளிவரவில்லையென்பது குறிப்பிடற்குரிய செய்தியாகும். பயிற்சியில் உள்ள பதிப்புக்கள் பலவும் முந்திய பதிப்புக்களைப் பின்பற்றி மாற்றங்கள் சிறிதுமின்றி மூல பாடத்தை அமைத்துக் கொண்டுள்ளன. பழைய பதிப்புக்கள் அனைத்தும் தரமானவையென்ற நம்பிக்கையே இதற்குக் காரணம். இத்தகு பழம் பதிப்புக்களிலும் பிழைகள் நேர்ந்துள்ளமையை அறிஞர் பலரும் அவ்வப்போது சுட்டிக்காட்டியுள்ளனர். பதிப்புப் பணிக்குப் பயன்படுத்தப்பெருத திருக்குறள் ஏடுகள் பல தமிழகத்திலும், பிற இந்திய மாநிலங்களிலும் உள்ள சுவடி நிலையங்களில் இன்னும் காணப்படுகின்றன. இதுபோலவே இலங்கை, பிரிட்டன் முதலிய பிற நாடுகளிலும் திருக்குறள் ஓலைச்சுவடிகளும், கடிதப் பிரதிகளும் காணப்படுகின்றன. அவற்றையெல்லாம் ஒன்று திரட்டி, ஒப்புநோக்கி, ஆராய்ந்து திருத்தமுள்ள செம்பதிப் பொன்று திருக்குறளுக்கு வெளிவந்தாலன்றிக் குறளின் மூல பாடத்தில் தெளிவு ஏற்படாது; திருக்குறள் ஆராய்ச்சியும் முழுமையுருது. இத்தகைய பதிப்புப்பணிக்கு இம் மேற்கோள் விளக்கம் பேருதவி புரியுமென்பதில் ஐயமில்லை.

திருக்குறளை மொழிபெயர்க்கும் பணி சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கப்பட்டுளதெனலாம். பெயர் தெரியாத ஆசிரியர் ஒருவரால் மலையாள மொழியில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை இச்செய்தியை வலியுறுத்தும். இதுபோன்ற பழைய மொழிபெயர்ப்புக்கள் பாட அறுதியீட்டிற்கு நன்கு உதவக்கூடியனவாகும். திருக்குறளைப் பரப்பும் நோக்கத்தோடு இடைக்காலத்தில் தோன்றிய தினகரவெண்பாவைப் போன்ற முதுமொழி நூற்களுள் திருக்குறட்பாக்கள் முழு அளவில் எடுத்தாளப்பெற்றுள்ளன. இவ்வகை நூற்களும் மூலப்பாடங்களை அறுதியிடற்குப் பயன்படக் கூடியனவே. எனவே திருக்குறள் மொழிபெயர்ப்புக்களும், முதுமொழி நூற்களும் வகையுறத் தொகுக்கப்பெறவேண்டும்.

திருக்குறளுக்கு எழுந்த பழைய உரைகளனைத்தும் இன்னும் முழுமையாக அச்சாகவில்லை. அச்சேறிய உரைகளிலிருந்து உரையாசிரியர்கள் வெவ்வேறான மூலபாடங்களைக் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகிறது. திருக்குறள் உரைவளம் (ச. தண்டபாணிதேசிகர்), திருக்குறள் உரைக்கொத்து (தி. பட்டுச்சாமிஓதுவார்), திருக்குறள் உரைவேற்றுமை (இரா. சாரங்கபாணி), திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு (கி. வா. ஜகந்நாதன்) முதலிய வெளியீடுகள் இம்முடிபை வலியுறுத்தும் எனவே பாட அறுதியீட்டுப் பணியில் இவற்றையும் துணைச்சான்றுகளாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.


தரமுள்ள திருக்குறட் பதிப்புப் பணிக்கு அதன் சொல்லடைவு இன்றியமையாதது. திருக்குறள் மூலத்திற்கு மார்க்க சகாயஞ் செட்டியார், சாமி. வேலாயுதம் பிள்ளை, கி. வா. ஜகந்நாதன், ஏ. பரமேஸ்வரி ஆகியோரால் தொகுக்கப்பட்டுள்ள சொல்லடைவுகள் காணப்படுகின்றன இவற்றுள் சொல் விடுபாடுடையன சில; பொருள் விடுபாடுடையன சில; இலக்கணக் குறியீடுகள் இல்லாதன சில; சொற் பாகுபாட்டில் தெளிவான வரையறை இல்லாதன சில; இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு வரையறுத்த இலக்கணக் கொள்கையின் அடிப்படையில் அ. தாமோதரன் தொகுத்துள்ள திருக்குறட் சொல்லடைவு இன்னும் அச்சேறாமலிருப்பது வருந்துதற்குரியது.

பதிப்புப்பணிக்குச் சொல்லடைவுமட்டுமே முழுமையாகத் துணை செய்துவிட முடியாது. சொல்லடைவோடு (Word Index) தொடரடைவும் (Phrase Index), சிறுவாக்கிய அடைவும் (Clause Index), பெருவாக்கிய அடைவும் (Sentence Index), பொருளடைவும் (Subjcet Index) தயாரித்துக் கொள்ளப்பட வேண்டும். இவற்றைப் போலவே திருக்குறளின் பழைய உரைகளுக்கும் செவ்விய முறையில் அடைவுகளைத் தொகுத்தல் வேண்டும். இவற்றோடு ஒப்புமை அடைவு (Comparative Concordance) ஒன்றையும் தொகுத்தாலன்றி அடைவுப்பணி முற்றுப்பெறுதெனலாம். திருக்குறளுக்கு முன்னும் பின்னும் தோன்றிய இலக்கியங்களில் குறளில் உள்ள சொல்லும், தொடரும், உவமையும், கருத்தும் ஆங்காங்கே காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் தெளிவான வரை

யறையின் அடிப்படையில் தொகுத்து ஒப்புமை அடைவை அமைத்துக் கொள்ள வேண்டும். இவ்வகை அடைவுகள் இன்று வரைத் திருக்குறளுக்குத் தொகுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வில்லை. இப்போது சென்னை நகரிலும் கம்ப்யூட்டர் (Computer) இயங்கி வருவதால் மேற்கூறிய அடைவுகளை எளிதில் தொகுத்து விடலாம். இத்தகைய அடைவுகளின் துணையோடுமட்டுமே திருக்குறளின் மூலபாட அறுதியீடு, உரைத்தெளிவு, காலவரை யறை, கருத்துக்களின் செல்வாக்கு ஆகியவற்றைச் சரியாக ஆராய்ந்து முடிவுசெய்ய இயலும்.

திருக்குறள் தொடர்பாக இதுவரை நடந்தேறியுள்ள ஆராய்ச் சிகள், வெளிவந்துள்ள நூல்கள், மொழிபெயர்ப்புக்கள், கட்டு ரைகள் ஆகியவையெல்லாம் உள்ளடங்கிய நூலடங்கல் (Biblio-graphy) ஒன்றை வெளியிடுதல் அடுத்த முன்னேற்பாடாகும். இந் நூலடங்கலில் நூலின் பெயர், ஆசிரியர் அல்லது பதிப்பா சிரியரின் பெயர், பதிப்பு விபரம், நூற் பொருள் விளக்கம் (Annota-tion) முதலியவை முறையுற இடம் பெற்றிருக்கவேண்டும். திருக் குறள் தொடர்பான குறிப்புக்களைப் பல்வேறு ஆசிரியர்களும் தத்தம் நூற்களில் கையாண்டுள்ளனர். தமிழல்லாத பிறமொழி களிலும் குறளாராய்ச்சி நடைபெற்றுள்ளது. எனவே இத்தகைய செய்திகளனைத்தையும் உள்ளடக்கிய நூலடங்கலாக அதனை அமைத்துக்கொள்வது விரும்பத்தக்கது.

திருவள்ளுவரின் வரலாற்றுக் குறிப்புக்களைத் தொகுப்பது இறுதி முன்னேற்பாடாகும். திருவள்ளுவரைப் பற்றிய செவிவழிச் செய்கள், தனிப்பாடற் சான்றுகள் ஆகியவற்றோடு அவர் காலத்தில் வாழ்ந்த மற்றைய தமிழ்ப் புலவர்களின் வரலாறுகள், அவர் தம் இலக்கியப் படைப்புக்கள் ஆகியவற்றையும் விரிவான முறையில் இப்பகுதியில் ஆராயவேண்டும். இதுகாறும் குறிப் பிட்ட முன்னேற்பாடுகள் மூன்றையும் பின்வரும் வரைபடம் தெளிவாக விளக்கும்.


முன்னேற்பாடுகள்
திருத்தப்பதிப்பு
நூலடங்கல்
வரலாற்றுச் சான்றுகள்
முதற்சான்று
துணைச்சான்று
தமிழ்
பிறமொழி
திருவள்ளுவர்
சமகாலப்புலவர்கள்
ஏடுகள்
கடிதப்பிரதிகள்
மொழி பெயர்ப்புக்கள்
மேற்கோள்கள்
உரைகள்
அடைவுகள்
சொல் அடைவு
தொடர் அடைவு
சிறுவாக்கிய அடைவு
பெருவாக்கிய அடைவு
பொருள் அடைவு
ஒப்புமை அடைவு

அடிப்படை முன்னேற்பாடுகளை முறையாகத் திரட்டிவிட்டால் திருக்குறள் ஆராய்ச்சியை எளிதாகத் துவக்கிவிட முடியும். அகநிலை, புறநிலையென முன்னர் வகைசெய்துகொண்ட ஆய்வுகளையும், அவற்றின் உட்பிரிவுகளையும் ஆராயும் முறைபற்றிக் கொஞ்சம் தெளிவாக இங்கு விளக்கவேண்டும். அகநிலை ஆய்வை 1. நூல் விளக்கம் 2. பொருளமைப்பு 3. இலக்கணம் 4. மொழிநடை 5. செய்யுளிலக்கணம் 6. உள்ளொற்றுமை ஆய்வு 7. இலக்கிய நயம் 8. வரலாற்றுச் சான்றுகள் என்று எட்டு வகையாகப் பாகுபாடு செய்து கொள்ளலாம்.

நூல் விளக்கம்

திருக்குறளுக்குத் தோன்றியுள்ள பழைய உரைகள் அனைத்தையும் கற்றறிந்து அவற்றிற் காணப்படும் வேறுபாடுகளை உணர்ந்து கொள்ளவேண்டும். பழைய உரைகள் பலவிடங்களில் புரியாமல் இருக்கும் உண்மையை நாம் நெடுநாள் மறைத்து வைக்க இயலாது. குறளின் மூலப்பாடத் தெளிவின்மை இதற்கு ஒரு காரணமாகலாம். பழைய உரையாசிரியர்களுக்கு முன்னோடியாக அமைந்த நூற்களின் மறைவு மற்றொரு காரணமாதல் கூடும். தம்மை அறியாமலும் உரையாசிரியர்கள் சிற்சில தவறுகளைச் செய்திருக்க வாய்ப்புண்டு. எனவே பழைய உரைகளைத் தெளிவாக ஆராய்ந்து அவற்றுள் விளங்கும் பகுதிகள், விளங்காப் பகுதிகள், தவறிய பகுதிகள் ஆகியவற்றைப் பாகுபடுத்தியறிந்து கொள்ளவேண்டும்.

இது போலவே தற்கால உரைகளையும் நுணுகி ஆராய வேண்டும். இன்றைய அரசியல், சமுதாய நோக்கங்களைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ள இவ்வுரைகட்கு நிலையான செல்வாக்கு ஏற்படாது. மரபுமுறை உரைகளைப் போல இலக்கிய நயத்தோடு இவை அமையாவிட்டாலும் அரிய செய்திகள் சில வேனும் இவற்றுள் காணக்கூடும். ஆகவே தற்கால உரைகளையும் முறையாகத் தொகுத்து ஆராய்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்வதில் தயக்கம் தேவையில்லை.

அறிவாராய்ச்சியில் ஒருவரையொருவர் காரணங்காட்டி மறுப்பது ஆய்வுலக நியதி. ஆராய்ச்சியிற் காணப்படும் உண்மை

யான குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுதல் ஒரு ஆய்வாளர் மற்ற வருக்குச் செய்யும் அறிவுத்தொண்டாகும். திறமான ஆய்வாளர்க்கு இத்தகைய அஞ்சா நோக்கும் இருத்தல் வேண்டும். எதையும் எதிர்பார்த்துச் செய்யும் ஆராய்ச்சி இரண்டாந் தரமானது; அது விரைவில் புறக்கணிக்கப் படுதலைத் தமிழுலகம் நன்கறியும். கண்ணியமுள்ள மறுப்பு மறுப்பாளரின் பெருந்தன்மையைக் காட்டும். கண்ணியக் குறைவுள்ள சொல்லாட்சியால் மறுப்புரையின் சிறப்புக்கூறுகளும் பொலிவிழந்து போவதைத் தமிழறிஞர் அறிவர். எனவே தற்கால உரைகளின் நிறை குறைகளைக் கண்ணியமான நடையில் அஞ்சாமாற் கூறும் மரபை ஆய்வாளர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். இன்றேல் அவர்கள் தம்முடைய கடமைகளை முழுமையாக நிறைவேற்றி விட்டதாகக் கருதிக்கொள்ளமுடியாது.

பொருளமைப்பு

திருவள்ளுவர் என்னென்ன பொருட்கூறுகளைப் பற்றிக் கூறியுள்ளாரென்று அறிவதற்கு உரைவிளக்கம் பெருந்துணை செய்யும். வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினைச்செயல்வகை என்னும் உடன்பாட்டு அமைப்பு — கல்வி, கல்லாமை; செங்கோன்மை, கொடுங்கோன்மை என்னும் எதிர்மறை அமைப்பு — இறைமாட்சி, அமைச்சு, தூது, நாடு, அரண் — என்னும் தொடர்நிலை அமைப்பு முதலியவற்றை நுணுகிநோக்கினல் வள்ளுவத்தின் பொருட்பாகுபாடும், அமைப்பும் தெளிவுபடும். இதனல் பிற அறநூற்களோடு திருக்குறளை ஒப்பிடுதலும், அதன்கண் கூறப்படாத பொருட்கூறுகளை ஆராய்தலும் எளிதில் முடியும்.

இலக்கணம்

திருக்குறளின் மொழியமைப்பு (Language Structure) பற்றிய அறிவு அதன் பல்வேறு ஆராய்ச்சிகட்குத் துணைபுரியுமாதலின் விளக்கமுறை இலக்கணமொன்று (Descriptive Grammar) திருக்குறளுக்கு எழுதப்படவேண்டும். இவ்வகையில் திருக்குறளின் ஒலியிலக்கணம் (Phonology), சொல்லிலக்கணம் (Morphology),

தொடரிலக்கணம் (Syntax) ஆகியவற்றை அ. தாமோதரன் தமது டாக்டர் பட்டத்திற்காக ஆராய்ந்து எழுதியுள்ளமை (1966) குறிப்பிடத்தக்கது. மரபு முறையில் செய்யப்பட்ட வேறுசில இலக்கணங்களும் காணப்படுகின்றன. ஆயினும் திருக்குறளின் பொருளிலக்கணத்தை (Semantics) இதுவரை யாரும் செய்துள்ளதாகத் தெரியவில்லை. குறளாராய்ச்சியில் நடைபெறவேண்டிய இன்றியமையாப் பணிகளுள் அதன் பொருளிலக்கணமும் ஒன்றாகும். முன்னர்க் குறிப்பிட்ட பல்வகை அடைவுகள் இப்பிரிவில் நிகழ்த்தப்படும் ஆய்வுகட்கு மிகவும் துணை செய்யும்.

மொழி நடை

திருக்குறளின் இலக்கண அமைப்பு தெளிவானால் வள்ளுவரின் சொல்லாட்சி, தொடராக்கம், நடைநயம் ஆகியவை எளிதாக விளங்கும். திருக்குறளில் தொடர்கள் உருவாக்கப்பட்டுள்ள முறை, சொற்சுருக்க உத்திகள் கையாளப்பட்டுள்ள வகை, வாக்கியவகைகள் அமைக்கப்பட்டுள்ள திறம், வாக்கியங்கள் யாப்புமுறைக்கேற்ப இயைக்கப்பட்டுள்ள நெறி, பொருட்செறிவிற்கியைய உவமைகளும் அணிகளும் இழைக்கப்பட்டுள்ள பாங்கு ஆகியவை ஆராயப்படவேண்டும். வள்ளுவர் எத்தகைய சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்; ஓசையினிமைக்கு அவை எவ்வகையில் உதவி செய்கின்றன; அச்சொற்களில் எவ்வகை இலக்கண வேறுபாடுகள் காணப்படுகின்றன என்பவையும் இப்பகுதியில் ஆராய்தல் நலம் பயக்கும்.

செய்யுளிலக்கணம்

குறள் வெண்பாக்களின் செய்யுளமைப்பில் காணப்படும் நிறை குறைகளும், பயிற்சியில் உள்ள பல்வேறு பதிப்புக்களில் பின்பற்றப்பட்டுள்ள சீர்களின் பாகுபாடுகளும் இப்பிரிவில் ஆராயப்படவேண்டும். இவ்வகை ஆய்வு திருக்குறளின் யாப்பிலக்கணத்தை மறுபரிசீலனை செய்து அதன் அமைப்பு முறையை வரையறுப்பதற்கு உதவும். திருக்குறளின் காலத்திற்கு முன்னும் பின்னும் குறள் வெண்பாவினால் இயற்றப்பட்ட நூற்கள் தோன்றியிருப்பினும் அவற்றுள் ஒன்றேனும் குறளோடு ஒப்பக் கருதுமளவு சிறந்தோங்கவில்லை. ஆனால் வள்ளுவரின் வெண்பாக்களோ

யாப்பழகில் இணையிலா வீறுபெற்றுத் திகழ்கின்றன. வெண்பா யாப்பிற்கும் அறவியற் கோட்பாடுகளுக்கும் உள்ள இயைபு இதற்கு ஒரு காரணமாதல் கூடும். பதினெண் கீழ்க்கணக்கு நூற்களில் காணப்படும் அறநூற்களின் பாடல்களுள் பெரும்பகுதி வெண்பாவில் அமைந்துள்ளமை இக்கருத்தை வலியுறுத்தும். எனவே அறவியற் கோட்பாடுகளை விளக்குதற்கு வெண்பாக்கள் எந்த அளவிற்குப் பயன்படுகின்றன; அதனுள்ளும் குறள் வெண்பாக்கள் எந்த அளவு பயன்படுகின்றன என்பதையும் இப் பகுதியில் ஆராயவேண்டும். அப்பொழுதுதான் சங்க இலக்கியங்களில் பேரளவில் பயன்படுத்தப்பட்டுள்ள ஆசிரியப்பாவைக் கையாளாது தமது அறநூலுக்குக் குறட்பாவைத் திருவள்ளுவர் தேர்ந்தெடுத்ததன் உண்மைக் காரணத்தை விளங்கிக் கொள்ள முடியும்.

உள்ளொற்றுமை ஆய்வு

திருக்குறளின் அதிகாரப்பகுப்பும், வைப்பு முறையும் பொருள் தொடர்பை அறிய உதவும். நூற்று முப்பத்து மூன்று என்ற அதிகாரத் தொகை முப்பாலின் பொருள் தெளிவுக்கு எவ்வளவு உதவுகின்றதென்பதை ஆராய வேண்டும். அதிகாரப் பெயர் மாற்றம், குறட்பாக்களின் இடமாற்றம் ஆகியவற்றிற்குரிய காரணங்களைப் பழைய உரையாசிரியர்களின் கருத்துக்களோடு ஒப்பிட்டு முடிவு செய்தல் வேண்டும். அதிகாரமொன்றிற்குப் பத்து என்ற அளவோடு வெண்பா யாப்பில் குறட்பாக்களை அமைத்துள்ளமை உட்பிணைப்புடைய ஓவியம் போலத் தோன்றி நினைவாற்றலுக்கு உதவி செய்கின்றது. எனினும் செயற்கைப் பண்புடைய குறட்பாக்கள் சிலவும் இடையிடையே காணப்படுகின்றன வேறுசில இடங்களில் கூறியதுகூறற் பண்பும் தென்படுகின்றது. இவற்றிற்குப் பதிலாக வேறுசில கருத்துக்களையும் இத்தகைய இடங்களில் கூறியிருக்கலாமேயென்று எண்ணத்தோன்றுகிறது ஆசிரியர்கள் அனைவரும் தொடக்கமுதல் இறுதிவரைக் குறைகூற முடியாத பாக்களையே இயற்றியுள்ளனரென்று கூறவியலாது. உலக இலக்கியங்களில் உயர்ந்த சிகரங்களும் உண்டு; இடையிடையே பெரும் பள்ளத்தாக்குகளும் உண்டு. ஒரு இலக்கியத்தின் இந்த இரு கூறுகளையும் திறனாய்வாளர் பாகுபடுத்தியறிந்து அதன்

பெருமையை அறுதியிடுதல் வழக்காறு. அந்த நோக்கத்தோடு திருக்குறளில் உள்ள அதிகாரங்களின் தொகையும், அமைப்பு, வரிசை முறையும் அதன் இலக்கியத் தரத்தை எந்த அளவு உயர்த்துதற்கு அல்லது குறைப்பதற்குத் துணை செய்துள்ளன என்ற செய்திகளும் இப்பகுதியில் குறிப்பிடப்படவேண்டும்

இலக்கிய நயம்

திருக்குறளின் இலக்கிய நயங்களைப் புலப்படுத்தும் நோக்கில் பல நூற்கள் தோன்றியுள்ளன. ஆனால் வரையறுத்த இலக்கியக் கொள்கையின் அடிப்படையில் இவைகள் உருப்பெற்றுள்ளதாகக் கூற முடியாது. நெடியதொரு இலக்கிய மரபும், பரம்பரையும் இல்லாத மொழியொன்றில் திருக்குறளைப் போன்றதொரு பேரிலக்கியம் தோன்றிவிட முடியாது. எனவே, அத்தகைய இலக்கியப் பரம்பரையின் செல்வாக்கையும் இலக்கியக் கோட்பாட்டு மரபுகளையும் முதற்கண் வரையறை செய்துகொள்ள வேண்டும். அவ்வாறு வரையறுத்துக்கொண்ட இலக்கிய மரபுகள், கொள்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் திருக்குறள் எத்தகைய இலக்கியம்? அதன் பெருமை சிறுமைகள் யாவை? இவ்விலக்கியப் படைப்பில் ஆசிரியர் கண்ட வெற்றி தோல்விகள் எவ்வளவின? என்பவை அறுதியிடப்படவேண்டும்.

மிகக்கடுமையாகக் குறைகாணும் பழக்கமுடையவர்களாலுங்கூட உலக இலக்கிய வரிசையில் திருக்குறளின் இடத்தைப் பெரிதும் மாற்றிவிட முடியாது. அறநெறிகளைக்கூறும் இலக்கியங்களுள் இதற்கொரு சிறப்பிடம் என்றுமுண்டு. ஆனால், அனைத்துக் குறட்பாக்களும் ஒரே தரமான இன்பத்தைப் பயக்கின்றன என்று கூறிக்கொள்ள முடியாது. சில பாக்கள் பழமொழிகளைப் போல நேரடியாகக் கருத்துக்களை மாத்திரம் கூறிச் செல்கின்றன. இத்தகைய பாடல்களில் இலக்கிய நயம் ஓரளவு குறைந்துள்ளதாகவே தோன்றுகிறது. இக்குறைபாடு தரமான உலக இலக்கியங்கள் அனைத்திற்குமுரிய பொதுவிதியென்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளேன். ஒரு இலக்கியத்தின் குறைகளை உணர்ந்து கொள்ளுதல் அதன் இலக்கியச் சுவைவேறுபாடுகளைத் தெளிந்து இன்புறுதற்கு உதவியாக இருக்கும். உயிருள்ள இலக்கிய மொழி

தமிழாதலின் எதிர்காலத்தில் மற்றொரு வள்ளுவன் தோன்றி நிறைவுடைய பாக்களைச் செய்வதற்கு இத்திறனாய்வு தூண்டு கோலாகவும் இருக்கலாம்.

வரலாற்றுச் சான்றுகள்

இலக்கியத் திறனாய்வுக்கு வரலாற்றுச் செய்திகள் மிகவும் துணைசெய்யக் கூடியன. திருக்குறளின் காலத்தை வரையறுத் தற்கு அதன் இலக்கண அமைப்பும், பொருள்நிலையும் ஓரளவு பயன்படும். பிறமொழி நூற்களில் காணப்படும் அறவியற் கருத் துக்களைத் திருக்குறட் கருத்துக்களோடு ஒப்பிட்டு நோக்கும் போதும் இந்த வரலாற்றுச் செய்திகள் உறுதியான சான்றுகளை நல்குமெனலாம். மேற்கூறிய எண்வகைப் பிரிவுகளில் திருக்குற ளின் அகநிலை ஆய்வைப் பாகுபடுத்தி அமைத்துக்கொண்டால் இதன் புறநிலை ஆய்வுகளோடு இவற்றைத் தொடர்புபடுத்திக் கொள்ளுதல் எளிதாக இருக்கும்.

புறநிலை ஆய்வை 1. ஒப்புமை ஆய்வு 2. சமூகவியலாய்வு 3. அரசியலாய்வு 4. அறவியலாய்வு என்று நான்கு பிரிவுகளாகப் பாகுபாடு செய்யலாம். ஒப்புமை ஆய்வை ஒருமொழி ஒப்புமை ஆய்வு, பன்மொழி ஒப்புமை ஆய்வு என இருவகையாகத் துவக்கத்தில் பிரித்துக்கொண்டது நினைவிருக்கலாம்.

ஒப்புமை ஆய்வு

திருக்குறளுக்கு முன்னும் பின்னும் தமிழில் தோன்றிய இலக் கியங்களோடு திருக்குறளில் காணும் சொற்றொடர், கருத்து, உவமை ஆகியவற்றை ஒப்புமை அடைவின் துணை கொண்டு ஒப்புநோக்கி ஆராயவேண்டும். சங்க இலக்கியங்களில் காணப் படாத சில சொற்றொடர்களும், கருத்துக்களும், உவமைகளும் திருக்குறளில் காணப்படலாம். இதுபோலவே திருக்குறளிற் காணப்படாத சில சொற்றொடர்களும், கருத்துக்களும், உவமை களும் சங்க இலக்கியங்களிலும் பிற பதினெண் கீழ்க்கணக்கு நூற்களிலும் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் திரட்டுதல் திருக்குறளின் நடையமைப்பு, கருத்துக்களின் வரலாறு ஆகிய

வற்றைப் பற்றிய திறனாய்வுக்கு மிகவும் பயன்படும். திருக்குறளுக்குப் பின்னரெழுந்த இலக்கிய இலக்கண உரைகளில் திருக்குறளின் சாயல்களும் மேற்கோள்களும் காணப்படுதல் குறளின் செல்வாக்கைப் புலப்படுத்தும். இச்செய்தியைத் "திருக்குறள் மேற்கோள் விளக்கம்" என்னும் இந்த நூல் தெளிவாக வகைசெய்து காட்டுகிறது. இந்த மேற்கோள்களின் அடிப்படையில் எவ்வகை ஆய்வுகளைச் செய்யலாமென்பதும் இந்நூலின் முன்னுரையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இவைபோன்ற செய்திகளையெல்லாம் இப்பிரிவில் ஆராய்தல் வேண்டும்.

வாய்மொழி இலக்கியங்களும் எழுத்துமொழி இலக்கியங்களும் நெருங்கிய தொடர்புடையனவாதலின் குறட் கருத்துக்கள் சிலவற்றிற்கேனும் பழமொழிகள் மூலங்களாக அமைந்திருக்கலாம் இதுபோலவே திருக்குறட் கருத்துக்களிலிருந்தும் பழமொழிகள் சில உருப்பெற்றிருக்க வாய்ப்புண்டு. இக்கருத்தை மனதிற்கொண்டு ஆராயும் பொழுதுதான் குறட்பாக்கள் சில பழமொழிகள் போல அமைந்திருப்பதன் உண்மை விளங்கும்

பன்மொழி ஒப்புமை தகுதியுடையவர்களால் மேற்கொள்ளப் படவேண்டியதொரு பணியாகும். சமஸ்கிருதம், பிராகிருதம், பாலி முதலிய மொழிகளின் இலக்கியங்களுக்கும் திருக்குறளுக்கும் உள்ள பொருத்தங்களைப் பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி, எஸ். வையாபுரிப் பிள்ளை முதலியோர் எடுத்துக்காட்டியதோடு அக்குறிப்புக்களைத் தங்கள் ஆராய்ச்சியிலும் பயன்படுத்தியுள்ளனர். இவற்றுள் பல கருத்துக்கள் ஒருசாராரால் மறுக்கப்பட்டுள்ளன எனினும் ஒப்புமைப் பகுதிகளனைத்தும் அறிவியல் முறைப்படி இதுவரை இருதரப்பினராலும் ஆராயப்படவில்லை. மேலும் சுபாஷிதம்போன்ற பிற்கால சமஸ்கிருத இலக்கியங்களிலும், தமிழகத்தில் உருவான சமஸ்கிருதப் படைப்புக்களிலும் திருக்குறளின் கருத்துக்கள் காணப்படுவதாக வடமொழி வல்லுநர்கள் ஊகிக்கின்றனர். இவையெல்லாம் திருக்குறளின் காலவரையறைக்கும், கருத்து வளர்ச்சிக்கும் நல்ல குறிப்புக்களை வழங்கக்கூடும். எனவே தமிழையும் சமஸ்கிருதம், பாலி முதலிய மொழிகளையும் நன்கறிந்த ஆய்வாளர்களிடம் மட்டுமே இப்பன்மொழி ஒப்புமைப்பணி ஒப்படைக்கப்படுதல் விரும்பத்தக்கது.

திருக்குறளை ஒத்த விவிலிய வேதம், திருக்குர்ஆன், பழைய சீன இலக்கியங்கள் ஆகியவற்றையும் ஆராய்ந்து ஒப்புமைப் பகுதிகளைத் தெரிந்துகொண்டால் திருக்குறளை அனைத்துலகும் போற்றுதற்குரிய அடிப்படைக் காரணம் தெளிவாகும். இவ்வாறு ஒப்பிட்டாராயும் போது கருத்துக்களின் அசற்பண்பும் நகற்பண்பும் புலப்பட வாய்ப்புண்டு. உலகப் பொது மறைகளை ஒப்பு நோக்குவது போலவே குறளுக்கு எழுந்த மொழிபெயர்ப்புக்களும் ஒப்புநோக்கப்படவேண்டும். ஏறத்தாழ இருபது மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவைகளை மூலத்தோடு ஒப்பிட்டு, மொழிபெயர்ப்பால் மூலக் கருத்துக்கள் அடையும் மாற்றங்களைத் தெளிவுபடுத்த வேண்டும். இந்த ஆராய்ச்சி மொழிபெயர்ப்பாளர்கட்கு மட்டுமின்றித் திருக்குறள் ஆய்வாளர்கட்குத் துணைசெய்யக் கூடியதாகும்.

சமூகவியலாய்வு

திருக்குறளின் பொருள் விளக்கத்திற்குச் சமூகவியல் பேருதவி புரியும். தமிழர்களின் சமுதாய வரலாறு, சமய வரலாறு, குடும்ப அமைப்பு, பொருளாதார நிலை, தொழில் முறை, விழா வகைகள் ஆகியவற்றை ஆராய்ந்தால் குறட்பாக்களின் பொருள் விளக்கம் மேலும் சிறக்குமென்பது ஒருதலை. வள்ளுவர் காலத்து மக்கள் தொகை, அவர்களின் அகவாழ்க்கை நெறி, தலைவன், தலைவி தோழி, பாங்கன், களவு, கற்பு போன்ற அகவாழ்வுவின் அமைப்புமுறை, மக்களின் கல்விமுறை, ஆகிய துறைகளில் சிலர் ஆராய்ந்துள்ளமை கருதத்தக்கது. இவைகளனைத்தும் சமூகவியல், மானிடவியல் அடிப்படைகளில் நன்கு ஆராயப்பட்டால் திருக்குறளின் உண்மைப் பொருள் மென்மேலும் விளக்கமுறும்.

அரசியலாய்வு


சமூகவியலோடு தொடர்புடையது அரசியலாய்வு. வள்ளுவர் காலத்திற்கு முன்பு நிலவிய அரசியல் கொள்கைகளைச் சங்க இலக்கியங்களின் அடிப்படையிலும் வள்ளுவர் காலத்தில் நிலவிய அரசியல் கொள்கைகளைத் திருக்குறளைக் கொண்டும் வரையறை

செய்துகொள்ளவேண்டும். அவ்வாறு வரையறுத்துக்கொண்டால் பொருட்பாலில் உள்ள அதிகாரங்கள் பலவற்றைத் தெளிவாக விளங்கிக்கொள்ள இயலும்.

அறவியலாய்வு

இறுதியாகவுள்ள அறவியலாய்வை விரிவாகச் செய்தல் வேண்டும். வள்ளுவத்திற்கு முன்பு தமிழகத்தில் வழங்கிய அறக் கோட்பாடுகள், வள்ளுவத்திற்குப் பின்னரெழுந்த அறக்கொள்கைகள், தத்துவ விளக்கங்கள், திருக்குறளில் கூறப்பட்டுள்ள அறவியற் கொள்கைகள் ஆகியவற்றைத் தெளிவாக முறைப் படுத்திக் கொள்ளவேண்டும். இம் மூன்று பகுதிகளிலும் அறக் கருத்துக்களின் வளர்ச்சி எவ்வாறு அமைந்துள்ளது? இவற்றின் அறவியற் கோட்பாடுகளில் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகள் யாவை? என்பவையும் ஆராயப்படவேண்டும். அறவியற் கருத்துக்களின் வளர்ச்சியில் சமயங்களின் செல்வாக்கு என்ன? சமயங்களின் தோற்ற வளர்ச்சிகளில் மேற்கூறிய மூவேறு அறக் கொள்கைகளின் பங்கு என்ன? என்பவையும் நடுநிலையில் முடிவு செய்யப்படவேண்டும் அதன்பின்னர் பி. வி. காணே தொகுத்துள்ள 'தர்ம சாஸ்திரங்களின் வரலாறு' என்ற நூலோடு ஒப்பிட்டுத் திருக்குறளின் தனித்தன்மையை உலகுக்கு எடுத்துக் காட்டி நிலைநிறுத்த வேண்டும். இங்குக் குறிப்பிட்ட திருக்குறள் ஆய்வுமுறைகளைப் பின்வரும் (பக். xvi)வரைபடத்தில் காணலாம்.

மேலே கூறிய ஆய்வுமுறைகள் ஒன்றையொன்று தழுவிச் செல்வன. சிலவற்றை ஓரிருவர் செய்யக்கூடும்; பலர் பல ஆண்டுகள் உழைத்து நிறைவேற்றவேண்டிய குழுப் பணிகளும் இவற்றுள் சில உண்டு. இங்கு நான் குறிப்பிட்டுள்ள பிரிவுகளின் கீழ் திருக்குறளின் ஆய்வுநெறிகள் அனைத்தும் அடங்கி முடிவு பெற்று விடுமெனக் கருதிவிடக்கூடாது. ஆராய்ச்சியில் ஈடுபடுவோர் வேறுபல புதிய துறைகளில் ஆய்வு நிகழ்த்தும் தேவையை அவ்வப்போது உணரக்கூடும். இத்தகைய விரிவான திருக்குறள் ஆய்வுகட்கும் அவற்றின் முடிவுகளை வெளியிடுதற்கும் தேவைப் படும் பொருட்செலவு கணிசமானதென்பது உண்மைதான். ஆனால் தமிழ்வாழுமட்டும் வாழக்கூடிய பேரிலக்கியமாகிய


திருக்குறள் ஆராய்ச்சி
நூல் விளக்கம்
பொருள் அமைப்பு
இலக்கண அமைப்பு
மொழி நடை
செய்யுள் இலக்கணம்
உள்ளொற்றுமை ஆய்வு
இலக்கிய நயம்
வரலாற்றுச் சான்றுகள்
ஒப்புமை ஆய்வு
சமூகவியல் ஆய்வு
அரசியல் ஆய்வு
அறவியல் ஆய்வு
தமிழ்
வாய்மொழி
பிறமொழிகள்
ஒப்புமை
மொழிபெயர்ப்பு

திருக்குறளுக்கு இத்தகைய ஆராய்ச்சிகளைச் செவ்வையாகச் செய்யவில்லையென்றால் அந்நூலின் ஏற்றத்திற்கு நாம் முயல வில்லையென்ற குற்றச்சாட்டிற்கு ஆளாகிவிடுவோம்.

சொற்சுருக்கத்தை வற்புறுத்திய வள்ளுவத்திற்கு நீண்ட ,தொரு அணிந்துரை எழுத நேர்ந்ததேயென்ற தயக்கமும் உண்டு. ஆனால் நான்காண்டுகட்கு முன்னர் "திருக்குறள் மேற்கோள் விளக்கம்" பற்றிய தனது திட்டத்தை என்னிடம் கூறிய அ. தாமோதரன் அப்பணியைத் திறம்பட நிறைவேற்றிக் காண்பித்த பூரிப்பால் இத்தகு நீண்ட அணிந்துரையை எழுதிவிட்டேன். இந்த மேற்கோள் விளக்கம் திருக்குறள் ஆய்வுகட்குரிய அடிப்படை முன்னேற்பாட்டுப் பணிகளுள் ஒன்று என்பதைத் தமிழுலகம் நன்குணரும்; இதன் அருமையறிந்து பயன்படுத்திக் கொள்ளுதல் கற்றறிந்தார் கடனாகும்.

திருவனந்தபுரம்
29-10-70

இன்னணம்
வி. ஐ. சுப்பிரமணியம்

முன்னுரை

...(திருக்குறள்) "எல்லா இலக்கண விதிகளுக்கும் மேற்கோளாய்க் கையாளப்பட்டு வந்தது. பல உருவங்களில் பல நூல்களில் இரண்டாயிரம் ஆண்டுகளாய்க் குறளின் சொல்லும் பொருளும் புகுந்து விளங்கின. எமக்குத் தெரிந்த வரையில் உலகில் எந்த நூலும் இவ்விதச் செல்வாக்கோடு கையாளப்பட்டதில்லை."[1]

— டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார்.

கேரளப் பல்கலைக்கழகத்தில் திருக்குறளின் மொழியமைப்பைப்பற்றி டாக்டர் பட்டத்திற்காக நான்காண்டுகள் (1962–'66) ஆராய்ச்சி செய்த எனக்குத் தமிழ் எம். ஏ. வகுப்பிற்குத் திருக்குறளைப் பாடம் நடத்தும் வாய்ப்பு கிடைத்தது. இதனால் திருக்குறளைப் பல்வேறு கோணங்களில் திரும்பத் திரும்பப் படிக்கும் கட்டாயத் தேவை எனக்கு ஏற்பட்டது. ஒவ்வொரு முறை படிக்கும்பொழுதும் ஒவ்வொரு பதிப்பு என்ற திட்டத்தில் படிக்கத் தொடங்கினேன். ஒரே சமயத்தில் திருக்குறள் பதிப்புக்கள் பலவற்றை வேறுபட்ட நோக்கங்களுடன் பயன்படுத்தியதனால் அப்பதிப்புக்களை ஒப்பு நோக்கும் பெரு விழைவு எழுந்தது. இவ்வகை ஒப்பியல் முறைக்கல்வி பதிப்புக்களின் மதிப்பீட்டுணர்வை என்னுள் தோற்றுவித்தது.

மதிப்பீட்டுப் பணிக்கு முன்னேற்பாடாகப் பயிற்சியில் உள்ள திருக்குறள் பதிப்புக்களின் நிறை குறைகளை ஆராய்ந்து தெரிவுசெய்யும் நிலை அமைந்தது. இதன் விளைவாகத் திருக்குறள் பரிமேலழகர் உரை (வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யர் பதிப்பு) திருக்குறள் உரைவளம் (ச. தண்டபாணி தேசிகர்) திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு (கி. வா. ஜெகந்நாதன்) ஆகிய மூன்று பதிப்புக்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டேன்.[2] இப் பதிப்புக்களில் காணப்படும் பொதுக் குறைபாடுகளைப் புறக் கணித்துவிட்டு இவைகளில் காணக்கூடிய பதிப்பு நலன்களை (Editorial merits) மட்டும் சிறப்பாகக் கவனிக்கத் தொடங் கினேன். பழைய உரையாசிரியர்கள் தங்கள் இலக்கிய இலக்கண உரைகளில் திருக்குறட் பாக்களை மேற்கோள்களாக எடுத்தாண் டிருந்தவற்றுள் சிலவற்றை இப்பதிப்புக்கள் எடுத்துக்காட்டி யிருந்தன. பயனுள்ள இந்த மேற்கோள் விளக்கப் பகுதி மேலே சுட்டிய மூன்று பதிப்புக்களுக்கும் பொதுவாக அமைந்திருந்த பதிப்பு நலன்களுள் ஒன்றாகத் திகழ்ந்தது. எனவே திருக்குறளின் மேற்கோளாட்சியை எடுத்துக்காட்டும் பகுதியில் மட்டும் இந்தப் பதிப்புக்களின் தரநிலையை ஒப்பிட வேண்டியதாயிற்று.

பரிமேலழகரின் உரை விளக்கம் ஒன்றையே முழு நோக்கா கக் கொண்டது வை. மு. கோ பதிப்பு இதனால் மிகக் குறை வான மேற்கோள் விளக்கக் குறிப்புக்களையே இப்பதிப்பு எடுத்துக் காட்டியிருந்தது. இத்துறையில் ஏறத்தாழ ஆயிரம் மேற்கோள் களை உரைவளப் பதிப்பு தொகுத்துக் காட்டியிருந்தமை குறிப் பிடற்குரிய செய்தியாகும். ஆனால் இந்த இரண்டு பதிப்புக்களுக் கும் பின்னர் பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து செயற்பட்டு வெளியிடப் பெற்ற ஆராய்ச்சிப் பதிப்பு மேற்கோள் விளக்கப் பகுதியில் அத்துணை மேம்பாடுறவில்லை. அனைத்துப் பதிப்புக் களுக்கும் பின்னர் ஆராய்ச்சி நோக்கோடு வெளியிடப்பட்ட இப்பதிப்பு ஏனைய இரு பதிப்புக்களையும் விட ஒவ்வொரு துறை யிலும் சிறப்பாக அமைந்திருக்க வேண்டும். ஆனால் நூறு இடங் களில் மாத்திரம் எடுத்தாளப் பெற்றிருந்த திருக்குறள் மேற்கோள் குறிப்புக்களையே இப்பதிப்பு எடுத்துக் காட்டியிருந்தது வியப்பிற் குரியதாயிற்று. எனவே திருக்குறள் மேற்கோளாட்சியை எடுத்

துக் காட்டியதில் மட்டும் இப்பதிப்புக்கள் மூன்றையும் ஒப்பு நோக்கி மதிப்பிட்ட பொழுது கீழ்க்கண்ட செய்திகள் புலனாயின.

(அ) திருக்குறள் மேற்கோள் விளக்கப் பகுதிகளை எந்தவொரு பதிப்பும் முழுமையாகத் தொகுத்துத் தரவில்லை.

(ஆ) மூன்று பதிப்புக்களும் எடுத்துக்காட்டிய மேற்கோள் பகுதிகளை ஒருசேரத் தொகுத்து நோக்கினும் திருக்குறளின் மேற்கோளாட்சி நிறைவு பெறவில்லை. அதாவது இப்பதிப்புக்களில் எடுத்துக் காட்டப் பெறாத திருக்குறள் மேற்கோட் பகுதிகள் பழைய உரைகளில் பேரளவில் எஞ்சி நின்றன; எண்ணற்ற விடுபாடுகள் புலப்பட்டன.

(இ) மேற்கோள் விளக்கத் தொகுப்பிற்குரிய அமைப்பு முறை உத்திகள் இப்பதிப்புக்களில் போதிய அளவு பின்பற்றப் படவில்லை.

(ஈ) பதிப்புக்கள் ஒன்றையொன்று நன்கு பயன்படுத்திக் கொள்ளவில்லை. விளங்கக் கூறினால் வை. மு. கோ. பதிப்பை இரண்டாவது பதிப்பாகிய உரைவளப் பதிப்பும், மூன்றாவதாக வெளிவந்த ஆராய்ச்சிப் பதிப்பு முதலிரு பதிப்புக்களையும் முழுமையாக இத்துறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லையெனலாம்.

திருக்குறள் மேற்கோளாட்சித் துறையில் மேலே சுட்டிய குறைபாடுகள் புலப்பட்ட சமயத்தில் ''தொல்காப்பியப் பொருளதிகார மேற்கோளகராதி முதலியன'' என்ற நூலொன்றைக் காணும் வாய்ப்பு கிடைத்தது.[3] இதனைப் போன்றதொரு மேற்கோள் விளக்க அடைவு திருக்குறளுக்கும் தேவையென்ற உணர்வினை இந்நூல் வளர்த்தது. இத்தகைய ஆர்வ மேலீட்டினால் காலம் கிடைத்த போதெல்லாம் இலக்கிய இலக்கணங்களிலும் அவற்றின் உரைகளிலும் எடுத்தாளப்பட்டிருந்த குறட்பாக்களைத் தொகுத்து வந்தேன். அன்றைய நிலையில் பொருளதிகார மேற்கோளகராதியே முன்மாதிரியாக அமைந்ததெனலாம். இச்சமயத்தில் (1965) கோலார் தங்கவயலிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த ''குறள் மலர்'' என்ற திங்களிதழின் ஆசிரியர் குறட்பாக்களுக்குரிய மேற்கோள் பகுதி, ஒப்புமைப் பகுதி ஆகியவற்றைத்

தொகுத்துத் தருமாறு கேட்டுக் கொண்டார்.[4] சுய முயற்சியில் செய்துவந்த தொகுப்புப் பணிக்கு இந்த வெளியீட்டு வேண்டுகோள் தூண்டுகோலாக அமைந்தது. முயற்சியில் ஈடுபாடு பெருகித் தொகுப்புப் பணி வளரத் தொடங்கியது. திருக்குறள் மேற்கோள் விளக்கமென்னும் இந்நூல் இதன் விளைவேயாகும்.

இந்த நூற்கண் மேற்கோளாட்சித் துறைக்குப் பயன்படும் உத்திமுறைகள் சில கையாளப்பட்டிருப்பதை இதன் அமைப்பு முறை புலப்படுத்தும். நூலைப் பயன்படுத்துவோர் எளிதில் புரிந்து கொள்ளுமாறு இந்த அமைப்பு முறையை விளக்குதல் இன்றியமையாததாகும். மேற்கோளடைவு, மேற்கோள் விளக்கம், பிற்சேர்க்கை என்ற மூன்று பிரிவுகளை உடையது இந்நூல். இவை ஒவ்வொன்றின் அமைப்பையும் தனித்தனியே சிறிது விளக்கமாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

முதற்கண் அமைந்துள்ள மேற்கோளடைவுப்பகுதி ஏழு பத்திகளாகப் பிரிக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. மேற்கோள்களாக எடுத்தாளப்பெற்ற குறட்பாக்களின் தொடரெண்கள் முதற் பத்தியில் கொடுக்கப்பட்டுள்ளன. திருக்குறளின் உரையாசிரியர்களுக்கேற்ப குறட்பாக்களின் தொடரெண்கள் மாறுபட்டிருப்பதால் பெருவழக்குடைய பரிமேலழகர் உரையைப் பின்பற்றி எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மேற்கோளாட்சி பெறாத குறட்பாக்கள் குறிப்பிடுமளவு காணப்படுவதால் தொடரெண்கள் இடையிடையே விடுபட்டிருக்குமென்பதை நினைவிற் கொள்ளல் நல்லது. மேற்கோளாட்சி பெற்ற குறட்பாக்களையும் மேற்கோளாட்சி பெறாத குறட்பாக்களையும் விளக்கும் பட்டியல்கள் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

மேற்கோளாட்சிபெற்ற குறட்பாக்கள் இரண்டாம் பத்தியில் அமைக்கப்பட்டுள்ளன. குறட்பாக்கள் முழு நிலையிலும் குறைப் பகுதியாகவும் பழைய உரையாசிரியர்களால் எடுத்தாளப் படுகின்றன. இந்த வேறுபாடு புலப்படுமாறு ஒரு வகைக் குறியீடு செய்யப்பெற்றுள்ளது. இதன்படி முழுநிலையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள குறட்பாக்களின் முதற் குறிப்புக்கள் மூன்று புள்ளிகளோடு அகர முதல... என்பது போலத் தரப்பட்டுள்ளன.

குறைப்பகுதி மேற்கோள்கள் அவை எடுத்தாளப்பெற்ற அளவிலேயே மாற்றமின்றிக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆதலின் இவைகட்குக் குறியீடு தேவைப்படவில்லை. எனவே மூன்று புள்ளிகளைப் பெற்ற மேற்கோள்கள் முழுக்குறள் மேற்கோள்கள்; புள்ளிக் குறியீடு பெறுதவை குறைப்பகுதி மேற்கோள்களாகும். இந்த இருவகை மேற்கோள்களுக்கும் மூலபாடம், சீர்ப்பிரிவு ஆகியவை பரிமேலழகருரையை அடியொற்றி அமைக்கப்பட்டுள்ளன. இதனால் மேற்கோள்கள் அமைந்துள்ள நூல்களில் காணப்படும் திருக்குறள் மூலபாடத்திற்கும், சீர்ப்பிரிவிற்கும் மேற்கோளடைவில் கொடுக்கப்பட்டுள்ள மூலபாடத்திற்கும், சீர்பிரிவிற்கும் வேறுபாடுகள் காணப்படும். குழப்பத்தைக் குறைப்பதற்கு இந்த மாற்றம் தவிர்க்கவியலாத ஒன்றாகும். இதன் விளைவாகத் திருக்குறள் மேற்கோள்களில் நிகழ்ந்துள்ள எண்ணற்ற பாடவேறுபாடுகள் இங்குக்குறிக்கப் பெறவில்லையென்பது நினைவிற்கொள்ள வேண்டியதொரு செய்தி. திருக்குறள் பாடவேறுபாடுகள் தனித்து ஆராயப்படும் தகுதியுடையவை என்பதே இதற்குரிய சிறப்புக் காரணமாகும்

ஒரு இடத்திற்குமேல் எடுத்தாளப்பெற்ற குறட்பக்கள் எடுத்தாண்ட ஆசிரியர்களின் காலமுறை அடிப்படையில் வரிசைப்படுத்தப்பெற்றுள்ளன. காட்டாக ‘‘யாதனின் யாதனின்’’ என்று தொடங்கும் குறட்பா (341) ஆசிரியர் ஐவரால் ஐந்து முறை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. எனவே, இளம்பூரணர், மயிலைநாதர், நச்சினார்க்கினியர், சுப்பிரமணிய தீட்சிதர், இராமானுஜ கவிராயர் என்ற ஆசிரியர்களின் காலமுறையை அடியொற்றி இந்த மேற்கோள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இதுபோலவே ஒரே நூலில் பல முறை எடுத்தாளப்பட்டுள்ள குறட்பாவின் வரிசைமுறை, ஒரே ஆசிரியரால் பல நூல்களில் எழுத்தாளப்பட்டுள்ள குறட்பாவின் வரிசைமுறை ஆகியவையும் இயன்றவரை முரணின்றி அமைக்கப்பட்டுள்ளமையை நூல் முழுதும் காணலாம். எடுத்தாண்டோர் காலமுறை வைப்பு என்ற பிற்சேர்க்கை இதுபற்றியெழும் ஐயங்களைத் தீர்த்துக் கொள்ள உதவும்.

திருக்குறட் பாக்களை எடுத்துக் காட்டிய ஆசிரியர்களின் பெயர்களைக் குறிக்கக்கூடிய முதற் குறிப்புக்கள் மூன்றுவது

பத்தியில் அமைக்கப்பட்டுள்ளன. பெயர் அறியப்படாத ஆசிரியர்களைக் குறிப்பதற்கு வினாக்குறி பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகையினால் களவியற் காரிகை உரைகாரர், சிதம்பரப்பாட்டியல் உரைகாரர், தண்டியலங்கார உரைகாரர், திருக்குறள் பழைய உரைகாரர், தொல்காப்பியச் சொல்லதிகாரப் பழைய உரைகாரர் நன்னூல் பழைய உரைகாரர், நேமிநாத உரைகாரர், யாப்பருங் கல விருத்திகாரர் ஆகிய பெயர் தெரியாத ஒன்பது உரையாசிரியர்கட்கும் வினாக்குறி கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்துள்ள நான் காவது பத்தியில் அமைந்திருக்கும் நூற்பெயர்களின் முதற் குறிப்புக்கள் இவற்றைத் தெளிவாக வேறுபடுத்தி அறிய உதவும்.

திருக்குறள் மேற்கோள்கள் அமைந்துள்ள நூற்பா அல்லது செய்யுட்களின் தொடரெண்கள் ஐந்தாவது பத்தியில் கொடுக்கப் பட்டுள்ளன. சிலப்பதிகாரம், பரிபாடல் போன்ற நெடும்பாடல் களுக்கு வரியெண்களும் கொடுக்கப்பட்டுள்ளமை கவனத்திற் குரியது. இலக்கண விளக்கச் சூறாவளியில் வரும் மேற்கோள் களுக்கு இலக்கண விளக்க நூற்பாக்களின் தொடரெண்கள் கொடுக்கப்பட்டுள்ளமை மனங்கொளற்குரிய செய்தியாகும். திருக்குறள் உரைகளில் அதிகாரத் தோற்றுவாய்களிலும் குறட் பாக்கள் எடுத்தாளப் பெற்றுள்ளன. இத்தகைய மேற்கோள்களுக் குரிய அதிகார எண்கள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன. நூற்பா, செய்யுள், நெடும்பாடல்களின் வரி ஆகியவற்றின் தொட ரெண்களிலிருந்து அதிகார எண்களை வேறுபடுத்தி அறிய இவ் வடைப்புக்குறி பயன்படும். பாயிரங்களின் உரைப்பகுதிகளில் வரும் மேற்கோள்களுக்கு மட்டும் எண்களுக்குப் பதிலாக முதற் குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. காரணம் பாயிரங்கட்குப் பொது வாகத் தொடரெண் தரும் வழக்காறின்மையே யாகும். இவ்விதி பதிகத்திற்கும் பொருந்தும்.

திருக்குறள் மேற்கோள்கள் அமைந்துள்ள நூற்பா முதலிய வற்றின் முதற் குறிப்புக்கள் அடுத்துள்ள ஆறும் பத்தியில் கொடுக்கப்பட்டுள்ளன. இதற்கு விதி விலக்காகவுள்ள திருக் குறளின் அதிகாரத் தலைப்புக்கள் தடித்த எழுத்தில் அமைக்கப் பட்டுள்ளன. பாடல்களின் முதற் குறிப்புக்களினின்று இவற்றை வேறுபடுத்திக் கொள்ள இம்முறை உதவும். இலக்கண நூல்களில்

நூற்பாக்களின் தொகை வேறுபாடு, நூற்பாக்களின் இடப் பிறழ்ச்சி, இயல்களின் வைப்பு முறை மாற்றம் ஆகியன உரை ஆசிரியர்களிடையே காணப்படுகின்றன. இவற்றால் நூற்பா முதலியவற்றின் தொடரெண்களோடு அவற்றிற்குரிய முதற் குறிப்புக்களும் பயன் கருதிக் கொடுக்கப்பட்டுள்ளன.

மேற்கோளடைவை மேற்கோள் விளக்கத்தோடு இயைத் துப்பார்க்க உதவும் குறியீடுகளாக ஆங்கில எழுத்துக்கள் இறுதிப் பத்தியில் தரப்பட்டுள்ளன. இக்குறியீடுகளின் பொருள் விளக்க மதிப்பு பொதுவானதன்று; அந்தந்தக் குறட்பாவிற்கு மட்டுமே உரியதாகும். காட்டாக முதலிரு குறட்பாக்களிலும் 2 என்ற குறி யீடு உண்டு. ஆனால், அதன் பொருள்விளக்கம் வேறுபட்டதாகும். அதன்படி முதற் குறளில் உள்ள 2 என்ற குறியீடு இடையாகு எது கையை விளக்குவதற்கு இப்பாடல் எடுத்துக் காட்டப்பட்ட தென்ற செய்தியைக் குறிப்பதாகும். இரண்டாவது குறளில் உள்ள 2 என்னும் குறியீடு செவிப்புலன் ஒன்றையே கருவியாகக் கொண்டு ஓசையூட்டினால் அளபெடை இருப்பினும் இல்லை எனினும் ஓசை இனிதாகுமென்ற கருத்தை விளக்க இப்பாடல் எடுத்தாளப்பட்டதென்ற செய்தியைக் குறிக்கும். எனவே, குறி யீடுகளைப் பொறுத்தவரை இந்த வேறுபாடு இறுதிவரை நினைவில் நிற்க வேண்டிய குறிப்பாகும்.

இனி ஒரு குறள் ஒரே பொருளை விளக்குதற்காகப் பலவிடங் களில் எடுத்தாளப்பட்டிருக்கலாம். வேறொரு குறள் ஒரே பொருள் விளக்கத்திற்கு ஒரேயொரு இடத்தில் எடுத்தாளப்பட்டிருக் கலாம். இந்த இருவகை மேற்கோள்களுக்குமுள்ள வேறுபாடு புலப்படும் வண்ணம் முதல் வகைக்கு வழக்கமாகத் தரும் 2 என்ற குறியீடும் இரண்டாம் வகைக்கு $ என்ற குறியீடும் தரப்பட்டுள் ளன. உதாரணமாக ''வினைபகையென்னும்'' குறள் (674) என்றென்னும் இடைச்சொல் ஓரிடத்தில் நின்று பொருள் தோறும் பிரிந்து சென்றியைதலை விளக்குவதற்காக எட்டு இடங் களில் எடுத்தாளப்பட்டுள்ளது. எனவே இப்பாடல் 2 என்ற குறியீட்டைப் பெறுகிறது. ஆனால் ''சூழ்ச்சி முடிவு'' என்னும் குறள் (671) துணிவு உயிர்க் குணங்களுள் ஒன்றென்பதை விளக்க ஒரே முறைதான் எடுத்தாளப்பட்டுள்ளது. இதனால்

இது $ என்ற குறியீட்டைப் பெறுகிறது. இக்குறியீட்டு வேறு பாட்டினால் வேறொரு பெரும் பயனுமுண்டு. மேற்கோளடைவு, மேற்கோள் விளக்கம் ஆகியவற்றைத் தனித்தனியே பயன்படுத்தும் பொழுதும் $ என்ற குறியீடு கண்ணிற் பட்டவுடனேயே இக் குறள் அல்லது இவ்விளக்கத்திற்குரிய குறட்பா ஒரேமுறைதான் எடுத்தாளப்பெற்றுள்ளது என்ற செய்தி தெற்றென விளங்கும்; அடைவுப் பகுதியில் எண்ணிப்பார்க்காமலும் மேற்கோளாட்சி விளக்க அட்டவணையைப் பயன்படுத்தாமலும் எளிதில் முடிவு செய்ய இக்குறியீடு போதுமானதல்லவா?

அடைவுப்பகுதியை அடுத்திருப்பது மேற்கோள் விளக்கமாகும். குறட்பாக்கள் என்னென்ன பொருண்மைகளை விளக்குவதற்காக உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டப்பெற்றுள்ளன என்பவற்றை அறிந்து கொள்வதற்குரிய கருத்துக்கள் இப் பகுதியில் தொகுத்துக் காட்டப்பெற்றுள்ளன. சுருங்கக்கூறினால் மேற்கோள் விளக்கமென்பது மேற்கோளடைவின் பிற்பகுதியாகும். விளக்கமின்றி அடைவு முற்றுப்பெறாதெனலாம். எனவே ஏழுபத்திகளாக அமைந்துள்ள மேற்கோளடைவையும் மேற்கோள் விளக்கத்தோடு இயைத்துப் படிக்க வேண்டிய வாய்பாட்டு முறைக்கு உதாரணந் தருதல் வேண்டற்பாலதே.

முழுப்பாடல் மேற்கோள்களுக்கு

எழுநூற்றெண்பத்தேழாவதாகிய அழிவினவைநீக்கி என்று தொடங்கும் குறட்பா முழுப்பாடலாக இளம்பூரணரால் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் எழுபத்தைந்தாவதாகிய கூதிர் வேனிலெனத் தொடங்கும் நூற்பாவின் உரையில் பொருளொடு புணர்ந்த பக்கத்துள் நட்பு என்பதை விளக்குதற்கு மேற்கோள் செய்யப்பட்டுள்ளதென்று விரித்துப் படித்துக்கொள்ளவேண்டும்.

குறைப் பகுதி மேற்கோள்களுக்காயின்

ஆயிரத்திரண்டாவது குறட்பாவின் பொருளானும் எல்லாமென் றீயா திவறுமென்னும் குறைப்பகுதி தெய்வச் சிலையாரால் தொல்காப்பியச் சொல்லதி காரத்தின்

> முந்நூற்றுத் தொண்ணூற்று இரண்டாவதாகிய அன்ன பிறவுங் கிளந்தவெனத் தொடங்கும் நூற்பாவின் உரையில் இவறென்னும் உரிச்சொல் உலோபமென்னும் பொருளில் வந்தமையை விளக்குதற்கு மேற்கோள் செய்யப்பட்டுள்ளதென்று

விரித்துப் படித்துக் கொள்ள வேண்டும். ஆகவே மேற்கோள் விளக்கத்தை அடைவோடு இயைத்துப்பயன்படுத்தும் முறையில் சிக்கல் எழ வழியில்லை.

மேற்கோள்களின் விளக்கக் கருத்துக்களைத் தொகுக்கும் பொழுது ஒரு பொது விதி கடைப்பிடிக்கப் பட்டுள்ளமையைக் குறிப்பிட்டாக வேண்டும். விளக்கக் குறிப்புக்களின் தனித் தன்மை குறையாமல் இயன்றவரை அவை பொதுத்தன்மை பெறும் வகையில் அமைத்துள்ளதே யாகும். பொதுமைப் படுத்தல் கூறியது கூறலைக் குறைக்க உதவும். ஆனால் தனித்தன்மை செய்திகளின் சிறப்பியல்புகளைப் புலப்படுத்த உதவும். எனவே கூறியது கூறலின்றியும் செய்திகளின் தனித்தன்மை கெடாமலும் அமைவதற்கு அளவான பொதுமைப்பாடு தேவைப்படுகிறது. இந்த அளவுக்கு மட்டுமே மேற்கோள் விளக்கக் குறிப்புக்கள் பொதுமைப்படுத்தப் பெற்றுள்ளன. இதனை விளக்குதற்கு முதற் குறளே சான்றாக அமைகிறது. முதற்குறளைக் குறைப் பகுதியாகச் சுவாமிநாத தேசிகர், சங்கர நமச்சிவாயர், வீரமாமுனிவர் ஆகிய மூவரும் எடுத்துக் காட்டியுள்ளனர். இரு சொற்களும் வடமொழியாய் வந்த பண்புத் தொகை, பண்புத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத் தொகை ஆகியவற்றை விளக்க இம்மூவரும் முறையே எடுத்தாண்டுள்ளனர். இந்த மூன்று விளக்கங்களுக்கும் பொதுவாக இருக்குமாறு பண்புத்தொகையை விளக்குவதற்கு இவ் ஆசிரியர் மூவரும் எடுத்தாண்டுள்ளதாகக் குறிப்பிடலாம். இதனால் மூன்றுமுறை திருப்பித் திருப்பி வெவ்வேறு குறியீடுகளோடு எழுதும் இரட்டிப்புப்பணி குறையுமென்பதும் உண்மையே. ஆனால் விளக்கக் குறிப்புக்களின் தனிப்பண்பும், எடுத்தாண்ட ஆசிரியர்களின் சிறப்பியல்புகளும் குறைந்துவிடும். எனவே இப்பகுதியில் மேற்கொண்டுள்ள இப்பொதுவிதியை நினைவுகூர்தல் தேவையற்ற ஐயப்பாடுகளைப் போக்கிக் கொள்ள உதவும். விளக்கத்தைப்

பற்றிக் குறிப்பிட வேண்டிய வேறொரு செய்தி வடமொழித் தொடர்களைப் பற்றியதாகும். தெளிவாகத் தெரிந்த வடமொழித் தொடர்கள் தமிழாக்கப் பட்டுள்ளன; ஏனையவை உரையாசிரியர் களின் மொழியிலேயே கொடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு குறளுக்கும் தனித்தனி அமைந்துள்ள அடைவு, விளக்கமென்ற இரண்டினையும் குறுக்கக் குறியீட்டு முறையில் திருப்பித் திருப்பிப் பார்க்கும் அமைப்புமுறை சிறிது தொல்லை யாகத் தோன்றக் கூடும். இதனால் ஒவ்வொரு குறட்பாவிற்கு முரிய அடைவையும், விளக்கத்தையும் வெவ்வேறாகப் பிரிக்கா மல் ஒருங்கிணைத்து அமைக்கும் முறை சிறந்ததாகவும் தோன்ற லாம். ஆனால் அடைவு முறைக் கோட்பாடுகளைக் கருத்திற் கொண்டு சிந்திப்போர்க்கு அடைவும் விளக்கமும் வெவ்வேறாக அமைக்கப்பட்டுள்ள தொகுப்பு முறையின் மேம்பாடு விளங்காமற் போகாது. எனினும் இம்முறையினால் ஏற்படக்கூடிய ஒரு சில நன்மைகளைச் சுட்டுதல் மேற்கொண்டுள்ள அமைப்பின் அடிப் படை நோக்கங்களை அறிந்துகொள்ள ஏதுவாகும்.

(அ) மேற்கோளடைவினையும், மேற்கோள் விளக்கத்தி னையும் தனித்தனியே பயன்படுத்தி ஆராய்தற்கு இந்த முறை நன்குதவும்.

(ஆ) மேற்கோள்களின் வடிவநிலை, பொருண்மை நிலை ஆகிய இரு அடிப்படைகளிலும் அவற்றை வகைமை செய்தற்கு இம் முறையே சிறந்ததாகும்.

(இ) எடுத்துக்கொண்ட பொருளுக்கேற்ப மேற்கோள் அகராதிக்கு முதன்மை கொடுத்து முதற்பகுதியாக வைத்து இதற்குத் துணை செய்யும் விளக்கத்தைப் பிற்பகுதியாக வைத் துள்ள அமைப்பு முறை பதிப்பழகிற்குத் துணை செய்யக் கூடிய தென்பதும் குறிப்பிடத்தக்கது.

இனி இறுதியில் உள்ள பிற்சேர்க்கைகளே விளக்கப்பட வேண்டியவையாகும். மேற்கோளாட்சி விளக்க முதற் குறிப்ப கராதி, மேற்கோளாட்சி பெறாத செய்யுட்களின் முதற் குறிப்ப கராதி, மேற்கோள் அமையப்பெற்ற பாக்களின் முதற் குறிப்ப

கராதி, மேற்கோள் காட்டிய ஆசிரியர்களும் குறட்பாக்களும், மேற்கோள் காட்டிய ஆசிரியர்களும் ஆகரங்களும், மேற்கோளாட்சியும் திருக்குறள் அதிகாரங்களும், பால் இயல் அதிகார வகை மேற்கோளாட்சி, மேற்கோள் விளக்கப் பாகுபாடு, மேற்கோள் காட்டிய ஆசிரியர்கள், எடுத்தாண்டோர் காலமுறை வைப்பு, பயன் படுத்திய நூல்கள் என்பவை பிற்சேர்க்கைகளாகத் தரப்பட்டுள்ளன. மேற்கோள் அடைவிற்கும், விளக்கத்திற்கும் இந்தப் பிற்சேர்க்கைகள் எவ்வெவ்வகைகளில் உதவுமென்பது கூருமலே விளங்கும். தேவையான அளவு குறியீட்டு விளக்கங்கள் ஆங்காங்கே கொடுக்கப்பட்டுள்ளன. ஆகவே அட்டவணைகளைப் பயன்படுத்தும் முறையைப்பற்றி விளக்குதல் தேவையில்லை. ஆனால் அட்டவணைகளால் உண்டாகும் சில பொது நன்மைகளைக் குறிப்பிடுதல் அவற்றின் தேவையை உணர்ந்துகொள்ளப் பயன்படும்.

அட்டவணைகள் உண்மைகளைப் படம் பிடித்துக் காட்டும் அமைப்புடையன. இந்த அமைப்பு கற்போரின் புலனுணர்வைத் தூண்டிக் கிளர்ச்சிபெற வைக்கும். இதனால் செய்திகளைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் மிகும்; கருத்துக்கள் எளிதில் தெளிவாகும்.

ஆராய்ச்சியில் பயன்படுத்தியுள்ள அடிப்படை அமைப்பு முறையை (System) அட்டவணைகள் தெற்றெனப் புலப்படுத்தக் கூடியன. இதனால் ஆராய்ச்சி முடிபுகள் விரைவில் விளங்கும். முடிபுகளில் நேர்ந்துள்ள அளவியல் முரண்பாடுகளையும் இவை எடுத்துக் காட்டும். இவ்வாறு முடிபுகளின் நிறை குறைகளைப் பரிசோதனை செய்வதில் அட்டவணைகள் தலைசிறந்த கருவிகளாக அமையும்.

மேலும் இறுதி முடிபுகளை எளிதில் நினைவில் நிறுத்திக் கொள்வதற்கு அட்டவணைகள் பேருதவி புரியக் கூடியன. இதனால் இந்த முடிபுகளோடு தொடர்புடைய பல்வேறு துறைகளில் சிந்திப்பதற்கு இவை வழிகோலும். இவ்வகைச் சிந்தனைகள் விரிவான வெவ்வேறு ஆராய்ச்சிகட்கு வகை செய்யுமல்லவா ?

நூலின் அமைப்பு முறை விளக்கம் நூலைப் பயன் படுத்துவதற்கு உதவுதல் போல நூலின் கருத்தெல்லை (Purview) விளக்கம் அதன் விதிமுறை வரையறைகளையும் அளவையும் அறிந்து கொள்ள உதவும் இதனால் பிற மேற்கோள் விளக்கத் தொகுப்பு

களினின்று இந்நூல் எவ்வகையில் வேறுபட்டுள்ள தென்பதையும் அதற்குரிய அடிப்படைக் காரணங்களையும் உணரவியலும்.

மேற்கோள் விளக்கம் பொதுவாக மூன்றுவகைகளில் அமைய வாய்ப்புண்டு. ஒருநூலின் பாடற்பகுதிகள் பிற இலக்கிய இலக்கணங்களிலும், அவற்றின் உரைகளிலும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளமையைத் தொகுத்தலென்பது முதலாவது வகையாகும். உதாரணமாகத் திருக்குறள் பாடல்கள் எந்தெந்த நூல்களில், உரைகளில் எடுத்தாளப்பட்டுள்ளன என்று தொகுத்துத் தருதலைக் குறிப்பிடலாம். இதற்கு எதிர் மாருக அமைவது இரண்டாவது முறையாகும். அதாவது ஒரு நூலின் கண்ணும் உரையின்கண்ணும் எவ்வெந் நூற்பகுதிகள் மேற்கோள் களாக அமைந்துள்ளனவென்று தொகுத்தலாகும். உதாரண மாக இலக்கண விளக்கத்திலும், அதன் உரையிலும் எடுத்துக் காட்டப் பட்டுள்ள மேற்கோள்களைத் தொகுத்துச் சுட்ட லாம். மூன்ருவது வகையென்பது முதலிருவகைகளையும் இணைத்து ஒன்ருக அமைப்பதாகும். அதாவது திருக்குறள் மேற்கோளாட்சி பிற நூல்களிலும், அவற்றின் உரைகளிலும் பயின்று வந்துள் ளமையையும், திருக்குறளின் கண்ணும் அதன் உரைகளிலும் பிற நூல்களின்-உரைகளின் மேற்கோளாட்சி பயின்று வந்துள் ளமையையும் ஒருசேரத் தொகுத்து வகை செய்தலாகும். இவற் றுள் மூன்ருவது வகையே சிறந்தது; திருக்குறளைப் போன்ற செல்வாக்குடைய நூலுக்கு ஏற்றது. ஆனால் இப்பணி ஒரு குழு வின்ரால் செய்யப்படவேண்டிய அளவு விரிவுடையதாகும். ஆகவே இங்கு முதல்வகை மேற்கோள் விளக்க அமைப்பே பின் பற்றப்பட்டுள்ளது. இந்த அமைப்பிலும் இது முழுமையுற்ற நூலன்று. இதற்குரிய காரணங்களைச் சிறிது விளக்கமாகக் குறிப்பிடுதல் நல்லது.

தமிழ் இலக்கியத்தில் திருக்குறள் ஒரு ஞான விளக்கம். இந்த ஞானத் திருவிளக்கின் பேரொளியில்தான் தமிழர்களின் அறவியல் (Ethical) இலக்கியத்தின் சகாப்தம் தொடங்குகிறது. அறக்கோட்பாடுகளின் பெருங்கோவையாகத் திருக்குறள் அமைந்திருப்பினும் இதன் இலக்கியப் பண்புகள் சிறப்பிற்குரியன வாகவே கருதப்படுகின்றன. இதனுல் புலவர்களின் புலமை

யளவுக்கு இந்தப் பேரேடு எல்லையாக அமைந்ததில் வியப்பில்லை. ஆகவே, புலவர் பெருமக்கள் திருக்குறள்மாட்டுக் கொண்டிருந்த ஈடுபாடு, புலமைத்திறம் ஆகியவற்றைப் புலப்படுத்து முகத்தான் தாம் இயற்றிய நூல்களிலும் உரைகளிலும் குறட்பாக்களைப் பேரளவில் எடுத்தாண்டனர். இவ்வாறு எடுத்தாளப்பட்ட திருக்குறள் மேற்கோள்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

திருக்குறளின் கருத்தாழம், செல்வாக்கு முதலியவற்றில் ஈடுபட்ட நூலாசிரியர்கள் தாமியற்றிய நூல்களில் குறளை ஏற்ற வகையில் எடுத்துக்காட்டுதல் ஒருவகையாகும். இம்முறையைத் துவக்கி வைத்த பெருமை இரட்டைக் காப்பிய ஆசிரியர்களாகிய இளங்கோவடிகளுக்கும், சீத்தலைச்சாத்தனாருக்கும் உரியதாகும். இவர்கள் வழியில் அருங்கலச்செப்பு, ஏரெழுபது, கம்பராமாயணம், சீவகசிந்தாமணி, சூளாமணி, திருக்கைலாய ஞான உலா, நீதிநெறிவிளக்கம், பிரபுலிங்கலீலை, வளையாபதி முதலிய நூல்களின் ஆசிரியர்களும் திருக்குறளின் சொல்லையும், தொடரையும், பொருளையும் பலவிடங்களில் எடுத்தாண்டுள்ளனர்.

இலக்கண இலக்கிய மரபுகளின் விளக்கத்திற்குரிய எடுத்துக்காட்டுக்களாக உரையாசிரியர்கள் தம்முடைய உரைகளில் மேற்கோள் காட்டுதல் இரண்டாவது முறையாகும். அகநானூறு, ஐங்குறுநூறு, புறநானூறு ஆகிய சங்க இலக்கியங்களின் குறிப்புரைகள், திருக்குறள், நாலடியார் தவிர்ந்த பிற பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுக்குக் காணப்படும் பொழிப்புரைகள் ஆகியவற்றைத் தவிரப் பிற இலக்கியங்களுக்கு உரையெழுதிய உரையாசிரியர்களில் பெரும் பகுதியினர் திருக்குறளை மேற்கோள் காட்டியுள்ளனர். தமிழ்நெறி விளக்கம், நவநீதப் பாட்டியல், வரையறுத்த பாட்டியல் வெண்பாப் பாட்டியல் போன்ற ஒரு சில இலக்கண நூல்களின் குறிப்புரைகள் நீங்கப்பிற இலக்கண உரைகளிலெல்லாம் திருக்குறள் மிகுதியாக எடுத்தாளப்பட்டுள்ள தெனலாம்.

திரட்டு நூல்களில் எடுத்து இணைக்கப்படுதல் மூன்றாவது வகையாகும். இவ்வகைத் திரட்டு நூல்கள் சங்கத்தொகை நூல்களின்று வேறுபட்டவையாகும். பல்வேறு கோட்பாட்டுக் குழுக்

களின் கருத்துக்களுள் நல்லனவற்றையெல்லாம் தேர்ந்தெடுத்துத் தொகுக்கும் முறையில் (Ecpec Ficism) அமைந்தவை இத்தொகை நூல்கள். இதற்குத் தக்க சான்று புறத்திரட்டாகும். இத்தகைய திரட்டு நூல்களிலும் திறக்குறட்பாக்கள் மிகுதியாக எடுத்தாளப் பட்டுள்ளன.

முதுமொழி வெண்பா நூல்களுள் எடுத்தாளப்படுதல் நான்காவது முறையாகும். மறைநூலாகவே கருதப்பட்ட திருக்குறளின் அதிகாரங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு புராணக் கதையை உதாரணங்காட்டி அதனை முடித்தற்கு ஒரொரு குறட்பாவை இறுதியில் அமைத்துப் புலவர்கள் சிலர் நூல்கள் இயற்றுவாராயினர். வேறுசிலர் அனைத்துக் குறட்பாக்களுக்கும் ஏற்ற சரிதக் குறிப்புக்களை இம்முறையில் இணைத்து நூல்கள் இயற்றுவாராயினர். இவ்வகை முதுமொழி வெண்பாக்கள் திருக்குறளுக்கு மட்டுமே அமைந்துள்ள சிறப்பு நூல்களாகும். குறளின் கருத்து விளக்கத்திற்குப் பயன்படும் கவிதை நடை உரைகளென்றே இவற்றைச் சொல்லலாம். இத்தகு நூல்களாக இரங்கேச வெண்பா, சினேந்திரவெண்பா, சிவசிவவெண்பா, சோமேசர் முதுமொழிவெண்பா, திருக்குறட் குமரேசவெண்பா, திருத்தொண்டர் மாலை, திருப்புல்லாணிமாலை, திருமலைவெண்பா, தினகரவெண்பா, பழையவிருத்த நூலொன்று, முதுமொழிமேல் வைப்பு, வடமலைவெண்பா, வள்ளுவர்நேரிசை என்னும் பதினொன்கு நூல்கள் தெரியவருகின்றன.[5] இந்நூல்களில் எடுத்தாளப்படாத குறட்பாக்களே இல்லையெனலாம்.

நூற்றுண்டுதோறும் மேற்குறித்த நான்கு வகைகளில் ஆயிரக்கணக்கான இடங்களில் எடுத்தாளப்பட்டிருக்கும் திருக்குறள் மேற்கோள்கள் அனைத்தையும் தொகுத்து விடுதலென்பது தனி மனித சக்திக்கு அப்பாற்பட்டதாகும்; பலர் கூடிச் செய்ய வேண்டிய குழுப்பணியாகும். ஆகவே குறிப்பிட்ட கால எல்லைக்குட்பட்ட ஏதாவது ஒருவகை மேற்கோள்களைத் தொகுத்தலென்பதே நடைமுறைக்கு ஏற்றதாகும். இத்தகைய அடிப்படையில் உரையாசிரியர்கள் எடுத்தாண்டுள்ள மேற்கோள்களே இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. இவ்வகை மேற்கோள்களும் கிடைக்கக்கூடிய அனைத்துரைகளிலிருந்தும் தொகுக்கப்படவில்லை.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, ஐம் பெருங்காப்பியங்கள் ஆகிய இலக்கிய உரைகளில் எடுத்தாளப் பட்டுள்ள மேற்கோள்களும், தொல்காப்பியம் முதல் முத்துவீரியம் வரையுள்ள இலக்கண உரைகளில் காணப்படும் மேற்கோள் களுமே இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. இலக்கிய உரைகளை விட இலக்கண உரைகளில் மேற்கோள்களின் இன்றியமையாமை மிகுதியாதலின் இலக்கண உரைகள் மாத்திரம் கால அடிப்படை கடந்து சேர்த்துக்கொள்ளப்பட்டன. மேலும் இலக்கண உரைகள் முழுதும் சோதிக்கப் பெற்றுத் திருக்குறள் மேற்கோள்கள் தொகுக் கப்பட்டுவிட்டமையால் இதன்கண் சிக்கலெழ வழியில்லை. அன்றியும் இந்தத் தொகுப்பிற்குப் பயன்படுத்தப்பட்ட இலக்கிய இலக்கண உரைகளின் பட்டியலொன்றும் இறுதியில் கொடுக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே சிலப்பதிகாரம், மணி மேகலை போன்ற மூலநூல்கள், புறத்திரட்டு போன்ற திரட்டு நூல்கள், தினகர வெண்பா போன்ற முதுமொழி வெண்பாக்கள், ஐம்பெருங்காப்பியங்களுக்குப் பிற்பட்ட நீலகேசி, தக்கயாகப் பரணி போன்ற நூல்களின் பழைய உரைகள் ஆகியவற்றில் காணப்படும் திருக்குறள் மேற்கோள்கள் இத்தொகுப்பில் இடம் பெறவில்லையென்பதை மறந்துவிடக் கூடாது.

வகுத்துக் கொண்ட காலப் பிரிவில் அடங்கிய மூலநூல் களிற் காணப்படும் திருக்குறள் மேற்கோள்கள் இங்குச் சேர்க்கப் பெறுமைக்குச் சில காரணங்கள் உண்டு. இவற்றைக் கொஞ்சம் விரிவாக விளக்க வேண்டும். தமிழ் இலக்கியங்களில் ஒப்புமைப் பகுதிகள் நிறைய உள்ளன. இவற்றை எல்லாம் நல்லமுறையில் ஆராய்ந்தாலன்றி எந்தப் பகுதி எந்தநூலைச் சார்ந்தது என்று உறுதியாகக் கூற முடியாது. உதாரணமாகக் ''கானங்கோழிக் கவர் குரற் சேவல்'' என்ற வரி குறுந்தொகை (244-1) மலைபடு கடாம் (510) ஆகிய நூல்களில் காணப்படுகிறது. ''குறுங்கை இரும்புலிக் கோள்வ லேற்றை'' என்ற வரி ஐங்குறுநூற்றிலும் (216-1), குறுந்தொகையிலும் (141-5), நற்றிணையிலும் (36-1), காணப்படுகிறது. ''தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்'' என்ற வரி அகநானூற்றிலும் (54-11) மணிமேகலையிலும் (5-73) காணப்படுகிறது. இவற்றுள் முதல் இரண்டு வரிகளின் மூலநிலை (origin) பற்றி உறுதியாக ஒன்றும் கூறமுடியாது. ஆனால்

மூன்றாவது வரியைப்பற்றிச் சிலர் முடிவுகூற முயலலாம். அகநானூறு மணிமேகலையைவிடக் காலத்தால் முந்திய தென்பதால் மணிமேகலை ஆசிரியர் அகநானூற்றைப் பார்த்து எழுதியிருக்கலாம்; அல்லது அவ்வரியை மேற்கோளாக எடுத்தாண்டிருக்கலாம்; என்று கூறக்கூடும். ஆனால் இந்தமுடிவும் நூற்றுக்கு நூறு சரியான தெனக்கூற முடியாது இதற்கு இரு காரணங்களைச் சுட்டலாம். அகநானூற்றை மணிமேகலை ஆசிரியர் பார்த்துப் பயன்படுத்தினாரென உறுதிப்படுத்தும் சான்று இல்லாமை ஒன்று. இந்த இரு ஆசிரியர் கட்குமே பொதுவான வேறொரு மூலம் இருத்தற்கும் வாய்ப்புண்டென்பது மற்றொன்றாகும். ஆகவே தெளிவான மேற்கோள் செய்தது என்பதைவிட ஒரே இலக்கியப் பரம்பரையில் வளர்ந்த புலவர்களின் உள்ளங்களில் தனித்தனியே தோன்றிய கருத்துக்கள் என்பது உண்மையாதலும் கூடும். ''காமக் கடும்புனல்'' ''தண்ணந்துறைவன்'' போன்ற சில மரபுத் தொடர்கள் அனைத்து இலக்கியங்களுக்கும் பொதுவான மூலமாக அமைந்து காலந்தோறும் மாற்றமின்றித் திரும்பத் திரும்பக் கையாளப்படுதல் இதற்கொரு சான்றாகும். எனவே இவைபோன்ற மூலநூல் ஒப்புமைப்பகுதிகளை விழிப்புணர்வோடு ஆராய்ந்து முடிவு செய்தலே பண்பட்ட ஆராய்ச்சியாகும். இத்தகைய காரணங்களால் சங்க இலக்கியங்கள், திருக்குறள் தவிர்ந்த ஏனைய பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், ஐம்பெரும் காப்பியங்கள் இலக்கண நூல்கள், ஆகியவற்றின் மூலங்களில் காணப்பெறும் திருக்குறள் ஒப்புமைப்பகுதிகள், மேற்கோள்கள் ஆகியவையும் இத்தொகுப்பில் விலக்கப்பட்டுள்ளனவென்பது குறிப்பிடத்தக்கது; உளங்கொளற்குரியது.

மேலே சுட்டிய பதிப்புகள் மூன்றும் காலவரையறை, பொருள் வரையறை முதலிய யாதொரு அடிப்படைத் திட்டமும் இல்லாமல் கிடைத்த மேற்கோள்களையெல்லாம் வெளியிடுவது என்ற நோக்கோடு மேற்கோட் பகுதிகளைத் தொகுத்துள்ளன. ஆகையால் அப்பதிப்புக்களில் தொகுக்கப்பட்டுள்ள மேற்கோள்கள் சில இத்தொகுப்பில் காணப்படமாட்டா. அத்தகைய மேற்கோளுக்குரிய நூல்களாகக் கம்பராமாயண முதற்பாடல் சங்கோத்தர விருத்தி, சிவஞான சித்தியார் சுபக்கவுரை, சிவஞான போதச் சிற்றுரை, சிவஞான மாபாடியம், தக்கயாகப்பரணி

உரை, தஞ்சைவாணன் கோவையுரை, திருக்கோவையார் உரை, நீலகேசி உரை, முத்திநிச்சயப் பேருரை என்பன வற்றைக் குறிப்பிடலாம். இவைகள் இத்தொகுப்பின் கால எல்லைக்கு உட்பட்ட இலக்கியங்களுமல்ல; இலக்கண நூல்களும் அல்ல. எனவேதான் மேற்கூறிய உரைகளில் காணப்படும் மேற் கோள்களுள் சில உரைவளப் பதிப்பு, ஆராய்ச்சிப் பதிப்பு ஆகிய வற்றில் கொடுக்கப்பட்டிருப்பதை அறிந்தும் அவை இங்குக் கொடுக்கப்படவில்லை.

இனி உருமாறி உரைநடைவடிவில் அமைந்துள்ள திருக் குறள் மேற்கோள்களைப் பற்றிய ஒரு செய்தியையும் குறித்தாக வேண்டும். சேனாவரையர் முதல் சிவஞான முனிவர் ஈருகப் பல உரையாசிரியர்கள் திருக்குறள் பாடல்களை உரைநடையில் அமைத்து எடுத்தாளுகின்றனர். இவ்வகை உரைநடை மேற் கோள்கள் இத்தொகுப்பில் சேர்க்கப் பெறவில்லை. காரணம் உரை நடை மேற்கோள்களில் சொல்லமைப்பு வேறுபாடும், சொற்களின் இடமாற்றமும் நிகழ்ந்து ஐயப்பாட்டைத் தோற்றுவிப்பதேயாகும். ஆகவேதான் முதற்குறளை இளம்பூரணர், மயிலைநாதர் ஆகியோர் எடுத்தாண்டுள்ளனரென்றும், ''இழிவறிந் துண்பா'' னென்னும் குறளை (946) நச்சினார்க்கினியர் எடுத்தாண்டுள்ளாரென்றும் உரைவளப்பதிப்பு குறிப்பிட்டிருப்பினும் அவை இத்தொகுப்பில் இடம்பெறவில்லையென்பது கருதத்தக்கது. இறுதியாகப் இப்பிரி வில் கூறவேண்டிய செய்தி பதிப்புக்களைப் பற்றியதாகும். இந்த மேற்கோள் தொகுப்பிற்கு இயன்றவரைத் தொண்டுநோக்கோடு உழைத்து வெளியிடப்பட்ட பழம் பதிப்புக்களே பயன்படுத்தப் பட்டுள்ளன. பழம் பதிப்புக்கள் கிடைக்காத நிலையில் ஊதியநோக் கோடு பாடத்திட்ட விற்பனைகருதி வெளியிடப்பட்ட புதிய பதிப் புக்களும் பயன்படுத்தப்பெற்றுள்ளன. இது தொடர்பாக எழும் ஐயங்களை இறுதியில் உள்ள நூல்விவரப் பட்டியல் நீக்கக்கூடும். நூலின் அமைப்பு அதன் எல்லை ஆகியவை பற்றி மேலே கூறிய கருத்துக்களைப் பின்னணியாகக்கொண்டு நூல் நுதலும் பொரு ளைப்பற்றி இனி தொடர்ந்து காணலாம்.

உலகில் வழங்கிவரும் மூவாயிரத்துக்கு மேற்பட்ட மொழி களில் சிலவே இலக்கியவளமும், இலக்கண மரபும் பெற்றுள்

என. இவற்றுள் இலக்கிய இலக்கணக் கோட்பாடுகளை நுணுகி ஆராய்ந்து மனப்பாடமாகும் விதிகளாச் சூத்தரித்துக்கொண்ட மரபு விரல்விட்டு எண்ணும் மொழிகளில்மட்டுமே காணப்படுகிறது. இலக்கிய இலக்கணக் கொள்கைகளைத் தெளிவாக வரையறுத்து முறைபடத் தொகுத்து நுண்ணிய நூற்பாக்களாக அமைத்துக் கொண்ட தொன்மரபு இந்திய மொழிகளில்தான் வெளிப்படக் காணமுடிகிறது. இவற்றுள்ளும் தமிழ், சமஸ்கிருதம் என்ற இரு மொழிகளே இந்த மரபை நினைவுக்கு எட்டாத காலமுதல் வளர்த்துவந்துள்ளன. இவற்றின் உறவு மொழிகளும் இந்த இலக்கண நெறியை ஓரளவு பின்பற்றிப் போற்றியிருக்கின்றன எனலாம். எனினும் தொன்றுதொட்டு இன்றுவரைக் காலந்தோறும் தொடர்ந்து இந்த இலக்கண மரபைப் போற்றி வளர்த்துவரும் தனிப்பெருமை தமிழ்மொழி ஒன்றற்கே உண்டு. எனவேதான் தமிழிலக்கிய வரலாற்றின் தொடக்கம் தொல்காப்பியமென்னும் இலக்கண நூலாக அமைந்துள்ளது; நூற்றுக்கு மேற்பட்ட இலக்கண ஆசிரியர்களைப் பற்றிய குறிப்புக்களைத் தமிழிலக்கிய வரலாற்றில் காணமுடிகிறது; எண்ணற்ற இலக்கண நூற்கள் காலக்கொடுமையால் அழிந்து மறைந்தாலும் முப்பதுக்கு மேற்பட்ட இலக்கண நூற்கள் காலம்வென்று இன்றளவும் வாழ்கின்றன; இவற்றில் காணப்படும் இலக்கண நூற்பாக்கள் மட்டும் எண்ணாயிரத்துக்கு மேற்பட்டுள்ளன. நிகண்டு நூல்களில் காணப்படும் எண்ணற்ற நூற்பாக்கள் இக்கணக்கில் அடங்கவில்லையென்பது இங்குச் சுட்டவேண்டிய செய்தியாகும். தொல்காப்பியத்திற்கு முந்தித்தோன்றி வளர்ந்த இந்த இலக்கணமரபு நூற்றுண்டுதோறும் எழுந்துள்ள இலக்கண நூல்களிலும் அவற்றின் உரைகளிலும் வேரூன்றிச் செழித்துள்ளது. மொழித்துறையில் கம்ப்யூட்டர்களின் செல்வாக்கு பெருகிவரும் இந்த இருபதாம் நூற்றுண்டிலுங்கூட இலக்கண நூல்கள் நூற்பா வடிவில் தமிழ் நெடுமரபின் தொடர்நிலையைப் புலப்படுத்துவதெனலாம்.

இந்த நூற்பா அமைப்புமுறை மொழிநடையில் செறிவும் நுண்மையுமுடைய இலக்கண நூற்கள் தோன்றக் காரணமாயிற்று. செறிவுடைய மூலநூல்களின் தோற்றமும் வளர்ச்சியும் விளக்கவுரைகட்கு வழிவகுத்தன. பதவுரை, பொழிப்புரை, காண்டிகையுரை, விருத்தியுரை, நயவுரை முதலிய பல்வேறு

உரைவகைகளை இன்று நாம் பெற்றிருப்பது இதன் விளைவே யாகும். இவ்வகை உரைகள் மூலநூல்களின் பொருள் தெளிவுக் குப் பெருந்துணை புரிந்த காரணத்தாலேயே நூலாசிரியர்களைப் போல உரையாசிரியர்கட்கும் சிறப்பு ஏற்பட்டது. நூலாசிரியரை உணர உரையாசிரியர் தேவைப்பட்டது போலவே இந்த இரு வகை ஆசிரியர்களையும் உணர்ந்துகொள்ள போதகாசிரியர்கள் தேவைப்பட்டனர். இதுபோன்ற ஆசிரியப் பரம்பரைகள் வளர வளர நூற்களும் உரைகளும் வரையறுக்கப்பெற்றன. தொல்காப் பியம், யாப்பருங்கலம், நன்னூல் முதலியவற்றில் நூலையும் உரை யையும் வரையறுக்கும் நூற்பாக்கள் காணப்படுதல் இதற்குச் சான்றாகும். கோட்பாடுகளின் விளக்கத்திற்கு மூலநூல்களும், மூலநூல்களின் விளக்கத்திற்கு உரைகளும் அமைந்தவாறு உரை களின் முழு விளக்கத்திற்கு மேற்கோள்கள் இன்றியமையாதன வாக அமையலாயின. இதன் வளர்ச்சியே மேற்கோள்களை உரை உறுப்புக்களுள் ஒன்றாக இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ள தன் காரணமாகும்.[6]

நூற்பாக்கள் சொற்செறிவுடையனவாதலின் இலக்கணங் களுக்கு உரைகள் இன்றியமையாதனவாயின. ஆனால் இலக்கிய பாக்களின் மொழிநடை நூற்பாக்களின் நடையைப்போலச் செறி வுடையதன்று. எனவே இலக்கியங்களுக்கு உரைகள் உதவிசெய் யக் கூடியனவேயன்றி இன்றியமையாத் தேவைக்குரியனவாகக் கருதப்படுதலில்லை. இலக்கண உரைகட்கும் இலக்கிய உரை கட்கும் இடையேயுள்ள எண்ணிக்கை வேறுபாடு இக்கருத்தை நன்கு வலியுறுத்தும். கிடைக்கக்கூடியவற்றுள் நான்கைந்தைத் தவிர ஏனைய இலக்கண நூல்கள் அனைத்திற்கும் பழைய உரைகள் காணப்படுகின்றன ஆனால் இலக்கிய நூல்களுக்கு இந்நிலை இல்லை. உரைகளோடு கூடிய இலக்கியங்களைவிட உரைகள் இல்லாத இலக்கியங்களே மிகுதியாகக் காணப்படு கின்றன. இலக்கண இலக்கிய மொழிகளிற் காணப்படும் மொழி நடை வேறுபாடே இந்நிலைமைக்குக் காரணமாகும். மேலும் இலக்கணக் கோட்பாடுகளை எடுத்துக்காட்டுக்களின்றித் தெளிவு படுத்த முடியாது. விஞ்ஞான விளக்கத்திற்குச் செய்முறைப் பயிற்சிகளைப் போல இலக்கண விளக்கத்திற்கு எடுத்துக் காட்டுக் கள் இன்றியமையாதவையாகும். இலக்கிய உரைகளைக் காட்டி

லும் இலக்கண உரைகளில் மேற்கோள்கள் மிகுந்து காணப்படு தற்கு இதுவே காரணமெனலாம். எனவேதான் யாப்பருங்கல விருத்தியில் ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு மேற்கோள் களும், நச்சினார்க்கினியரின் சொல்லதிகார உரையில் நாலாயிரத் துக்கு மேற்பட்ட மேற்கோள்களும், தொல்காப்பியப் பொருளதி கார உரைகளில் ஆறாயிரத்துக்கு மேற்பட்ட மேற்கோள்களும் காணப்படுகின்றன. ஆனால் இலக்கிய உரைகளாகியபுறநானூற்று உரையில் ஐம்பதுக்கும் குறைவான மேற்கோள்களும், பத்துப் பாட்டு உரையில் சுமார் இருநூறு மேற்கோள்களும், திருக்குறள் பரிமேலழகர் உரையில் ஏறத்தாழ முந்நூறு மேற்கோள்களும் எடுத்தாளப் பட்டுள்ளன. இலக்கண இலக்கிய உரைகளில் காணப்படும் மேற்கோள்களின் இந்த எண்ணிக்கை விபரம் மேற் கூறிய கருத்தைத் தெளிவாக நிறுவிக் காட்டும்.

நூற்பாக்களை விளக்க எடுத்துக்காட்டுக்களே போதுமான வையென்ற கருத்தும் ஆசிரியர்களிடையே உண்டு. புறப்பொருள் வெண்பாமாலையின் அமைப்பு இக்கருத்தை வலியுறுத்தும். இதன்கண் புறப்பொருளை விளக்கும் நூற்பாக்களையும், அவற்றிற் குரிய இலக்கிய மேற்கோள் வெண்பாக்களையும், இவற்றிற்குரிய கொளுச் சூத்திரங்களையும் இதன் ஆசிரியர் அமைத்துள்ளார். இலக்கண விளக்கத்திற்கு இலக்கிய மேற்கோள்களே அமையும் என்பது இவ்வாசிரியர் கருத்தாதல்வேண்டும். இவ்வாறு மூல நூல் ஆசிரியரே நூற்பா விளக்கத்திற்குரிய உதாரணங்களை எடுத் துக் காட்டும் மரபினை அமிதசாகரரும் பயன்படுத்தியுள்ளார். யாப்பருங்கலக்காரிகையில் அசைகளைப் பற்றி இவர் கூறும் புறநடைச் சூத்திரம் (37) இதற்கு நல்ல சான்றாகும்.

"விட்டிசைத் தல்லான் முதற்சுட் டனிக்குறி னேரசையென்
றெட்டப் படாததற் குண்ணு னுதாரண மோசைகுன்று
நெட்டள பாய்விடி னேர்நேர் நிரையொடு நேரசையாம்
இட்டத்தி னற்குறில் சேரி இலக்கிய மேர்சிதைவே"

என்றுவரும் இக்காரிகையில் ''உண்ணுன் ஒளிநிறுன்'' என்ற நாலடியார்ப் பாடலையும் (9) ''ஏர் சிதைய'' வெனத்தொடங்கும் பழம்பாடலொன்றையும் இலக்கிய மேற்கோள்களாகக் குறிப்பிட்

டுள்ளமை கருதத்தக்கது. அன்றியும் அமிதசாகரரால் இயற்றப் பட்டுள்ள இலக்கிய முதனிலைப்புக்காரிகைகளும் இச்செய்தியை நன்கு வலியுறுத்தும். இதனை விளக்கவந்த குணசாகரரும் ''மயேச்சுரர் யாப்பே போல உதாரணம் எடுத்தோதி'' என்ற உரைத்தொடரால் (யா. கா. 1) முன் மரபு காட்டித் தெளிவு படுத்தியுள்ளார்.

பிற்காலப் பிரயோக விவேகத்தாரும் இந்நெறியைக் கையாண்டுள்ளமை சுட்டுதற்குரியதாகும். தாம் கைக் கொண்ட இம்மரபிற்கு ஆதாரமாகத் ''தண்டியாசிரியர் மூலோ தாரணம் காட்டினாற்போல யாமும் உரை எழுதியதல்லது மூலோ தாரணமும் காட்டினும்'' என்று (பிரயோ. 3) குறிப்பிடுகிறார். இவர் மூலோதாரணம் காட்டியுள்ளமைக்குச் சான்றாகப் ''பகுதிப் பொருள்விகுதி மாதர்ச் சுவார்த்தம்'' என்ற சூத்திரைப் பகுதி யைக் (44) குறிப்பிடலாம். இவரே ''சந்தோபிசிதமும் காரிகை யும்போல இலக்கிய இலக்கணங்கள் ஒருங்கு தோன்ற மாதர்ச் சுவார்த்தமென்றும்'' என அந்நூற்பாவின் உரையில் இதனைத் தெளிவுபடுத்தியுள்ளார். ஆகவே ஐயனாரிதனார், மயேச்சுரர், அமித சாகரர், தண்டியாசிரியர், சுப்பிரமணிய தீட்சிதர் முத லியோர் மூலவிளக்கத்திற்கு எடுத்துக்காட்டுகளைச் சிறப்பாகக் கருதினரென்பது புலனாகும்.

மூலவிளக்கத்திற்கு உரையை விட எடுத்துக் காட்டுக்களே இன்றியமையாதவையென்று கருதும் மரபும் உரையாசிரியர்களி டையே உண்டெனலாம். உரையாசிரியர்களில் சிலர் இலக்கண நூற்பாக்கள் சிலவற்றிற்கு உரையெழுதாமல் எடுத்துக்காட்டுக் களை மட்டும் எழுதிச் செல்லும் வழக்கம் இக்கருத்தையே உணர்த்துகிறது. இவ்வழக்கத்திற்கு ஏற்ற சான்றுகளைத் தொல் காப்பியச் சொல்லதிகாரப்பழைய உரையிலும், இலக்கணக் கொத்தின் உரையிலும் காணலாம். பெயர் தெரியாத அப் பழைய உரையாசிரியர் சொல்லதிகாரத்தில் 6, 7, 8, 9 என்னும் கிளவி யாக்க நூற்பாக்களுக்கு உரை எழுதவில்லை; எடுத்துக் காட்டுக் கள் மட்டுமே தந்துள்ளார். சுவாமிநாததேசிகரோ தம்முடைய நூலின் பகுதியளவு நூற்பாக்களுக்கு உரை வரையாமல் எடுத்துக் காட்டுக்களை மாத்திரம் கொடுத்துள்ளார். பிற பழைய உரை

ஆசிரியர்களிடத்தும் இவ்வழக்கம் ஆங்காங்கே அருகிக் காணப்படுகிறது. நூற்பாக்களின் பொருள் தெளிவுக்கேற்ற உரை விளக்கமாக உதாரண விளக்கமே அமையுமென்பது இவ்வுரை ஆசிரியர்களின் கருத்தாகலாம்.

உலக வழக்கிலிருந்தும் செய்யுள் வழக்கிலிருந்தும் பெரும் அளவில் உதாரணங்களை எடுத்தாண்ட உரையாசிரியர்கள் சில விடங்களில் "உதாரணம் வந்தவழிக்காண்க" வென்றும் "இதற்கு உதாரணம் இக்காலத்து வீழ்ந்தன" வென்றும் குறிப்பிடக் காண்கிறோம், வேறுசில இடங்களில் இவ்வதிகரம் முழுவதும் கொள்கவென்றும் பதினெண்கீழ்க்கணக்கு இவ்வாறு வந்ததென் றும் எழுதும் மரபும் காணப்படுகிறது. இவையெல்லாம் உதாரணங்களை எடுத்தாளுவதில் உரையாசிரியர்கள் செலுத்திய பெருங்கவனத்தையே காட்டுகின்றன. இவ்வாறு எடுத்துக் காட்டுகளின் தேவையை உணர்ந்து ஏற்றவிடங்களில் இயையும் வகையில் அவைகளை உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டிய காரணத்தினால்தான் மேற்கோள்களின் எண்ணிக்கை பெருந் தொகையாக இருக்கிறது; மூலமும் உரையும் தெளிவாகின்றன. சிற்சில இலக்கியங்களின் மேற்கோளாட்சி பேரளவினதாக இருத் தற்கும் இதுவே காரணமாகும். காட்டாகப் பொருளதிகார உரைகளில் மட்டும் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் கலித் தொகைப்பாடல்கள் எடுத்தாளப்பட்டுள்ளன; குறுந்தொகைப் பாடல்கள் பழைய உரையாசிரியர்களால் ஆயிரத்துக்கு மேற் பட்ட இடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன. ஆனால் திருக் குறளோ இரண்டாயிரத்து ஐந்நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் எடுத்தாளப் பெற்றுள்ளதென்பது கருதத்தக்கது.

இவ்வகை மேற்கோள்கள் தமிழிலக்கிய ஆராய்ச்சியில் சிறப்பிடம் பெறத் தக்கனவாகும். பழந்தமிழ் இலக்கிய இலக்கண நூல்களின் அமைப்புமுறை இதனை நன்கு வலியுறுத்துகிறது. மூல ாடம், உரைப்பகுதி, மேற்கோள்கள் என்ற மூன்றே பெரும் பிரிவுகளில் தமிழ் நூல்கள் அனைத்தையும் பாகுபடுத்திவிட இய லும். நூலாசிரியர்களாலும் உரையாசிரியர்களாலும் இயற்றப் பெறாத பாயிரப் பாடல்களே இப்பிரிவுகளினின்று எஞ்சி நிற்பன. இவைகள் தனித்து ஆராயப்பட வேண்டிய தகுதியுடையன.

ஆகவே நூல்களையும் உரைகளையும் பற்றிய ஆராய்ச்சி முக்கிய மானதாயின் மேற்கோள்களைப் பற்றிய ஆராய்ச்சியும் முக்கியம் வாய்ந்ததென்பதில் மாற்றுக் கருத்துக்கள் இருக்க வழியில்லை.

மேலும் ஆசிரியர்கள் எடுத்தாண்ட மேற்கோள்களைக் கொண்டு பல்வேறு செய்திகள் புலப்படுகின்றன. காட்டாக அடியார்க்கு நல்லாரைப் போன்ற சிலர் தாம் எடுத்துக்காட்டிய மேற்கோள்களுக்குரிய நூலின் பெயரையாவது நூலாசிரியரின் பெயரையாவது புலப்படுத்தும் ஆகரக் குறிப்புக்களை இயன்ற வரைச் சுட்டிச் செல்வர்; பரிமேலழகர் போன்ற சிலரிடம் இவ் வழக்கம் காணப்படுதலில்லை. பெருந்தேவனாரைப் போன்ற சிலர் பெரும்பகுதி மேற்கோள் பாடல்களை முழுமையாக எடுத்தாளுவர்: சுவாமிநாததேசிகரைப் போன்ற சிலர் தமக்கு வேண்டிய பகுதி களைமட்டும் முழுப்பாடல்களிலிருந்து வெட்டிக்குறைத்து மேற் கோள் காட்டுவர். மயிலைநாதரைப் போன்ற சமயச் சார்புடைய மேற்கோள்களையும் எடுத்தாளுவார்; புறநானூற்று உரையாசிரி யரைப்போன்ற சிலர்சமயப் பொதுமையுடைய மேற்கோள்களைக் கையாளுவார். குறுந்தொகை, திருக்குறள் போன்ற சில நூல் களையே பலரும் பலவிடங்களில் எடுத்தாண்டுள்ளனர்; கம்ப ராமாயணம், பெரியபுராணம் போன்ற சிலநூல்களைப் பலரும் எடுத்தாளாமல் புறக்கணித்துள்ளனர். சிலர் பேரிலக்கிய இலக் கண மேற்கோள்களை மிகுதியாகப் பயன்படுத்துவர்; சிலர் தம் காலத்து வழங்கிய தனிப்பாடல்களை மிகுதியாகப் பயன்படுத்து வர். சிலர் உலக வழக்குத் தொடர்களைப் பேரளவில் எடுத்துக் காட்டுவர்; சிலர் செய்யுட்களை மிகுதியாகக் காட்டுவார். இலக்கிய மேற்கோள்களைத் தாமே இயற்றிக் காட்டும் மரபு சிலரிடம் உண்டு; இவ்வழக்கம் பலரிடம் காணப்படுவதில்லை. பழம்பாடல்களை உரைநடையாக்கி எடுத்தாளும் மரபு சில உரை யாசிரியர்களிடம் உண்டு; சிலரிடம் இது காணப்படவில்லை. இலக்கண முடிபுகட்குப் பொருந்தும் வண்ணம் மேற்கோள்களின் மூலபாடத்தைத் திருத்தும் வழக்கம் சிலரிடம் காணப்படுகிறது; பலரிடம் இவ்வழக்கம் இல்லை. சிலர் எடுத்துக்காட்டிய மேற் கோள்களில் பாடபேதங்கள் நிகழ்ந்துள்ளன; சிலருடைய மேற் கோள்களில் இது நிகழ்வதில்லை. பரிமேலழகர் எடுத்துக்காட்டிய வற்றுள் இடம் விளங்கா மேற்கோள்கள் மிகவும் குறைவு; மயிலை

நாதர் உரையில் இடம் விளங்கா மேற்கோள்கள் குறிப்பிடுமளவு காணப்படுகின்றன. ஒரு கருத்தை விளக்க ஓரிரு மேற்கோள்கள் சிலர் உரைகளில் காணப்படும்; ஒரே கருத்திற்குப் பல மேற்கோள்களை அடுக்கிக் காட்டப்பட்டிருத்தலைச் சிலர் உரைகளில் காணலாம். பொருள் தொடர்பும் உரையியையும் உள்ள நூற்பாக்கள் பலவற்றை உடன்வைத்துப் பொருளுரைத்து உதாரணச் சுருக்க முறையைச் சிலர் கையாண்டுள்ளனர்; இத்தகு நூற்பாக்களையும் தனித்தனி வைத்து உரையெழுதி வெவ்வேறு உதாரணங்கள் காட்டப்படுதலுமுண்டு. ஒரு முறை மேற்கோள் காட்டிய பாடலைப் பல்வேறு கருத்துக்களை விளக்குதற்குத் திரும்பத் திரும்பப் பலவிடங்களில் எடுத்தாளும் மரபு சிலரிடம் உண்டு; ஒவ்வொரு கருத்துக்கும் வெவ்வேறு பாடலை எடுத்தாளும் முறையும் சிலரிடம் உண்டு. இவைபோன்ற எண்ணற்ற செய்திகள் மேற்கோளாராய்ச்சியில் தெளிவாக ஆராயப்பட வேண்டும். இவை தெளிவாக ஆராயப்பட்டால் மேற்கோள் காட்டிய ஆசிரியர்களின் உரைப்போக்கு, மேற்கோளாட்சியில் அவர்கள் கைக்கொண்டிருந்த உத்தி முறைகள், மேற்கோள்களின் தன்மை ஆகியவற்றை வரையறுத்துக் கூறவியலும். இவ்வகை ஆராய்ச்சிக்கு அடிப்படை முன்னேற்பாடாக மேற்கோளகராதிகள் முதற்கண் தொகுக்கப்படவேண்டும். ஆயத்தப்பணிகள் நன்முறையில் அமைந்தாலன்றி எந்த ஆராய்ச்சியும் சிறப்பாக அமையும்; திட்டமிட்ட பயனும் விளையும்.

பெருகிவளரும் தமிழாராய்ச்சியின் வரலாற்றில் மேற்கோள் விளக்கம் பற்றிய ஆய்வுகள், அவற்றிற்குரிய முன்னேற்பாட்டுப் பணிகள் ஆகியவை தகுதியான இடத்தைப் பெற்றுள்ளவெனக் கூறமுடியாது. இவற்றின் இன்றியமையாமை தமிழறிஞர்களால் உணரப்படாமலுமில்லை; நன்கு உணரப்பட்டிருந்தது. இதற்குரிய சில குறிப்புகள் பழைய இலக்கண நூல்களிலும் அவற்றின் உரைகளிலும் காணப்படுகின்றன. மேற்கோளாட்சிக்கு உதவக்கூடிய பயனுள்ள முறையொன்றை யாப்பருங்கலக் காரிகையில்தான் முதன்முதல் தெளிவாகக் காணமுடிகிறது. இந்நூலின் ஆசிரியரும் உரையாசிரியரும் தாம் எடுத்தாண்ட நூற்றிருபதுக்கு மேற்பட்ட இலக்கிய மேற்கோள்கள் இன்னின்னவெனச் சுட்டும் வகையில் இலக்கிய உதாரண முதனினைப்புக் காரிகைகளை

ஆங்காங்கே அமைத்துள்ளனர். நினைவாற்றலுக்குத் துணை செய்யும் இத்தகைய உதாரண முதனினைப்புக் காரிகைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து செய்யுள் நடையில் அமைந்த இலக்கிய மேற்கோளகராதியொன்றை உருவாக்குகிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை. சொற்பொருள் விளக்கத்திற்குரிய நிகண்டுகளையும் நூற்பாக்களால் அமைத்துக்கொண்ட தொன்மரபை மனதிற் கொண்டால் மேற்கூறிய கருத்தின் முழுப் பொருளும் எளிதில் விளங்கும். ஆகவே மேற்கோளகராதித் துறையின் கால் கோட் பணியைத் துவக்கிவைத்த சிறப்பு அமிதசாகரருக்கும் குணசாகரருக்குமே உரியதாகும். இவ்விரு ஆசிரியர்களைப் போல வேறு எந்தப்பழைய ஆசிரியரும் இத்துறையில் கருதத்தக்க பெரும் பணியைச் செய்துள்ளதாகக் குறிப்பிட முடியாது.

பல நூற்றுண்டுகளாகப் போதிய அளவு கவனம் செலுத்தப் படாமல் தேக்க நிலை பெற்றிருந்த இத்துறைக்கு அண்மைக் கால பதிப்பாசிரியர்கள் மீண்டும் புத்துயிரூட்டினரெனலாம். இவர்களுள் டாக்டர் உ. வே. சாமிநாதையர் (குறுந்தொகை, பத்துப் பாட்டு, புறநானூறு) இ. வை. அனந்தராமையர் (கலித்தொகை) நாராயணையங்கார் (மாறனலங்காரம்) ச. பவானந்தம் பிள்ளை (யாப்பருங்கலம்) வ. உ. சிதம்பரம் பிள்ளை (தொல்காப்பியப் பொருளதிகாரம்–இளம்பூரணம்) எஸ். வையாபுரிப் பிள்ளை (களவியற்காரிகை) போன்ற பதிப்பாசிரியர்கள் பாராட்டிற்குரியராவர். காரணம் இவ்வாசிரியர்கள் தம்முடைய பதிப்புக்களில் மேற்கோள்களின் ஆகரங்களைச் சுட்டுதல், மேற்கோளகராதிகளைத் தொகுத்தல், மேற்கோள்களைப் பற்றிய சிறப்புச் செய்திகளை முன்னுரைகளில் எடுத்துரைத்தல் முதலிய பணிகளை இயன்றஅளவு செய்துள்ளமையேயாகும். இப்பணிகளின் சிறப்புக்களை ஆறுமுக நாவலர் (தொல்காப்பியச் சொல்லதிகாரம்-சேனாவரையம், நன்னூல் விருத்தியுரை) சி. வை. தாமோதரம் பிள்ளை (இலக்கண விளக்கம்) போன்ற பதிப்பாசிரியர்கள் பதிப்பித்த நூல்களோடு மேலே காட்டிய நூல்களை ஒப்புநோக்கினால் எளிதில் அறியலாம்.

மேற்கோளாராய்ச்சித் துறைக்குக் கால்கோள் செய்த பதிப்பாசிரியர்களுள்ளும் டாக்டர் ஐயர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவ

ராவார். மேற்கோள்களின் பாகுபாட்டிற்கு உதவும் அடிப்படை உத்திமுறைகளை ஓரளவு உணர்ந்து அவற்றிற்கேற்பப் பணியாற்றியுள்ளமையே இதற்குக் காரணமாகும். இவைகளுள் இரு சிறப்பியல்புகள் விளக்கத்திற்குரியன. புறநானூற்றைப் பதிப்பித்த டாக்டர் ஐயர் அதன் உரையில் கலித்தொகை, குறுந்தொகை, சீவக சிந்தாமணி, தொல்காப்பியம், பத்துப்பாட்டு, புறப்பொருள் வெண்பா மாலை முதலிய நூல்களிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ள மேற்கோட் பகுதிகளை ஆங்காங்கே குறித்துள்ளார். இம்முறை பிற பதிப்பாளர்களிடமும் காணக் கூடிய பொதுவியல்பே. ஆனால் புறநானூற்றுப் பாடல்கள் எங்கெங்கு யார் யாரால் எடுத்தாளப்பட்டுள்ளனவென்று குறிக்கும் சிறப்பியல்பு டாக்டர் ஐயரைத் தவிரப் பிறரிடம் காண்பதரிது. இதற்குக் காட்டாகச் ''சிறிய கட் பெறினே''யெனத் தொடங்கும் புறப்பாடலின் (235) மேற்கோள் விளக்கத்தைக் குறிப்பிடலாம். இலக்கண உரையாசிரியர்களால் இப்பாடல் முழுமையாகவும் குறைப்பகுதியாகவும் ஏறக்குறைய நாற்பது இடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளமையை இவர் பதிப்பைக் கொண்டறியலாம். இவ்வாறு ஒரு நூலின் உரையில் காணப்படும் மேற்கோள்களை இடஞ்சுட்டி விளக்குவதோடு அந்த நூலின் பாடல்களும் பாடற்பகுதிகளும் பிற உரைகளில் எடுத்தாளப்பட்டிருத்தலையும் இடஞ்சுட்டித் தொகுக்கும் இருமுனை விளக்கம் சிந்தனைக்குரியது. இத்தகைய தொகுப்பு முறை மேற்கோளாராய்ச்சியின் இருவேறு பிரிவுகளைச் சுட்டிக் காட்டுதலே இதற்குக் காரணமெனலாம்.

இனி, தமிழைப் போன்ற இலக்கியப் பெரும்பரப்பும் காலப் பழமையும் உடைய மொழிக்கு இலக்கிய வரலாறு தெளிவாக அமைவது அரிது. இத்தகு சூழ்நிலையில் இலக்கிய இலக்கண நூல்களில் காணப்படும் மேற்கோள்கள் அனைத்திற்கும் ஆகர நூல்களைத் தேடிப் பிடித்து இடஞ்சுட்டுதலென்பது இயலாத செயலாகும். பதிப்புக்கலையின் வளர்ச்சியின்மை இந்த நிலைமையை மேலும் சிக்கலுக்குள்ளாக்கும். இக்கருத்துக்களை மனதிற் கொண்டு டாக்டர் ஐயர் தம்முடைய பதிப்புக்களில் இடம் விளங்கிய மேற்கோள்களுக்கு ஆகரக் குறிப்பு தந்ததோடு இடம் விளங்கா மேற்கோள்களைத் தனியே வேறுபடுத்தி அகராதியாக அமைத்துதவினர். இதற்குத் தக்க உதாரணங்களாக

அவருடைய நன்னூல் பதிப்புக்களைக் காட்டலாம். மேற்கோளா ராய்ச்சியில் இடம் விளங்கிய மேற்கோள்களைப் போலவே இடம் விளங்கா மேற்கோள்களும் முக்கியம் வாய்ந்தனவேயாகும். இட விளக்கமென்பது மேற்கோள்களின் ஒருவகைப் பாகுப்பாட்டை எடுத்துக் காட்டுமேயன்றி அவற்றின் தரநிலையை வரைய றுக்கக் கூடியதன்று. இதனையறிந்த டாக்டர் ஐயர் மேற்கோள் களின் வகைகள் புலப்படும் வண்ணம் அவற்றை இடவிளக்க அடிப்படையில் பாகுபடுத்திக் காட்டினர். பயனுள்ள இவ்வகைப் பாகுபாடுகளைப் பிற பதிப்பாசிரியர்கள் இந்த அளவு தெளிவாக வரையறுத்துக் காட்டவில்லையெனலாம். மேற்கோளாராய்ச்சித் துறையில் மேற்குறிப்பிட்ட முயற்சிகளைத் தவிரக் கருதத்தக்க பெரும் பணிகள் பதிப்பாளர்களால் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

பதிப்பாளர்களல்லாத வேறு சிலரும் மேற்கோள் ஆய்வுத் துறையில் தொண்டாற்றியுள்ளனர். இவர்களுள் எஸ். இராதா கிருஷ்ணையர், எஸ். முத்துரத்ந முதலியார், திரு. கோ. ஆராவ முதன், ம. ஆ. நாகமணி போன்றவர்களின் பணி குறிப்பிடத் தக்கது. குறுந்தொகைப் பாடல்கள் தொல்காப்பியப் பொருள திகார உரையில் எங்கெங்கு எடுத்தாளப்பட்டுள்ளன என்பதை விளக்கும் கட்டுரையொன்றை முதலாமவர் செந்தமிழில் (தொகுதி 12, 1913-14) வெளியிட்டுதவினர். இவரே மீண்டும் செந்தமிழ்த் தொகுதி பதினன்கில் (1915-16) தொல்காப்பியப் பொருளதிகார உரையில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள கலித்தொகைப் பாடல்களுக்கு அகராதியொன்றை வெளியிட்டார். இந்த அகராதிக் கட்டுரையில் விடுபட்டிருந்த முப்பதுக்கு மேற்பட்ட கலித்தொகை மேற்கோள்களை முத்துரத்ந முதலியார் தொகுத் துதவி அவ்வகராதியினை நிறைவு பெறச்செய்தார். இக்கூட்டு முயற்சி குறுந்தொகை கலித்தொகைகளின் மேற்கோள் விளக்க ஆராய்ச்சிக்கும், பொருளதிகாரப் பதிப்புக்கும் நன்கு பயன்படக் கூடியவையாகும். இவற்றினின்று சிறிது வேறுபட்ட வகையில் யாப்பருங்கல விருத்தி அபிதான அகராதியென்னும் கட்டுரை யொன்றைத் தி. கோ. ஆராவமுதன் செந்தமிழில் (தொகுதி 30, 1931-'32) வெளியிட்டார். இதன் கண் யாப்பருங்கல விருத்தியில் எடுத்தாளப்பட்டுள்ள நூல்கள், ஆசிரியர்கள், அரசர்கள்,

ஊர்கள் முதலியவற்றைத் தொகுத்துக் காட்டியிருந்தார். இக் கட்டுரையின் கருத்தெல்லை பரந்ததாயினும் மேற்கோளாராய்ச் சிக்குப் பயன்படுமென்பதில் ஐயமில்லை. ஆயினும் நாகமணி யாரின் பெரும் பணியோடு ஒப்பக்கருதும் தகுதி இக்கட்டுரை கட்கில்லையென்பதைச் சுட்டாமல் இருக்க முடியாது.

தொல்காப்பியப் பொருளதிகார மேற்கோள் விளக்க அக ராதி முதலியன என்ற பெயரில் அரியதொரு நூலை (1935) நாக மணியார் வெளியிட்டுள்ளார். இதன்கண் நச்சினார்க்கினியர், பேராசிரியர் ஆகியோர் பொருளதிகார உரையில் எடுத்தாண்ட மேற்கோட் பாடல்களின் அகராதி, பொருளதிகாரப் பொருளடக்க அகராதி, அவ்விரு உரையாசிரியர்களின் வரலாறுகள் முதலியன அடங்கியுள்ளன. இதுபோன்றதொரு மேற்கோள் விளக்க அக ராதி வேறெந்தத் தமிழ்நூலுக்கும் இதுவரை வெளிவந்திருப்ப தாகத் தெரியவில்லை இவைதவிர மேற்கோளாராய்ச்சித் தொடர் பாகப் பொது நூல்கள் கட்டுரைகள் குறிப்பிடுமளவு வெளிவந்திருப் பதாகத் தெரியவில்லை. இலக்கிய வரலாறுகளில் ஆங்காங்கு மேற்கோள்களைப் பற்றிய சிற்சில பொதுக் கருத்துக்கள் பதிப் பாசிரியர்களின் முன்னுரைகளை அடியொற்றிக் காணப்படுகின் றன. இவற்றுள் ''உரையாசிரியர்கள் வரலாறு'' என்ற நூல் சுட்டுதற்குரியது.[7]

திருக்குறள் மேற்கோளாராய்ச்சித் துறையிலும் சில பதிப் பாசிரியர்கள் ஓரளவு முயன்றிருக்கின்றனர். இவர்களுள் வை.மு. கோபாலக்ருஷ்ணமாசார்யர், ச. தண்டபாணி தேசிகர், கி வா. ஜகந்நாதன் ஆகியோர் சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டியவர் களாவர். இவர்களுள் முதலாமவர் இத்துறையில் முன்னோடி. முன்பே குறிப்பிட்டுள்ளதுபோல இவருடைய நோக்கம் பரிமே லழகர் உரை விளக்கமேயாகும். இதனால் இவர் மிகக் குறைந்த மேற்கோள்களையே தமது பதிப்பில் எடுத்துக் காட்டியுள்ளார். இவர் இந்த மேற்கோள் தொகுப்புப் பணியைக் குறிப்பிடத்தக்க பெரும்பணியாக எடுத்துரைத்து உரிமை கொண்டாடிக்கொள்ளவு மில்லை. மற்ற இரு பதிப்பாசிரியர்களும் இவருக்கு முற்றிலும் மாறு பட்டவர்களாவர். இவர்களுடைய பதிப்புக்களும் இத்துறையில் முன்னோடிகளாகவும் இல்லை. எனவே கணிசமான அளவு மேற்

கோள்களை இவ்விரு பதிப்புக்களிலும் காணமுடிகிறது. இச்செய்தியை இப்பதிப்புக்களின் முன்னுரைகள் எடுத்துக் கூறுகின்றன. இவற்றில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள திருக்குறள் மேற்கோள்களை விளக்கும் அட்டவணைகள் முன்னுரையின் பிற்சேர்க்கைகளாகத் தரப்பட்டுள்ளன. இவற்றின்படி உரைவளப் பதிப்பு ஏறக்குறைய ஆயிரம் மேற்கோள் குறிப்புக்களை எடுத்துக் காட்டியுள்ளது. ஆராய்ச்சிப்பதிப்பு நூறு மேற்கோள்களைத் தொகுத்துள்ளது. ஆனால் இவை ஒவ்வொன்றும் ஆயிரத்துக்கு மேற்பட்ட மேற்கோள் குறிப்புக்களைத் தொகுத்துத் தரத் தவறிவிட்டதென்பது கருத்தில் கொள்ளவேண்டிய செய்தியாகும். இதனை முன்னுரையின் பிற்சேர்க்கையில் காணப்படும் மூன்றுவது அட்டவணை தெளிவுபடுத்தி நிறுவும். என்றாலும் இப்பதிப்புக்கள் இரண்டும் மேற்கோள் விளக்கப் பகுதிகளைத் தொகுத்துள்ளமையை உரிமை கொண்டாடிக்கொள்ளப் பின்னடையவில்லை.

உரைவளப் பதிப்பு ''மேற்கோள் பகுதியில் தொல்காப்பியம் முதலிய இலக்கண உரைகளிலும் கலித்தொகை முதலான இலக்கிய உரைகளிலும் பிற உரைகளிலும் எடுத்தாளப்பெற்ற திருக்குறள்கள் அந்தந்த பகுதிகளில் அமைந்துள்ள குறிப்புக்களோடு தொகுக்கப் பெற்றுள்ளன'' என்று முன்னுரையில் குறிப்பிடுகிறது. ஆனால் கலித்தொகை உரையில் யாண்டும் திருக்குறள் மேற்கோளாகக் காட்டப்பெறவில்லையென்பதை இந்த இடத்தில் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. "அறனெனப் பட்டதே" யென்னும் குறட்பாவின் (49) மேற்கோளாட்சியில் மட்டுமே கலித்தொகையுரை பற்றிய குறிப்பு உரைவளப் பதிப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மேற்கோள் விளக்கப்பகுதியில் "அறந்தலை-இல்லறமே அறங்களில் தலையான அறம் (கலி. 8:24)" என்ற நச்சினார்க்கினியரின் நயவுரை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. குறட்பாவின் (49) கருத்திற்கும் நச்சினார்க்கினியரின் கலித்தொகை உரை விளக்கத்திற்கும் ஒப்புமையுண்டெனினும் இதனைத் திருக்குறள் மேற்கோளெனக் கொள்ளுதல் எவ்வகையிலும் பொருந்தாது.

இதுபோலவே ஆராய்ச்சிப் பதிப்பும் ''சில பாடல்களுக்குப் பின் உள்ள மேற்கோள் விளக்கம் என்னும் பகுதியில் பழைய

உரையாசிரியர் தம் உரைகளில் திருக்குறளை மேற்கோளாகக் காட்டும் இடங்களில் பொருளை விளக்க உதவும் பகுதிகள் மாத்திரம் சேர்க்கப் பட்டுள்ளன'' என்று முன்னுரையில் குறிப்பிட்டு உள்ளது. இப்பகுதியில் மேற்கோள் தொகுப்பிற்குத் தாம் பின் பற்றிய இரு அடிப்படைக் கொள்கைகளைப் பதிப்பாசிரியர் சுட்டி யுள்ளார். மேற்கோள்கள் பழைய உரையாசிரியர்களால் எடுத் தாளப்பட்டிருக்க வேண்டுமென்பது ஒன்று. அவை திருக்குற ளின் பொருள் விளக்கத்திற்கு உதவி செய்வனவாக இருக்க வேண்டுமென்பது மற்றொன்று. இவற்றின்படி இப்பதிப்பாசிரியர் இருபதுக்கு மேற்பட்ட உரைகளிலிருந்து எடுத்துக்காட்டியுள்ள நூறு மேற்கோள்களே பழைய உரையாசிரியர்கள் எடுத்தாண்ட வற்றுள் பொருள் விளக்கத்திற்கு உதவக்கூடியனவாகும். இவை களைத்தவிர ஆயிரக் கணக்கில் காணப்படும் ஏனைய மேற்கோள் கள் பழைய உரையாசிரியர்களால் எடுத்தாளப்பட்டிருப்பினும் பொருள் விளக்கத்திற்கு உதவுவனவல்ல; எனவே அவை களனைத்தும் மேற்கோள் விளக்கத் தொகுப்பில் எடுத்துக் காட்டப்பெறும் தகுதியுடையனவாகா என்றாகும். ஆனால் மேற் குறிப்பிட்ட எந்த முடிபும் ஆராய்ச்சிப் பதிப்பில் சரியாகப் பின் பற்றப்படவில்லையென்பதை உதாரணங்களுடன் சுட்டத்தான் வேண்டும்.

''தக்கார் தகவில''ரென்னும் குறள் (114) வல்லின எதுகை விளக்கத்திற்காகக் குணசாகரர் மேற்கோள் காட்டி யுள்ளமையை ஆராய்ச்சிப் பதிப்பாசிரியர் எடுத்துக் காட்டி யுள்ளார். இவர் கொள்கைப்படி இது பொருள் விளக்கத்திற்குப் பயன்படக் கூடிய மேற்கோட் குறிப்பாகும். அங்ஙனமாயின் இதே பொருண்மையை விளக்குதற்காக இளம்பூரணர், நச்சி னார்க்கினியர்; பெருந்தேவனார் யாப்பருங்கலவிருத்தி யாசிரியர் போன்ற பழைய உரையாசிரியர்களும் இந்தக் குறளை எடுத் தாண்டுள்ளமையை ஆராய்ச்சிப் பதிப்பு தொகுத்திருக்க வேண்டும் இன்றேல் அது வரையறுத்துக் கொண்ட 'பழைய உரையாசிரியர் என்ற கொளகைக்கு முரண்பட்டதாகும். ஆனால் இத்தகு முரண்பாடுகள் இப்பதிப்பில் மிகுதியாகவே காணப்படு கின்றன.

இனிப் பொருள்விளக்கத்திற்கு உதவுதல் என்ற கொள்கை எந்த அளவு இப்பதிப்பில் பின்பற்றப்பட்டிருக்கிறது என்பதனையும் சிறிது விளக்கவேண்டும். மயிலைநாதர் நன்னூலுரையில் எழுபத்தைந்து குறட்பாக்களை மேற்கோள் காட்டியுள்ளார்[8] இவற்றுள் ஒன்பது குறட்பாக்களுக்குரிய (78, 143, 293, 496, 840, 848, 950, 1102, 1111) மேற்கோள் விளக்கக் குறிப்புக்களையே ஆராய்ச்சிப்பதிப்பு எடுத்துக் காட்டியுள்ளது. எனவே இப்பதிப்பாளரின் கொள்கைப்படி இந்த ஒன்பது மேற்கோள்களே பொருள் விளக்கத்திற்கு உதவிசெய்யக்கூடியன; ஏனைய மேற்கோள்கள் பொருள்விளக்கத்திற்குப் பயன்படுவனல்ல என்றாகும். ஆனால் இக்கொள்கையும் முரணின்றிப் பின்பற்றப்படவில்லையென்பது எளிதில் புலனாகிறது. இவரால் தொகுக்கப்பட்ட மேற்கோள் பகுதிகளுள் ''அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை''யென்னும் குறட்பகுதி (78) ஒன்றாகும். இப்பகுதி அன்பு உடம்பொடு கூடிய உயிர்க்குணம் என்ற கருத்தை விளக்க மயிலைநாதரால் ''அறிவருளாசை'' யென்னும் நூற்பாவில் (451) எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இப்பகுதி பொருள் விளக்கத்திற்கு உதவக்கூடியதாயின் இதே நூற்பாவில் உடம்பொடு கூடிய உயிர் குணம் என்ற கருத்தை விளக்க எடுத்துக்காட்டப்பட்டுள்ள பிற குறட்பாக்களையும் (108, 154, 168, 247, 357, 427, 486, 532, 671, 833, 944) இந்தப்பதிப்பு தொகுத்துத் தந்திருக்கவேண்டும். காரணம் இவையும் இக் குறட்பாக்களின் பொருள்விளக்கத்திற்கு உதவக்கூடியனவேயாகும். ஆனால் இப்பதிப்பு ஒரு குறட்பாவை மட்டுமே (78) குறிப்பிட்டுக்காட்டிவிட்டு ஏனையவற்றைக் குறிப்பிடவில்லையென்பது சுட்டப்படவேண்டிய செய்தி. எனவே இப்பதிப்புக்கள் பெயரளவில்தான் மேற்கோள் விளக்கப்பகுதியைத் தொகுத்துக் காட்டியிருக்கின்றன என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இவையன்றித் திருக்குறள் மேற்கோளாட்சியை அடிப்படையாகக் கொண்டெழுந்த சில நூல்களும், கட்டுரைகளும் காணப்படுகின்றன. அவற்றுள் வழிவழி வள்ளுவர், திருவள்ளுவரும் சிவப்பிரகாசரும், திருவள்ளுவரும் கம்பரும், மயிலைநாதரும் திருக்குறளும், Kamban's Treatment of Thirukkural முதலியன குறிப்பிடத்தக்கன. மேற்கோளாராய்ச்சியின் வளர்ச்சிபற்றிய இந்தச் சிறுவரலாற்றோடு மேற்கோள் என்றால்

என்ன? மேற்கோளுக்கும் உதாரணத்திற்குமுள்ள தொடர்புயாது? மேற்கோள் காட்டுதற்குரிய காரணங்கள் யாவை? என்பனபற்றி இனிவரும் பகுதியில் காண்போம்.

தமிழிலக்கிய வழக்காற்றில் ஆசிரிய வசனம். இலக்கியம், உதாரணம், எடுத்துக்காட்டு, காட்டு, மேற்கோள், வரலாறு என்பன ஒரு பொருட் பன்மொழிகளாகப் பயன்படுத்தப்பட்டிருத்தலைக் காண்கிறோம். எனினும் உதாரணம் (Example) மேற்கோள் (Quotation) என்ற இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. ஆசிரியர்களாலேயே அவ்வப்போது இயற்றிக் கொள்ளப்படுகின்ற உதாரணங்களைத் தவிரக் கருத்து விளக்கத்திற்காக இலக்கிய இலக்கணங்களில் பயன்படுத்தப் பெறும் அனைத்து உதாரணங்களும் மேற்கோள்களாகும்; ஆனால் அனைத்து மேற்கோள்களும் உதாரணங்களல்ல. மேற்கோள்கள் உதாரணங்களாகப் பயன்பட்டாலும், மேற்கோளென்னும் சொல் உதாரணமென்ற பொருளில் வழங்கப்பட்டாலும் மேற்கோள் வேறு; உதாரணம் வேறு. இக்கருத்தை விளக்குதற்குரிய எடுத்துக் காட்டொன்று தக்கயாகப் பரணியில் கிடைக்கிறது. இந் நூலின் "நகு நகுங் கடவு" ளெனத் தொடங்கும் தாழிசையின் (90) உரையில் "மொகுமொகென்பது இரட்டைக்கிளவி; "இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா," என்னே? "வாளமர் நீந்தும் போழ்து வழுவழுத் தொழியு மன்றே," இது சிந்தாமணி. "குறுகுறு நடந்து சிறுகை நீட்டி" இது புறம்." என்று இதன் உரையாசிரியர் விளக்கவுரை எழுதியுள்ளார். இரட்டித்துச் சொல்லப்படும் சொற்கள் சில உள; அவை இரட்டு நிலையினின்று பிரித்து வழங்கப் படமாட்டா; இவ்வகை இரட்டு மொழிகளுள் மொகுமொகென்பது ஒன்று. இதற்குரிய விதி "இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா" வென்னும் தொல்காப்பியச் சொல்லதிகார நூற்பா (48) ஆகும். இது போன்ற இரட்டைக் கிளவிகள் பிற இலக்கியங்களில் பயின்று வந்துள்ளமைக்குச் சீவகசிந்தாமணி, புறநானூறு ஆகியவற்றின் பாடற் பகுதிகள் இலக்கியச் சான்றுகளாகக் காட்டலாம் என்ற செய்திகளை இவ்வுரையாசிரியர் மேற்காட்டிய பகுதியில் விளக்கியுள்ளார். இந்தப் பகுதியில் இவர் எடுத்தாண்டுள்ள இலக்கண நூற்பா, இலக்கியப் பாடல்கள் ஆகிய மூன்றும் மேற்கோள்களாகும்; இவை பிற நூல்களி

லிருந்து இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. ஆனால் இவை மூன்றும் உதாரணங்களல்ல. பிற்பகுதியில் பயன்படுத்தப் பட்டுள்ள இலக்கியப் பாடல்கள் இரண்டுமே உதாரணங்கள்; அவை ஒப்புமை விளக்கத்திற்காக இங்கு எடுத்துக் காட்டப் பட்டுள்ளன. முற்பகுதியில் அமைந்துள்ள தொல்காப்பிய நூற்பா உதாரண மன்று; ஆனால் இது மேற்கோளென்பதில் மாற்றுக் கருத்திற்கு வழியில்லை. எனவே மேற்கோளும் உதார ணமும் வெவ்வேறானவை யென்பதில் ஐயமில்லை. இந்த வேறு பாட்டைப் பழைய உரையாசிரியர்கள் உணர்ந்து அதற்கேற்ற வகையில் இடமறிந்து பயன்படுத்தியுள்ளனர் எனலாம். மேற் கோள் காட்டுதலென்பது பெரும்பாலும் உதாரணத்திற்காக அமைந்திருந்தது; இந்த மேற்கோள்கள் பிற இலக்கிய இலக் கணங்களிலிருந்து எடுக்கப்பட்டவையாகவும் இருந்தன. இத னால் மேற்கோள்களுக்கும் உதாரணங்களுக்குமிடையே இருந்த வேறுபாடு நாளடைவில் குறைந்து இரண்டும் ஒன்றாகக் கருதப் பட்டுவிட்டன. எடுத்துக்காட்டு என்ற தொடர் இந்தக் கருத்தை வலியுறுத்தும். மூலநிலை (origin), தொழிற்பாடு (Function) ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கோளையும் உதார ணத்தையும் வேறுபடுத்தி வரையறுக்கலாம்.

உலக வழக்கு, செய்யுள் வழக்கு ஆகியவற்றிலிருந்து இலக்கண விதிகளையும், இலக்கிய மரபுகளையும் விளக்குதற்குரிய இலக்கிய அடிப்படையாக (Data) எடுத்துக்காட்டப்படுவன உதா ரணங்களாகும். சில வேளைகளில் இவை நூலாசிரியர் அல்லது உரையாசிரியர் தாமே இயற்றியவையாகவும் அமையக்கூடும்.

இலக்கிய இலக்கணக் கோட்பாடுகளின் விளக்கமுறை உத்திகளுள் ஒன்றாக அமைந்து ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத் திற்கு எடுத்தாளப்பெறும் அனைத்துப் பகுதிகளும் மேற்கோள்க ளாகும். மேற்கோள்களை எடுத்தாளுபவரே அவற்றின் படைப் பாளராக இருத்தல் பெரும்பாலும் இல்லை. இதனால் பெரும்பகுதி இடங்களில் மேற்கோள்களைச் சுட்டிக்காட்டுதற்குரிய குறியீடுகள் காணப்படும். தமிழில் உள்ள 'என்' என்னும் வினையடி மேற் கோள்களை இனம்பிரித்துக் காட்டுதற்குரிய குறியீடாகும். இந்த வினையடி வரும்பொழுதெல்லாம் மேற்கோள் பொருண்மையும்

தொழிற்பாடும் உள்ளடங்கியிருக்குமென்பது திண்ணம். 'என்' என்னும் வினையடியின் உள்ளார்ந்த இயல்பு (Inherent nature) மேற்கோளாகும் சொல்லுதல் தொழிற் பண்பின் மேல் வரும் அறை, இசை, இயம்பு, உரை, கரை, கிள, கூறு, செப்பு, சொல் நுவல், பகர், புகல், மொழி, விளம்பு முதலிய வினையடிகளி லிருந்து தொழிற்படு நிலையால் 'என்' என்னும் வினையடி வேறு பட்டது. இத்தகைய செயல்முறை (Operational) வரையறை களோடு மேற்கோள் செய்தற்குரிய காரணங்களை இனி ஆராய லாம்.

மேற்கோள் காட்டுதல் அனைவரிடமும் காணப்படும் பொதுப்பழக்கமாகும். காலந்தோறும், இடந்தோறும், மொழி தோறும் வேரூன்றிச் செழித்துள்ள முதுவழக்கமென்றாலும் மிகை யாகாது. இவ்வழக்கத்தின் தோற்றம், வளர்ச்சிபற்றி அறுதி யிட்டுக் கூறல் எளிதன்று. ஆயினும் இவ்வழக்கம் வாய்மொழி இலக்கியம், எழுத்துமொழி இலக்கியம் ஆகிய இரண்டிற்கும் பொதுவானதென உறுதியாகக் கூறலாம். வாய்மொழி இலக் கியத்தின் ஒரு பிரிவாகிய பழமொழிகளின் நிலைபேற்றுக்குக் கார ணம் மேற்கோள் காட்டும் வழக்கமேயாகும். மேற்கோள் காட் டும் வழக்கத்திற்கும் வாய்மொழி இலக்கியப் பரப்பீட்டிற்கும் பிரிக்கவியலாத ஒருவகைத் தொடர்பு உண்டு. மேற்கோள்கள் எழுத்துமொழி இலக்கியத்தில் அமையும்பொழுதுதான் அவற்றை மேற்கோட் குறியீடுகள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. இவ் வழக்கத்தை நூலாசிரியர்களும் உரையாசிரியர்களும் தத்தம் தேவைக் கேற்ற வகையில் மேற்கொண்டுள்ளனரெனலாம். தொல்காப்பியரின் மேற்கோட் பகுதிகளை அவர் நூற்றுக்கணக் கில் பயன்படுத்தியுள்ள ''என்ப, என்மனார், என்றிசினோர்'' என்ற சொற்கள் விளக்கும். தமக்கு முன் நிலைபெற்றிருந்த இலக் கணக் கொள்கைகளையும் தமது காலத்தில் பிற ஆசிரியர்களி டையே நிலவிய இலக்கணக் கருத்துக்களையும் இப்பகுதிகளில் தொல்காப்பியர் எடுத்துக் காட்டியுள்ளாரென்று கொள்ளுதலே இயைபுடைத்தாகும் இவருக்குப்பின் வாழ்ந்த நன்னூலாரும், வைத்தியநாத தேசிகரும் இம்மரபை நன்கு பின்பற்றியுள்ளனர். இதனாலேயே நன்னூலில் தொல்காப்பிய நூற்பாக்களும் இலக் கண விளக்கத்தில் தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலம்,

தண்டியலங்காரம் போன்ற நூல்களின் சூத்திரங்களும் காணப்படுகின்றன. நூற்பாக்களேயன்றி உரைப்பகுதிகளையும், உதாரணங்களையுங்கூட எடுத்தாளும் மரபு இலக்கண ஆசிரியர்களிடையே காணப்படுகிறது. இலக்கிய ஆசிரியர்களிடையேயும் இவ்வழக்கம் மிகுந்து காணப்படுகிறது. புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, சூளாமணி, திருக்கைலாய ஞான உலா, நீதிநெறி விளக்கம் முதலிய நூல்களில் பிற நூல்களிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ள மேற்கோட் பகுதிகள் தெளிவாகக் காணப்படுகின்றன.

இவ்வாறு இலக்கிய இலக்கணங்களிலும் அவற்றின் உரைகளிலும் பரந்த அளவில் எடுத்தாளப்பெறும் மேற்கோள்களுக்குரிய அடிப்படைக் காரணங்கள் சிந்தனைக்குரியனவாகும். மேற்கோள்களை எடுத்தாள்வதற்குரிய காரணங்களை ஆராய்தல் அவற்றின் பொருண்மை வகைப் பாகுபாட்டிற்கும் நன்கு உதவும். முதனூல், வழிநூல், சார்புநூல் என்ற நூற் பிரிவுகள்; எழுவகை மதம், பத்தழகு, முப்பத்திரண்டு உத்திகள் ஆகிய இலக்கியக் கொள்கைகள்; ஏது, எடுத்துக்காட்டு, பிரமாணம் முதலிய தருக்கவியற் கருத்துகள்; காண்டிகை, விருத்தி யென்ற உரைப் பாகுபாடுகள்; ஆசிரியர் இயல்பு, மாணாக்கர் தன்மை, பாடங் கற்பிக்குமாறு ஆகிய கல்விமுறை என்றிவற்றின் வளர்ச்சி முதலியவற்றை மேற்கோள்களுக்குரிய பொதுக்காரணங்களாகக் குறிப்பிடலாம். இலக்கண விளக்கம், உரைவிளக்கம், ஒப்புமை விளக்கம், தொன்மொழி விளக்கம், முதற்குறிப்பு விளக்கம் என்ற ஐந்து காரணங்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இவைகளின் உட்பிரிவுகளோடு இவற்றைச் சிறிது விளக்கமாக ஆராய்தல் இன்றியமையாததாகும்.

இலக்கணக் கோட்பாடுகளின் பொதுமரபு பற்றிய விதிகளையும், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய சிறப்பிலக்கண விதிகளையும் இலக்கிய எடுத்துக் காட்டுக்களைக் கொண்டு விளக்குவதற்காக மேற்கோள்கள் மிகுதியாகக் கையாளப்படுகின்றன. இவ்வகை மேற்கோள்களை விதிவிளக்க மேற்கோள்கள் என்றழைக்கலாம். இலக்கண உரைகளில் பேரளவில் காணப்படும் இவ்வகை மேற்கோள்களுக்கு உதாரணங் காட்டல் தேவையற்றதாகும்.

விதிவிளக்க மேற்கோள்களுக்கு நேரெதிர்மாறான ஒரு வகை மேற்கோள்கள் காணப்படுகின்றன. இந்த வகைக்குத் தக்க உதாரணமொன்று பரிமேலழகரின் திருக்குறளுரையில் கிடைக்கிறது. மலர்மிசையென்னும் குறட்பாவின்கண் (3) ''அன்பான் நினைவாரது உள்ளக்கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின் ஏகினானென இறந்த காலத்தாற் கூறினார்; என்னை? ''வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும் ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி இறந்தகாலத்துக் குறிப் பொடு கிளத்தல் விரைந்த பொருள் என்மனார் புலவர்'' (தொல். சொல். 241) என்பது ஒத்தாகலின்'' என்று விசேடவுரை எழுது கிறார். இவ்வாறு இலக்கியப் பகுதிகளில் அமைந்துள்ள இலக்கண விதிகளைக் கொண்டு விளக்குதற்கு உரையாசிரியர்கள் மேற் கோள் செய்யவேண்டியிருக்கிறது. இவ்வாறு பிரமாணம் காட்டி விளக்குதற்கு எடுத்தாளப்பெறும் மேற்கோள்களை விதியமைப்பு மேற்கோள்கள் எனலாம்.

ஒரு இலக்கண ஆசிரியருக்கு வரையறுத்த அடிப்படை இலக்கியம்தேவை. இதனை ஆங்கிலத்தில் Data என்று கூறுவர். நூலாசிரியர்களைப்போலவே உரையாசிரியர்கட்கும் இந்த இலக் கிய அடிப்படை மிகமிகத் தேவையாகும். ஒரு நூலுக்கு உரை யெழுதும் ஆசிரியருக்குப் பலநூல்களைப்பற்றிய பொது அறிவும் உரையெழுத எடுத்துக்கொண்ட மூலநூலுக்கு இயைபுடைய சில நூல்களைப்பற்றிய வரையறுத்த சிறப்பறிவும் கட்டாயம்வேண்டும். உரையாளருக்கு இத்தகைய பின்னணி இன்றேல் பயனுள்ள உரையை அவரால் எழுதிவிட முடியாது. எனவேதான் அறுப துக்கு மேற்பட்ட நூல்களிலிருந்து பேராசிரியரும், எழுபதுக்கு மேற்பட்ட நூல்களிலிருந்து தக்கயாகப்பரணி உரையாசிரியரும், தொண்ணூற்றுக்கு மேலான நூல்களிலிருந்து நச்சினார்க்கினிய ரும், நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களிலிருந்து யாப்பருங்கல விருத்தி ஆசிரியரும் தத்தம் உரைகளில் மேற்கோள் பாடல்களை எடுத்தாண்டுள்ளனர். இவ்வுரையாசிரியர்கள் தாம் எழுதும் உரைகளுக்குத் தேவையான பொது அறிவுப் பின்னணிக்கு இந்த நூல்களை ஆதார இலக்கியங்களாகக் கொண்டனரென்றே கொள் ளுதல் வேண்டும்.

உரையாசிரியர்களின் சிறப்பறிவுப் பின்னணியை விளக்கு தற்குச் சில எடுத்துக்காட்டுக்கள் தேவைப்படுகின்றன. தொல்காப்பியப் பொருளதிகார உரையில் ''நூற்றைம்பது கலியுள்ளும் ஒத்தாழிசை அறுபத் தெட்டு வந்தன'' (நூ: 442) என்றும், ''நூற்றைம்பது கலியுள்ளும் ஒத்தாழிசைக்கலியின் அராக உறுப்பும் அம்போதரங்க உறுப்பும் பெற்றுவருவன இன்மையின் அது பொருளன்று'' (நூ: 444) என்றும், ''நூற்றைம்பது கலியுள்ளும் கலிவெண்பாட்டு எட்டு'' (நூ: 465) என்றும் ''நூற்றைம்பது கலியுள்ளும் அன்னதொரு கலிவெண்பாட்டு இன்மையின் அது சான்றோர் செயயுளோடு மாறுகோளாமென மறுக்க'' (நூ: 466) என்றும், ''நூற்றைம்பது கலியுள்ளும் கைக்கிளைபற்றி இவ்வாறு வரும் கலிவெண்பாட்டுக் காணுமாயினமையின் காட்டாமாயினும்'' (நூ: 472) என்றும் பேராசிரியர் கலிப்பாவின் விளக்கத்திற்குச் சான்றுகக் கலித்தொகையைக் குறிப்பிட்டுள்ளார்.[9] புள்ளிவிவரத்தோடுகூடிய இத்தகைய வரையறுத்த உடன்பாட்டுக் கூற்றுக்களும், எதிர்மறைக் கூற்றுக்களும் பேராசிரியர் கூறியமைக்குக் காரணம் கலிப்பாவின் சிறிப்பறிவுக்குரிய அடிப்படை இலக்கியமாகக் கலித்தொகையை இவர் அமைத்துக்கொண்டமையேயாகும். ஆகவே உரையாசிரியர்களின் அடிப்படை இலக்கியக் கொள்கையும் மேற்கோள்களுக்கு ஒரு காரணமாகும்.

உரையாசிரியர்கள் ஒருநூலுக்கு உரை வரையும்பொழுது கருத்து விளக்கத்திற்கும் நயங்கூறுதற்கும் மேற்கோள்கள் தேவைப்படுகின்றன. வரையறை கூறல், உடன்படல், மறுத்துரைத்தல், வலியுறுத்தல் போன்றவைகளும் கருத்துவிளக்கத்தின் பாற்படும். முக்குணம், நாற்பொருள், ஐம்பொறி, அறுதொழில் எழுபிறப்பு போன்ற எண்தொடர் மொழிகளையும், மறைச்சுட்டுக்களையும் (allusion), வரலாற்றுச்செய்திகளையும், புராண இதிகாசக் குறிப்புக்களையும் விளக்குதற்கு மேற்கோள்களின் தேவை மிகுதியாகிறது. இவைபோன்ற காரணங்களுக்கு இலக்கண, இலக்கிய மேற்கோள்களேயன்றி உரைப்பகுதிகளும் எடுத்தாளப்படுகின்றன. சொல்லதிகார உரைகளிலும், பாயிரவிருத்தி, முதற்சூத்திர விருத்தி, இலக்கண விளக்கவுரை ஆகியவற்றிலும் உரைப்பகுதி மேற்கோள்களைக் காணலாம். மயிலைநாதர் உரையிலும், பிரயோக விவேக உரையிலும் இவ்வகை உரை மேற்கோள்கள்

பெயர்சுட்டி எடுத்தாளப்பட்டுள்ளமை குறிப்பிடவேண்டியதொரு செய்தியாகும். எனவே மேற்கோள் செய்யப்படுதற்கு உரை விளக்கம் ஒரு காரணமல்லவா ?

பொருள் விளக்கத்திற்குத் தெளிவும் ஒளியும் ஊட்டக்கூடியது உவமையாகும். கவிதைகளில் மிகுதியாக அமைந்துள்ள உவமைகள் இதனை வலியுறுத்தும். இப்பண்பை நன்கறிந்த உரையாசிரியர்கள் தாம் வகுக்கும் உரை முறைக்கும், சொற்பொருளாட்சிக்கும், கருத்துக்களுக்கும் ஏற்ற ஒப்புமைப் பகுதிகளை ஆங்காங்கே மேற்கோள் காட்டலாயினர். இவைகளை விளக்குதற்குரிய சிலஉதாரணங்கள் தருதல் நல்லது. பேராசிரியர் ''பிறப்பே குடிமை''யெனத் தொடங்கும் பொருளதிகார நூற்பாவின் (273) உரையில் ''உருவு நிறுத்த காமவாயில்'' என்ற தொடருக்குத் தரும் விளக்கம் உரைவகுப்பொப்புமைக்குத் தக்க சான்றாகும். இப்பகுதியில் ''இங்ஙனம் ஓதிய வகையான் இவை ஒன்பதாகலின் பத்து ஆமாறு என்னையெனின் காமவாயில் எனப்பட்ட இயற்கை அன்பு வடிவுபற்றியல்லது தோன்றாமையானும், குணம்பற்றித் தோன்றுவன செயற்கை அன்பு ஆகலானும் உருவினை அன்பிற்கு அடையாகக் கூறினானாயினும் உருவு சிறப்புடைமையின் அதனை நாம் பகுத்து எண்ணிக்கொண்டாமென்பது என்னை ?

''வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு'' (குறள் : 632)

என்புழிக் கற்றறிதல் என்பதனை இரண்டாக்கி ஐந்து என்பவாகலின்'' என்று பேராசிரியர் உரைவகுத்துள்ளார். இதனைப் பரிமேலழகரும் ''கற்றறிதல் என்பதனைக் கற்றலும் அறிதலுமெனப் பகுப்பாருமுளர்'' என்று இப்பாடலின் விசேட உரையில் குறிப்பிட்டுள்ளார். எனவே பேராசிரியர் தாம் வகுத்த இலக்கண உரைக்கு ஆதாரமாகும் வண்ணம் திருக்குறளுக்கு வழங்கிய பழைய உரையொன்றை ஒப்புமை விளக்க மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளமை அறியத்தக்கதாகும்.

சொற்பொருளாட்சி ஒப்புமைக்குத் தக்கதொரு எடுத்துக்காட்டு பரிமேலழகர் உரையில் கிடைக்கிறது. ''எண் சேர்ந்த'' வென்னும் குறட்பாவில் (910) இடனென்பதற்குச் செல்வமெனப்

பொருளுரைத்து அதன் விசேட உரையில் "இடனில் பருவத்து மெனவும் (குறள்: 218), இடனின்றி இரந்தோர்க்கு (கலி: 2) எனவும் வந்தமையான் இடனென்பது அப்பொருட்டாதலறிக" வென்று திருக்குறள், கலித்தொகைப் பாடல்களின் சொற்பொருளாட்சியை மேற்கோள் காட்டி விளக்குகிருர். இப்பகுதியில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள கலித்தொகைப் பாடற்பகுதியன்றிச் சங்க இலக்கியத்தில் யாண்டும் இடனென்னும் சொல் செல்வமென்னும் பொருளில் வழங்கப்படவில்லையென்பது அறிதற்குரிய செய்தியாகும். இவ்வாறு சொற்பொருளாட்சி ஒப்புமைக்காகப் பொருத்தமுள்ள மேற்கோள்களைத் தரும் முறையைப் பிற பழைய உரையாசிரியர்களிடமும் காணவியலும்.

கருத்தொப்புமைக்கு மேற்கோள் காட்டும் வழக்கம் அனைத்து உரையாசிரியர்களிடமும் காணப்படுகிறது. பிறன் கோட் கூறலென்னுமுத்தி இதனையே சுட்டுவதாகும். இம்முறைக்குப் பயனுள்ள இரு உதாரணங்களைத் தருதல் கருத்துத் தெளிவுக்குப் பயன்படும். நிறையழிதல் என்பதனைத் (குறள். அதி 126) "தலைமகள் மறைத்து அடக்கற்பாலனவற்றை வேட்கை மிகுதியான் அடக்கமாட்டாது வாய்விடுதல்" என்று விளக்கிய பரிமேலழகர் இப்பகுதியில் "நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை என்ருர் பிறரும்" என்று கலித்தொகைப் பாடலடியை (133:11) ஒப்புமை காட்டி நிறுவுகிருர். மறை பிறர் அறியாமை நிறையாகுமென மற்ருெரு குறட்பாவின் உரையிலும் (864) இப்பகுதியை எடுத்தாளுகிருர். இதனையே பேராசிரியரும் தொல்காப்பியப் பொருளதிகார உரையில் (நூ: 273) நிறையென்பது மறைபிறர் அறியாமையென்று எடுத்தாளுகிருர். இவ்வாறு பலவிடங்களில் மேற்காட்டிய கலித்தொகைத் தொடர் எடுத்தாளப்படுதற்குக் காரணம் இத்தொடர் வரையறை (Definition) போல மிகத் தெளிவாக அமைந்துள்ளமையே ஆகும். இத்தொடரின் கருத்தாழத்தில் ஈடுபட்ட உரையாசிரியர்கள் கருத்தொப்புமைக்குரிய பகுதியாக இதனையே மேற்கோள் காட்டி விளக்கம் தருகின்றனரெனலாம்.

இம்மரபிற்குக் களவியற் காரிகை உரைகாரர் கையாண்டுள்ள உத்தி மேற்கோளாராய்ச்சியில் புதியதொரு செய்தியைச்

சுட்டுகிறது. ஒவ்வொரு காரிகைக்கும் பொருள் விளக்கம், இலக்கிய மேற்கோள்கள் ஆகியவற்றை உரைத்தபின்னர் இக் காரிகைக்கு இலக்கணம் இன்ன களவியல் நூற்பாவென்று சுட்டு தற்கேற்ப ஒவ்வொன்றன் உரையிறுதியிலும் ஒவ்வொரு இறைய னார் களவியல் நூற்பாவை இதன் உரையாசிரியர் மேற்கோளாக அமைத்துள்ளார். பிற உரையாசிரியர்களிடம் அருகிக் காணப் படும் இந்த ஒப்பியல் முறை விளக்கம் பதிப்புக்கலைக்கு (Textual criticism) எவ்வகையில் பயன்படுகிறதென்பதே ஈண்டுக் குறிப் பிடத்தக்கது. முதலும் இறுதியும் சிதைந்த நிலையில் கிடைத் துள்ள இந்நூலுக்கு ஆசிரியர் இட்ட பெயரைக்கூட நாம் அறிந்து கொள்ள வழியில்லை; இதன் அளவு, உட்பிரிவுகள், முறைவைப்பு ஆகியவற்றைப் பற்றியும் யாதொரு முடிபும் கூற முடியா வகை யில் இந்நூற் பிரதி சிதைந்துள்ளதாகத் தெரிகிறது இலக்கியங் களின் செய்யுள்தொகையை நூற்றைம்பது கலி, எழுபது பரி பாடல் என்று உரையாசிரியர்கள் (தொல். பொருள் பேரா. 461) குறித்துள்ளமை போலக் களவியற் காரிகையின் அளவைப் பற்றி யாரும் குறிப்பிடவில்லை. யாப்பருங்கலக்காரிகைக்கு அமைந் துள்ளது போல முதனினைப்புக் காரிகைகளும் இந்த நூலுக்கு அமைக்கப் பட்டிருக்கவில்லை. ஆயினும் இந் நூலின் உரையாசிரி யர் எடுத்துக்காட்டிய களவியற் சூத்திர மேற்கோள் முறையை அடியொற்றி இதன் உத்தேச அளவும், பெயரும் பதிப்பாசிரியரால் நிர்ணயிக்கப்படுகின்றன. இத்தகைய பயனுள்ள மேற்கோள் முறைக்கு அடிப்படைக் காரணம் ஒப்புமை விளக்க நோக்க மென்பதை மறத்தலாகாது.

தொல்லாசிரியர்களிடையே பல்வேறு மரபுக் குழுக்கள் (Various Schools) நிலவினதென்பதற்குத் தமிழிலக்கியத்தில் பல சான்றுகள் கிடைக்கின்றன. இத்தகைய மரபுத் தொடர்பைப் புலப்படுத்திக்கொள்ளும் உட்கருத்து மேற்கோள்களுக்கு ஒரு காரணமெனலாம். எனவேதான் முன்னோர் மொழியை தத்தம் உரைகளில் இடைமடுத்து எழுதிப் பாராட்டும் வழக்கத்தை உரை யாசிரியர்களிடையே காணமுடிகிறது இதுபற்றியே

''முன்னோர் மொழிபொருளே யன்றி அவர்மொழியும்
பொன்னேபோற் போற்றுவ மென்பதற்கும்-முன்னோரின்
வேறுநூல் செய்துமெனு மேற்கோளில் லென்பதற்கும்
கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்''

என்ற வழக்கும் (நன். மயிலை 6) ஏற்பட்டது. ஆகவே மேற்கோள் செய்வதற்கு இந்த நோக்கமும் ஒரு காரணமாகிறது.

மனப்பாடம் செய்து பயில்வது நமது முன்னோர் மரபு. இதனால் பாடலின் முதற் குறிப்பினைக் கூறினால் முழுப்பாடலும் பயில்வோர்க்கு நினைவில் வரும். இப்பயிற்சி காரணமாகவே பாடல்களின் முதற் குறிப்புக்கள் எடுத்தாளப்பட்டன. இவ் வழக்கம் நாளடைவில் வளர்ந்து பாடலைக் குறிப்பிடுதற்குரிய ஓர் உத்தியாகவே பயன்படுத்தப் பெற்றது. இக்காலத்தில் வழங்கும் அடிக் குறிப்பு (Foot note) முறையை ஓரளவு இது ஒத்துள்ளதெனலாம். பயனுள்ள இம் முறையை நெடும் பாடல்களையும், மிகுதியான மேற்கோள்களையும் கையாள நேரும்பொழுது அவற்றின் சுருக்கத்திற்காக உரையாசிரியர்கள் மேற்கொள்வாராயினர். இதனாலேயே "வேர்முழு துலறி நின்ற" வென்னும் மணிமிடை பவளத்துள் (அகம்; 145) "கூழுடைத் தந்தையிடனுடை வரைப்பின் ஊழடி ஒதுங்கினும் முயங்கு" மெனவும், "கிளியும் பந்து" மென்னும் களிற்றியானை நிரையுள் (அகம்: 46) "அல்குபதமிகுத்த கடியுடை வியனக" ரெனவும் நெல்லுடைமை கூறிய அதனானே வேளாண் வருண்மென்பது பெற்றாம்" என்று பொருளதிகார உரையில் (நூ. 15) நச்சினார்க்கினியர் எழுதுகிறார். இவ்வாறு மனப்பாட அடிப்படையில் தோன்றிய முதற் குறிப்பு முறை மேற்கோள் விளக்கத்தில் சுருக்கமுறை உத்தியாக அமைந்து மேற்கோளாட்சியைக் கணிசமாகக் கூட்டும் காரணமாக அமைந்ததெனலாம். எனவே மேற்கோள் காட்டுதற்குரிய இத்தகைய சிறப்புக் காரணங்களை மேலே கூறியுள்ள பொதுக் காரணங்களுடன் இயைத்து நோக்கினால் விளக்கமுறை உத்திகளுள் மேற்கோள்களின், இன்றியமையாமை எளிதில் விளங்கும்.

கருத்துத் தெளிவிற்கும் உரை விளக்கத்திற்கும் எடுத்துக் காட்டுக்கள் இன்றியமையாதனவாகக் கருதப்பட்டமை மேலே வலியுறுத்தப்பட்டது. இந்த எடுத்துக்காட்டுக்களில் குறிப்பிடுமளவு செய்யுள்களாக இருத்தல் கண்கூடு, வழக்குமொழி எடுத்துக்காட்டுக்களைவிடச் செய்யுள் மேற்கோள்கள் செல்வாக்குடையனவாகவும் நம்பப்படுகின்றன. இதற்குரிய காரணங்களை ஆராய்தல் பொருளியையுக்குரியதேயாகும். அழகொளிரும் சொல்

லமைப்பு, அறிவூட்டும் பொருளாழம், இன்பந் தரும் காட்சிநிலை, உளமொன்றும் ஓசை நயம், உணர்வு நல்கும் நடையோட்டம் முதலிய கவிதைப் பண்புகளோடு காலப்பழமையையும் ஒருங்கமைதலே செய்யுட்கள் மிகுதியாக எடுத்தாளப்படுவதன் பொதுக் காரணமாகும். மேற்கோள் காட்டுதற்கென்ற நோக்கில் கட்டியுரைக்கும் கற்பித மேற்கோள்களைவிடப் பழம்பெரும் இலக்கியப் பாடல்களை எடுத்துக்காட்டிப் பழைமை பாராட்டும் நோக்கம் விரும்பத் தக்கதுமாகும். இவையன்றிச் செய்யுட்களை மேற்கோள் காட்டும் மரபிற்குச் சில சிறப்புக் காரணங்களுமுண்டு. அவற்றைத் தனித்தனி விளக்கமாகக் காண்போம்.

காலவெள்ளத்தில் அழியாமல் நிலைபெறவேண்டிய இலக்கியக் கருத்துக்களைச் செய்யுள்வடிவில் அமைத்துக் கொண்டது தமிழ் மரபாகும். தமிழிலக்கிய வரலாற்றின் தொடக்கம் செய்யுட்களாக அமைந்துள்ளமை இதனை வலியுறுத்தும். செய்யுட்கள் செல்வாக்குப் பெற்றுச் செழித்து வளர்ந்த அளவு தமிழில் உரைநடை வளரவில்லை. தொன்மைக்கால உரைநடைகளாகக் கருதப்பெறும் சிலப்பதிகார உரைநடைப் பகுதிகளும், இறையனார் களவியலுரையும் கவிதை நடையிலேயே அமைந்துள்ளன. பிற இலக்கிய, இலக்கண உரைகளும் விளக்கம் தேவைப்படுமளவு கடின நடையில்தான் அமைந்திருக்கின்றன. கல்வெட்டு, செப்பேடு, மெய்க்கீர்த்தி போன்ற வரலாற்றுத் தொடர்புடைய ஆவணச் சான்றுகளும் கவிதையமைப்பில் காணப்படுகின்றன. இலக்கிய இலக்கணங்களுக்கும் எளிய கவிதையில் உரையெழுதித் துய்த்தது தமிழ்மரபு. இவ்வாறு கவிதைகளைப் போற்றி வளர்த்த காரணத்தாலேயே தமிழ்மொழியின் யாப்பிலக்கணக் கோட்பாடுகளின் வளர்ச்சி சிறப்பாகக் கருதப்படுகிறது. எனவே தமிழ் இலக்கியம் என்பது கவிதைகளையும், தமிழ் இலக்கியமரபென்பது கவிதை மரபையுமே குறிக்கின்றது. இத்தகு மரபில் தோன்றிய உரையாசிரியர்கள் தாம் கற்று மகிழ்ந்தின்புற்ற பாடல்களைக் கருத்து விளக்கத்திற்குரிய மேற்கோள்களாக எடுத்தாண்டுள்ளமை வியப்பிற்குரியதன்று.

இலக்கணக் கோட்பாடுகளின் வளர்ச்சி, வரையறை, விதியமைப்பு ஆகியவற்றுக்கு இலக்கிய அடிப்படை (Data)

தேவையாகும். இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் என்ற பழங்கொள்கை இதுபற்றி எழுந்ததென்றே கூறலாம். இங்கு இலக்கிய மென்பது உலகவழக்கு, செய்யுள் வழக்கு என்ற இரண்டையும் உள்ளடக்கியதாகக் கொள்ளுதலே சிறந்தது. ஏராளமான வழக்குதாரணங்கள் இலக்கண உரைகளில் காணப் படுதல் இதனையே காட்டுகிறது. ஆயினும் நெடுங்காலமாகச் செய்யுள் மரபு இலக்கிய வரலாற்றில் செல்வாக்குப் பெற்றிருந்த காரணத்தால் செய்யுள் வழக்கை அடிப்படையாக கொண்டு இலக்கணங்கள் தோன்றலாயின. எனவே இலக்கண அடிப்படை செய்யுட்கள்; இலக்கணத்தின் வடிவ அமைப்பு செய்யுட்களால் அமைந்தது; இலக்கண உரைகள் செய்யுள் நடையில் அமைந் தன. இத்தகைய பின்னணியில் எடுத்துக்காட்டுக்கள் செய்யுட் களாக அமைவதில் புதுமையில்லை யல்லவா?

இதனோடு தொடர்புடைய வேறொரு செய்தியையும் இங்குக் குறிப்பிடவேண்டும். நூன் மரபு, மொழிமரபு, புணரியல் முதலிய எழுத்திலக்கணக் கோட்பாடுகளையும், சொல்லிலக் கணக் கோட்பாடுகளையும் விளக்க வழக்குதாரணங்களே போது மானதாகலாம். ஆனால் அகத்திணை, புறத்திணை பற்றிய பொருளா திகார விதிகள், அசை, சீர், அடி, தொடை, பா, இனம் போன்ற யாப்பிலக்கண விதிகள், செய்யுட்களின் அலங்கார வகைகளைக் கூறும் அணியிலக்கண விதிகள் ஆகியவற்றை விளக்க வழக்கு தாரணங்களை விடச் செய்யுளுதாரணங்களே ஏற்புடையன வெனலாம். மேலும் செய்யுள் விதிகளையும், புறநடை விதிகளை யும் உரியியல் விதிகளையும் செய்யுட்களைக் கொண்டே விளக் குதல் இயைபுடைத்தாகும். எனவேதான் இலக்கணப் படிநிலை கட்கும் (Grammatical Hierarchy) செய்யுள் உதாரணங்களின் விழுக்காட்டுயர்வுக்கும் ஒருவகைத் தொடர்பு காணப்படுகிறது. இதன்படி எழுத்திலக்கண உரைகளில் காணப்படும் எடுத்துக் காட்டுக்களின் ஐந்து விழுக்காடும், சொல்லிலக்கண உரைகளில் காணப்படும் எடுத்துக் காட்டுக்களில் இருபது விழுக்காடும் செய்யுட்களாக இருக்கின்றன. ஆனால் பொருள், யாப்பு, அணி இலக்கண உரைகளில் காணப்படும் எடுத்துக்காட்டுக்களில் தொண்ணூற்றைந்து விழுக்காடு செய்யுட்களாகவே அமைந்

துள்ளன. எனவே மேற்கோளாட்சியில் செய்யுட்களின் தொகை மிகுந்திருப்பதற்கு இலக்கணப் படிநிலையும் ஒரு காரணமாகும்.

பொது அறிவு, சிறப்பறிவு, ஒப்பியலறிவு என்ற மூவகை நிலைகளிலும் பயன்படுமாறு ஒன்றற்கொன்று தொடர்புடைய வற்றை இணைத்து அமைத்தல் கல்வி முறையில் வழக்காறு. இவ் வமைப்பு கலைத்துறை, அறிவியல்துறை ஆகிய இரண்டற்கும் பொதுவானதாகும். ஆகவேதான் மொழி வரலாற்றுக்கு இலக் கணமும், இலக்கணத்திற்கு இலக்கியமும், இலக்கியத்திற்கு வர லாறும், வரலாற்றுக்குக் கல்வெட்டுமாகத் தொடர்நிலையில் பயிற்றுவிக்கப்படுகின்றன. பல்துறை நோக்குடைய நெறிமுறை களின் (Inter-disciplines) வளர்ச்சி அடிப்படை இதுபற்றி எழுந்த தெனலாம். இந்த அடிப்படை நோக்கத்தை உரையாசிரியர்கள் உணர்ந்திருந்தமையினால் ஒரு நூலுக்கு உரை எழுதும்பொழுது அந்நூற்பொருளிற்கு இயைபுடைய பிற நூற்பகுதிகளையும் எடுத் துக்காட்டி ஒப்பியல் அறிவு வளர்ச்சிக்கு வழி வகுத்தனர். இலக் கிய இலக்கணங்கள் தமிழில் பெருமளவு செய்யுட்களால் அமைந் திருந்தனவாதலின் இந்த நோக்க ஈடேற்றமென்பது செய்யுள் மேற்கோள்களுக்குத் துணை செய்தது. இதனால் தமிழியற் கல்வி முறை அமைப்பும், நோக்கமும் செய்யுட்களை எடுத்தாள்வதற் குரிய சிறப்புக் காரணங்களாக அமைந்தன.

உரையாசிரியர்கள் செய்யுட்களை மேற்கோள் செய்துள் ளமைக்குப் பழஞ்செய்யுட்களைப் பேணிக்காக்கும் உட்கருத்து (Preservation motive) ஒரு காரணமாதல் கூடும். மறைந்துபோன அகத்தியம், அவிநயம் போன்ற எண்ணற்ற இலக்கணங்களி லிருந்து எடுத்தாளப்பெறும் இலக்கண நூற்பாக்களையும், வெவ் வேறு காலப்பகுதியில் வழங்கிய தனிப்பாடல்களையும் பாதுகாத் துப் பேணும் அடிப்படை நோக்கத்திலேயே உரையாசிரியர்கள் அவற்றை எடுத்தாண்டிருக்கவேண்டும். இந்த நோக்கத்தைக் குறிக்கொண்டு கையாண்ட பெருமையை யாப்பருங்கலவிருத்தி யாசிரியர், பெருந்தேவனார், மயிலைநாதர் போன்ற பழைய உரை யாசிரியர்களிடம் காணலாம். எனவேதான் இவர்களியற்றிய உரைகளில் மட்டும் ஏறக்குறைய நூறு அவிநய நூற்பாக்கள் காணப்படுகின்றன; இவையன்றி அகத்தியம், அணியியல்,

காக்கைப்பாடினியம், பல்காயம், பனம்பாரம், மாபுராணம் போன்ற மறைந்துபோன இலக்கணங்களின் நூற்பாக்களையும் ஆங்காங்கு உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். இந் நோக்கம் உரையாசிரியர்களிடம் இல்லையெனின் ஒழுத்தொள்ளாயிரம், வளையாபதி, குண்டலகேசி போன்ற இலக்கியங்களின் சிற்சில பகுதிகளையும், இசை, நாடகம் போன்ற துறைகளைப்பற்றிய சில நூல்களின் பெயர்களையும் நாம் அறிந்துகொண்டிருக்க முடியாது. ஆகவே பழஞ்செய்யுட்கள் காலவெள்ளத்தில் போற்றுவாரின்றி அழிந்து போகாமல் பாதுகாக்கும் உட்கருத்தோடு யாவராலும் போற்றிப் பயிலப்பட்டுவந்த தொல்காப்பியம், யாப்பருங்கலம், நன்னூல், சிலப்பதிகாரம், திருக்குறள் போன்ற இலக்கண இலக்கிய உரைகளில் அவற்றை உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டி நிலைபெறச் செய்தனரெனலாம்.

மேற்கோளாட்சியில் செய்யுட்கள் சிறப்பிடம் பெற்றிருப்பதற்குரிய காரணங்கள் மேலே தெளிவாக்கப்பட்டன. செய்யுட்களுள்ளும் குறிப்பிட்ட சில நூல்களைச் சார்ந்தவைகளே மேற்கோளாட்சியில் செல்வாக்கும் ஆதிக்கமும் பெற்றுத் திகழ்கின்றன. இதனால் குறிப்பிட்ட சில நூல்கள் தலைமையும் சிறப்பும் பெற்றுப் போற்றப் படுகின்றன. சங்க இலக்கியங்கள் அனைத்திலிருந்தும் உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டுகின்றனர். ஆயினும் எட்டுத்தொகை நூல்களே மிகுதியாக எடுத்தாளப் பட்டுள்ளன. இவற்றுள்ளும் குறுந்தொகையே முதலிடம் பெறுகிறது. இருநூற்றைம்பதுக்கு மேற்பட்ட குறுந்தொகைப் பாடல்கள் ஏறக்குறைய ஆயிரம் இடங்களில் பழைய உரையாசிரியர்களால் எடுத்தாளப்பட்டுள்ளன. குறுந்தொகைக்கு அடுத்த நிலையில் கலித்தொகையும், புறநானூறும் குறிப்பிடுமளவு மேற்கோளாட்சி பெற்றுள்ளன. இவை தவிர்ந்த எட்டுத்தொகை நூல்கள் இவ்வாறு மிகுதியான அளவில் மேற்கோள் செய்யப்படவில்லை. பத்துப் பாட்டு நூல்கள் அனைத்துமே ஏறக்குறைய ஐந்நூறு இடங்களில் தான் எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன. இவைகளுள் திருமுருகாற்றுப்படை மலைபடுகடாம் ஆகிய இருபாடல்களே பெருமளவு எடுத்தாளப்பட்டிருக்கின்றன. இவற்றையடுத்து பெரும்பாணாற்றுப்படையும் நெடுநல் வாடையும் உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. ஏனைய பாட்டுக்கள்

இவைபோல மிகுதியான மேற்கோளாட்சியைப் பெறவில்லை யெனலாம்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறளே மிகப்பல இடங்களில் மேற்கோள் காட்டப் பெற்றுள்ளது. இதனை எடுத் தாளாத உரையாசிரியர்கள் மிகக் குறைவென்றே கூறவேண்டும். எனவேதான் பழைய உரைகளில் மட்டும் உத்தேசமாக இரண் டாயிரத்தைந்நூறு இடங்களில் திருக்குறட்பாக்கள் எடுத்தாளப் பட்டுள்ளன. உவமை கூறவியலாத இப் பெருந்தொகை திருக் குறளின் செல்வாக்கைத் தெளிவாகச் சுட்டிக்காட்டும். திருக் குறளின் இந்தத் தொகை மிகு மேற்கோளாட்சி சங்க இலக்கியங் கள் அனைத்தும் பெற்றுள்ள மேற்கோளாட்சியை விட அதிக மென்றே தோன்றுகிறது. கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறளை யடுத்து நாலடியாரே மிகுதியாக எடுத்தாளப்பட்டுள்ளது. இந் நூல் முந்நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் பழைய உரைகளில் எடுத்தாளப் பட்டுள்ளது. இது தவிர்ந்த கீழ்க்கணக்கு நூல்கள் மிகக் குறைந்த அளவில்தான் உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டப்பெற்றுள்ளன வெனலாம்.

ஐம்பெருங் காப்பியங்களுள் சிவக சிந்தாமணி ஒன்றே மேற்கோளாட்சிச் சிறப்புப் பெற்றுள்ளது. இதனையடுத்து இரட் டைக் காப்பியங்களைச் சிற்சில இடங்களில் உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டியுள்ளனர். ஏனைய இரண்டும் விரல்விட்டு எண்ணுமிடங்களில் தான் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. எனி னும் சங்கப் பாடல்களும் கீழ்க்கணக்குப் பாடல்களும் உரை யாசிரியர்களால் பேரளவில் எடுத்தாளப் பட்டுள்ளமை போலக் காப்பியப் பகுதிகள் எடுத்தாளப் பெறவில்லையென்ற உண்மை யைக் குறிப்பிடத்தான் வேண்டும்.

பாட்டுந் தொகையும், பதினெண்கீழ்க்கணக்கும், ஐம் பெருங் காப்பியங்களும் மேற்கோளாட்சித் துறையில் உரை யாசிரியர்கள் உள்ளங்களைக் கவர்ந்த அளவு பிற தமிழ் இலக்கி யங்கள் கவரவில்லையெனலாம். தேவாரப் பாடல்கள், வில்லி பாரதம், ஆழ்வார் பாடல்கள், கம்பராமாயணம், பெரியபுராணம் ஆகியவற்றை எடுத்தாளுவதில் உரையாசிரியர்கள் கொண்டுள்ள

தயக்கவுணர்வு இக்கருத்தை வலியுறுத்தும். இவைபோன்ற பேரிலக்கியங்களிலிருந்து எடுத்துக் காட்டுவதைவிடத் தத்தம் காலப்பகுதியில் நிலவிய தனிப்பாடல்களை எடுத்தாளுவதில் உரையாசிரியர்களிடையே விரிந்த மனப்போக்கு காணப்படுகிறது. குறுந்தொகை கலித்தொகை, புறநானூறு, திருமுருகாற்றுப்படை, மலைபடுகடாம், திருக்குறள், நாலடியார், சிந்தாமணி, முத்தொள்ளாயிரம் போன்ற நூல்களின் மேற்கோளாட்சியைப் பார்க்கும்போது கம்பராமாயணம், பெரியபுராணம் போன்ற நூல்கள் உரையாசிரியர்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளனவென்றே தோன்றுகிறது. இவ்வாறு உரையாசிரியர்கள் மேற்கோள்களைத் தெரிவுசெய்த முறையில் சிலநூல்கள்மாட்டு ஈடுபாடும், சிலவற்றின்மீது தயக்கமும், சிலவற்றைப் பொறுத்தவரையில் புறக்கணிப்பும் கொண்டுள்ளனரென ஐயப்பாடின்றிக் கூறலாம். இந்நிலைமைக்குரிய காரணங்கள் தனித்து ஆராய்வதற்குரிய பொருண்மையாகும். ஆகவே அதன் பரப்பு கருதி ஒருபுறம் ஒதுக்கிவிட்டு நம் தேவைக்கும் பொருளியைபுக்குமுரிய ஒரு செய்தியை மட்டும் சிறிது விளக்கமாக ஆராய்வோம்.

பெரும்பகுதி உரையாசிரியர்கள் திருக்குறட்பாக்களை மேற்கோள் செய்வதில் விரிந்த மனப்பாங்கும் இணையற்ற ஈடுபாடும் கொண்டிருந்தனரென்பது விவாதம் வேண்டாததோர் உண்மை. இவ்வாறு காலந்தோறும் உரையாசிரியர்களின் போற்றுதலுக்கு இலக்காகி ஆயிரக்கணக்கான இடங்களில் எடுத்தாளப்பட்டு மேற்கோளாட்சியில் திருக்குறள் ஆதிக்க முதன்மை பெற்றுள்ளமைக்குரிய காரணங்கள் சிந்தனைக்குரியன. திருக்குறளின் செல்வாக்கு, உரைப்பரப்பு, செறிவமைப்பு, மொழிநிலை, பொருளமைதி, யாப்பழகு, சமயப்பொதுமை, உரையாசிரியர்களின் மரபுமாறுக் கொள்கை முதலிய காரணங்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இவை ஒவ்வொன்றையும் இனி விரிவாகக் காணலாம்.

பாடல்கள் மேற்கோள் செய்யப்படுதற்குரிய அடிப்படைக் காரணங்களுளொன்று அவற்றின் செல்வாக்காகும். இந்தச் செல்வாக்கு கால வெள்ளத்தால் குன்றிவிட கூடாது; இடத்தொலைவால் குறைந்துவிடக் கூடாது. மாறுகக் கால

எல்லையைக் கடந்து நிலைக்க வேண்டும்; இடப் பரப்பெல்லாம் பெருகிச் செழிக்கவேண்டும். இந்தச் செல்வாக்கு நூலாசிரியர் உரையரசிரியர் பயிற்றுசிரியர் முதலிய கற்பிப்போர் மாட்டும், இவர்களிடம் கற்போர்மாட்டும், சமுதாயத்தின்மாட்டும் நாளும் பரவி வேரூன்ற வேண்டும், இத்தகு செல்வாக்கினைச் சொற் பொருளாட்சி, செறிவார்ந்த நடை, ஆற்றொழுக்கான அமைப்பு, நயமிகு உரைப்பரப்பு ஆகியவற்றால் திருக்குறள் பெற்றிருந்த தென்பது காலங் காட்டுமுண்மை. ஆகவே திருக்குறளின் வரம் பிலா மேற்கோளாட்சிக்கு இதன் செல்வாக்கே முதற் காரண மாகும்.

திருக்குறளின் செல்வாக்குச் செழிப்பிற்கு அதன் உரைப் பரப்பும் ஒரு காரணமாகும். தமிழிலக்கியங்களில் வேறொன்றற் கில்லாத் தனிப்பண்புகளுள் இதன் உரைப் பெருக்கம் ஒன்று. பரிமேலழகர் உரையோடு பழையவுரைகள் பத்தும், பரிமேலழகர் உரைக்குப் பின்னர்த் தோன்றிய பழையவுரைகள் சிலவும் திருக் குறளுக்குத் தற்காலத்தில் தோன்றிய புத்துரைகட்கு அள வில்லை. திருக்குறளல்லாமல் வேறு இலக்கிய இலக்கண நூல் களுக்கு உரையெழுதிய அடியார்க்குநல்லார், சங்கர நமச் சிவாயர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், மயிலைநாதர் போன்ற உரையாசிரியர்களும் தாம் எடுத்தாண்ட குறட்பாக் களுக்கு நயம்படு உரைகளை இயற்றியுள்ளனர். உரையாசிரியர் களேயன்றி இளங்கோவடிகள், கம்பர், குமரகுருபரர், சிவப் பிரகாசர், சேக்கிழார் போன்ற ஆசிரியர்களும் தம்முடைய நூல்களில் ஆங்காங்குத் திருக்குறளுக்கு அரிய விளக்கங்களை வழங்கியுள்ளனர். இத்தகைய கவிதை விளக்கம் நாளடை வில் வளர்ந்து பெருகி முதுமொழி வெண்பாக்களுக்கு வழி கோலி யது. திருக்குறட் பாக்களுக்கு உதாரண விளக்கமோ கதை விளக்கமோ கூறி அதனோடு குறளையும் சேர்த்தமைத்த முதுமொழி வெண்பா நூல்கள் அனைத்தும் திருக்குறளுக்குத் தோன்றிய கவிதையுரைகளென்றே சொல்லலாம். இவ்வாறு காலந்தோறும் எழுந்த உரைகளின் வளர்ச்சியால் திருக்குறட் கருத்துக்கள் விளக்கமும் தெளிவும் பெற்றனவென்பது உண்மையே. ஆனால் கருத்து முரண்பாடுகட்கும் உரை வேறுபாடுகட்கும் இந்த உரை வளர்ச்சியே காரணமென்பதையும் ஒப்புக் கொள்ளத்தான்

வேண்டும். ஆகவேதான் உரைமறுப்பு, விவாதம், முடிவு என்று ஒன்றையொன்று தொடர்ந்து வளர்ந்த நிலையை வைத்தியநாத தேசிகர், சுப்பிரமணியதீட்சிதர், சுவாமிநாத தேசிகர், சிவஞான முனிவர் போன்ற உரையாசிரியர்களிடம் காணலாம். கருத்தை வலியுறுத்தற்குப் பயன்படுத்தப்பட்ட ஆசிரிய மொழிச் சான்று களும், ஒப்பியல் முறை உரைவிளக்கங்களும் வளரலாயின. இவ் வகை உரைவளர்ச்சி திருக்குறளின் மேற்கோளாட்சியைப் பெரு மளவில் பெருக்கிய காரணங்களுள் ஒன்றல்லவா?

திருக்குறள் பாடல்கள் நூற்பாக்களைப் போலச் செறிவான அமைப்புடையன. இந்தச் செறிவமைப்போடு கூடிய ஈரடி வெண் பாக்கள் பெருமுயற்சியின்றி மனனமாகக் கூடிய இயல்பைப் பெற்றிருந்தன. அடியளவுச் சிறுமையுடன் மோனையும் எது கையும் இயைந்து குறட்பாக்களின் ஓசைக்கு இனிமை சேர்த் தன. ஓசையினிமை நினைவாற்றலுக்குத் துணைசெய்யும் பண்பு களுள் ஒன்று. இச்சிறப்பியல்புகள் அனைத்தும் ஒருங்கிணைந்து குறட்பாவை ஓரிரு முறை ஒன்றிப் படித்த அளவிலேயே பாரா யண முயற்சியின்றி நினைவில் நிற்கச் செய்தன. கருத்து விளக் கத்திற்குக் கருவியாகப் பயன்படுத்தப்படும் மேற்கோள்களுக்கு இருக்க வேண்டிய முதல் தகுதி இந்த நினைவெளிமைப் பண் பாகும். பொருத்தமான மேற்கோள்களை ஏட்டுச் சுவடிகளில் தேடிப்பெறும் பெருமுயற்சியை இப்பண்பு பேரளவில் குறைக்கக் கூடியதாகும். இக்கருத்தை வலியுறுத்தற்கு ஏற்ற சான்று நன்னூ லுரையில் கிடைக்கிறது. ''பெயர்வினையும்மை'' (359) யென்றும் ''அறிவருளாசை'' (451) என்றும் தொடங்கும் இரு நூற்பாக் களில் மட்டும் மயிலைநாதர் ஐம்பத்தொரு மேற்கோள் பாடல்களை எடுத்தாண்டுள்ளார். இவற்றுள் நாற்பத்தெட்டு மேற்கோள்கள் (94%) அடிச்சிறுமையுள்ள பாடல்களைக் கொண்ட திருக்குறள், நாலடியார், சீவகசிந்தாமணி போன்ற நூல்களிலிருந்து எடுத் தாளப்பட்டுள்ளன; எஞ்சிய மூன்று மேற்கோள்களே (6%) அக நானூறு, புறநானூறு, பொருநராற்றுப்படை போன்ற நெடும் பாடல்களையுடைய நூல்களிலிருந்து எடுத்துக் காட்டப்பெற்றுள் ளன. மேற்கோளாட்சியில் காணப்படும் இந்த எண்ணிக்கை வேறு பாடு நினைவெளிமையைப் பற்றி மேலே கூறிய கருத்தை நன்கு வலியுறுத்தும். ஆகவேதான் உரையாசிரியர்கள் எடுத்தாண்ட

மேற்கோள் பாடல்களில் திருக்குறள், குறுந்தொகை, நாலடியார் போன்ற நூல்கள் சிறப்பிடம் பெறுகின்றன. அன்றியும் புராணம், இதிகாசம், சமயம் ஆகியவற்றோடு தொடர்புடைய பாடல்களை மேற்கோள் காட்டுவதால் கருத்துவிளக்கமென்னும் தலை நோக்கம் முதன்மை இழக்கக்கூடும்; எடுத்துக்காட்டென்னும் விளக்கக் கருவி தலைமை பெறக்கூடும். இந்நிலைகளைத் தவிர்க் கவே நினைவுக்கு எளிதாக விளங்கும் ஈரடிக் குறள் வெண்பாக்களை இயன்றவரை உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டும் குறிக் கோளைக் கொண்டிருந்தனர். எனவே திருக்குறளின் செறிவான அமைப்பும் அதன் மேற்கோளாட்சிக்கு ஒரு காரணமாயிற்று.

தமிழ் மொழியின் வரலாறு பல்வேறு காலப்பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. இத்தகைய காலப் பகுதிகளுள் ஒன்றின் எல்லையைத் திருக்குறள் தெளிவாக வரையறுத்துக் காட்டுகிறது. திருக்குறளின் மொழிநிலை, பொருளமைப்பு ஆகிய இரண்டாலும் இக்கருத்தைத் தெளிவுபடுத்தலாம்.

தமிழின் மொழிநிலைகளைச் சங்க காலத்திற்கு முந்திய மொழிநிலை (Pre-sangam Tamil) சங்ககால மொழிநிலை (Sangam Tamil) சங்கம் மருவிய மொழிநிலை (Post-sangam Tamil) இடைக் கால மொழிநிலையின் முற்பகுதி (Early-medieval Tamil) இடைக் கால மொழிநிலையின் பிற்பகுதி (Later-medieval Tamil), தற்கால மொழிநிலை (Modern Tamil) என்று வரலாற்றிலக்கண மொழி வல்லுநர்கள் பாகுபடுத்துவர். திருக்குறளின் சொல்லியலமைப்பு (Morphology) தொடரியலமைப்பு (Syntax) ஆகியவற்றை ஆராய்ந்து நோக்கும் பொழுது இதன் மொழிநிலை சங்கம் மருவி யது என்று தோன்றுகிறது. திருக்குறளிற் காணப்படும் வியங் கோள் விகுதிகள், எச்சங்களின் அமைப்புக்கள், வேற்றுமை இலக்கணம், எளிய வாக்கிய அமைப்பு, பிற மொழிக் கலப்பு முதலியன இம் முடிபுக்கு அரண் செய்யும். சங்கத் தமிழுக்கும் இடைக்காலத் தமிழுக்கும் நடுவில் உள்ள காரணத்தால் திருக் குறளின் மொழிநிலையில் இந்த இரு மொழிநிலைகளின் பண்புகளை யும் காணவியலும். இவ்வாறு காணப்படும் காரணத்தால்தான் பிற்கால இலக்கண ஆசிரியர்களாகிய சுப்பிரமணிய தீட்சிதரும் சுவாமிநாத தேசிகரும் திருக்குறளை அடிப்படை இலக்கியமாகக்

கொண்டு தம் இலக்கணங்களை அமைத்தனரெனலாம். இவ்விரு ஆசிரியர்களும் நூற்றுக் கணக்கான திருக்குறட்பாக்களை விதி விளக்கத்திற்கு மேற்கோள் காட்டுவது இதனையே சுட்டும். ஆனால் சுவாமிநாத தேசிகர்.

''பல்காற் பழகினுந் தெரியா வுளவேற்
றெல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினு முழங்கும்'' என்று (இல. கொ. 7) இக்கருத்தைக் கூறியுள்ளார். ஆகவே திருக்குறளின் மொழிநிலை ஒரு காலப் பிரிவை உருவகித்துக் காட்டுவதால் அதன் மேற்கோளாட்சி கணிசமாகப் பெருகிற்றெனலாம்.

மொழிநிலையைப் போலவே குறளின் பொருளமைப்பும் ஒரு கால எல்லையை வரையறுத்துக் காட்டுகிறது. அகம் புறம் என்ற வாழ்க்கையின் இருபகுதிகளைப் பொருண்மையாகக் கொண்டு எழுந்தவை சங்க இலக்கியங்கள். அறவியல் கோட்பாடுகளின் விளக்கம் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள். பெருங்காப்பியங்களும் சிறுகாப்பியங்களும் காவியப் பொருண்மையன. தேவாரப் பாடல்கள் பக்திப் பொருண்மையன. புராண இதிகாசங்கள் சமயப் பொருண்மைக் குரியனவாகும் இவ்வகைப் பொருண்மைக் கூறுகளை நோக்கும் பொழுது பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றிய காலப்பகுதி தமிழின் அறவியல் சகாப்தம் என்றே கூறலாம். கீழ்க்கணக்கு நூல்களுக்கு முன்னரும் பின்னரும் தமிழ் மொழியில் அறக்கொள்கைகள் இந்த அளவு தனித்த நிலையில் வளரவில்லையென்பது தேற்றம். எனவே அறவிலக்கிய வரலாற்றின் தொடக்கம், வளர்ச்சி என்பனவற்றைக் கீழ்க்கணக்கு நூல்களே தெளிவாக எடுத்துக் காட்டுவன. இவ்வாறு பொருண்மையாலும் திருக்குறள் வேறுபட்டு அமைந்திருந்த காரணமே இதன் மேற்கோளாட்சி மிகுதிக்குத் துணை செய்தது. மேலும் அறவியல் துறையில் கருத்தாழமுடைய மறை நூலாகவும் திருக்குறள் அமைந்தமையால் அறக்கருத்துக்களைச் சுட்ட இதனின்று மேற்கோள் காட்டும் வழக்கத்தை உரையாசிரியர்கள் பலரும் மேற்கொண்டிருந்தனர். இவ்வகையில் திருக்குறள் மேற்கோளாட்சிப் பெருக்கத்திற்கு இதன் மொழிநிலையும் பொருளமைப்பும் சிறப்புடைக் காரணங்களாயின.

பாவகை நான்கனுள் சிறந்தது வெண்பா. வேற்றுத்தளை விரவாத் தனிப் பண்பே இச்சிறப்பிற்குக் காரணமாகலாம். நூற் பாக்களைப் போன்ற திண்மையும் அடிச் சிறுமையு முடைய குறள் வெண்பாக்களே வெண்பாவினங்களுள் முதன்மை பெறுவன. அடியளவு பற்றிய சிறப்பிலக்கணந் தவிர வெண்பாவினங்களைப் பற்றிய பெரும் பகுதிப் பொதுவிலக்கண விதிகளை விளக்கக் குறள் வெண்பாக்களே அமையும். குறள் வெண்பா யாப்பில் தலை சிறந்த நூல் திருக்குறளேயாகும். இதற்கு முன்னும் பின்னும் குறள் வெண்பாவில் தோன்றிய வேறு எந்த நூலும் இந்த அளவு புகழ்பெற்றதாகத் தெரியவில்லை. இதனாலேயே உரையாசிரியர் கள் வெண்பா யாப்பின் இலக்கண விளக்கத்திற்குத் திருக்குறளைப் பேரளவில் எடுத்தாண்டுள்ளனர். எனவே திருக்குறளின் மிகுதி யான மேற்கோளாட்சிக்கு இதன் யாப்பழகும் ஒரு காரணமாக அமைகிறது.

உரையாசிரியர்களில் பெரும்பகுதியினர் சமயச் சார்புடை யோராகவே உள்ளனர். இந்தச் சமயச் சார்பு இவர்கள் எடுத் தாளும் மேற்கோள்களினாலும் புலப்படுகிறது. எனவே தான் யாப்பருங்கல விருத்தி உரையாசிரியரும், மயிலைநாதரும் எடுத் தாண்ட மேற்கோள்களுள் சமண மதச் சார்புடைய பாடல்களைக் காண முடிகிறது; பெருந்தேவனார் காட்டிய மேற்கோள்களில் பௌத்த மதச் சார்புடைய பாடல்களையும் காணமுடிகிறது. சுவாமிநாத தேசிகரும், சிவஞான முனிவரும் எடுத்தாளும் மேற் கோள்களில் சைவசமயப் பாடல்களும், பரிமேலழகருரையில் வைணவப் பாடல்களும் இடம் பெற்றுள்ளன. இவ்வாறு மேற் கோள் பாடல்கள் உரையாசிரியர்களின் சமயச் சார்பை விளக் கும் அகச்சான்றுகளாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆனால் உரையாசிரியர்கள் அனைவரும் தத்தம் சமயச் சார்புடைய பாடல்களைக் கொண்டே உரைவிளக்கம் செய்து விடுதலென்பது இயலாத செயலாகும். இந்தச் சூழ்நிலையில் புறச்சமயப் பாக்களை மேற்கோள் காட்டி விளக்கம் செய்வதைக் காட்டிலும் சமயப் பொதுமையுடைய பாக்களைக் கொண்டு விளக்குதலென்னும் கொள்கை இயல்பொடுபட்டதாகும். ஆகவேதான் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானதாக விளங்கிய திருக்குறளிலிருந்து உரையாசியர்கள் தயக்கமின்றி எடுத்தாளுவாராயினர். இவ்வாறு

பல்வேறு சமயச் சார்புடைய உரையாளர்கள் மேற்கோள் காட்டியமையால் திருக்குறளின் சமயப்பொதுமை நிலை நிறுத்தப் பெற்றதெனக் கூறுவாருமுளர். எங்ஙனமாயினும் திருக்குறளின் சமயப்பொதுமை இதன் மேற்கோளாட்சிக்கு ஒரு காரண மென்பது தெளிவு.

சில கருத்துக்களை விளக்குதற்கு ஒரே செய்யுள் காலந் தோறும் பல உரையாசிரியர்களால் எடுத்தாளப்படும் வழக்கம் உரைகளில் காணப்படுகிறது. இதற்குத் தக்க எடுத்துக்காட்டு ''உண்ணுமை''யெனத் தொடங்கும் (255) குறட்பாவாகும். இப் பாடல் யாப்பருங்கல விருத்திகாரர், குணசாகரர், மயிலைநாதர், நேமிநாத உரைகாரர், வைத்தியநாத தேசிகர், சங்கரநமச்சிவா யர், இராமனுஜ கவிராயர், திருப்பாற்கடல் நாதன் ஆகிய எண் மரால் தாப்பிசைப் பொருள்கோள் விளக்கத்திற்கு எடுத்தாளப் பட்டுள்ளது. இதுபோலவே ''சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே'' என்னும் புறப்பாட்டின் (235) முதலடி மன்னிடைச் சொல் கழிவின் கண் வந்தமைக்கு ஆசிரியர் எண்மரால் எடுத் தாளப்பட்டுள்ளமையை டாக்டர் ஐயர் தொகுத்துக்காட்டியுள் ளார். இவ்வாறு ஒருவர் காட்டிய மேற்கோளையே பிற உரை யாசிரியர்களும் எடுத்தாளும் மரபு மாறாக் கொள்கைக்குரிய கார ணம் சிந்திக்கத்தக்கது. உரை விளக்கத்திற்கு ஒரு கருவிதான் மேற்கோள்; இதுவே விளக்கமாகிவிட முடியாது. கருவியென் னும் மேற்கோளை அடிக்கடி மாற்றுவதால் பெரும்பயன் விளைந்து விட வழியில்லை, மாறாகக் குழப்பமே மிஞ்சும். உரையாசிரியர்கள் இதனை நன்குணர்ந்திருந்தனர். இதனால்தான் ஒரு கருத்தை விளக்குதற்குப் பொருத்தமான எடுத்துக்காட்டு ஒருமுறை ஒருவ ரால் அமைக்கப்பட்டுவிட்டால் அதனை மாற்றாமல் பிறரும் அப் படியே கொண்டெடுத்து மொழிதலை மரபாக மேற்கொண்டுள் ளனர். மேலும் மேற்கோளை மாற்றினால் மாற்றத்திற்குரிய கார ணம் பயனுடையதாக இருத்தல் வேண்டும்; பயனில்லா மாற்றம் போற்றப்படுதலில்லையல்லவா?

இம் மரபு மாறாக் கொள்கைக்கு வேறொரு காரணமும் இருத் தல் கூடும். இலக்கணக் கோட்பாடுகள் சிலவற்றை விளக்கு தற்குப் பொருத்தமான எடுத்துக் காட்டுக்கள் மிகுதியாகக்

கிடைப்பதென்பது நடைமுறைக்கு ஒவ்வாததாகும். இக் கருத்திற்குச் சில எடுத்துக்காட்டுக்கள் தருதல் விரும்பத்தக்கது.

> ''தடுமாறு தொழிற்பெயர்க் கிரண்டும் மூன்றும்
> கடிநிலை இலவே பொருள்வயி னான''

என்னும் நூற்பாவின் (தொல்.சொல். 95) விளக்கத்திற்குப் ''புலி கொல் யானை'' என்ற ஒரு தொடரையே சொல்லதிகார உரைக்காரர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். இதுபோலவே செய்தவென்னும் பெயரெச்ச வாய்பாட்டின் அகர விகுதி செய்யுள் விகாரத்தால் தொகுதலென்பதும் அரியதொரு விதியாகும். இதற்கு ஏற்றதோர் எடுத்துக்காட்டு ''புகழ்புரிந் தில்லிலோர்க்கு இல்லை'' என்ற குறட்பகுதி (59) யாகும். ஆகவேதான் இப்பாடற் பகுதியைக் காரிரத்தினகவிராயர் ஈரிடங்களிலும், சுவாமிநாத தேசிகர் ஓரிடத்திலும், சிவஞான முனிவர் மூன்றிடங்களிலும் மேற்கூறிய பெயரெச்ச விதியை விளக்குதற்கு எடுத்தாண்டுள்ளனர். இவற்றைவிடவும் பொருத்தமானதொரு எடுத்துக்காட்டை ஈண்டுக் குறிப்பிட்டா வேண்டும். உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக்குரிய உதாரணமாகத் 'தகர ஞாழல்' என்னும் தொடரொன்றே உரைகளில் யாண்டும் எடுத்தாளப்படுகிறது. தெய்வச்சிலையாரும்[10], வீரமாமுனிவரும்[11] வேறுபட்ட உதாரணங்களை எடுத்துக் காட்டியிருப்பினும் அவை வழக்காற்றில் பயன்படுதலில்லை. இதனை வடமொழியோடும் ஒப்பு நோக்கி ஆராய்ந்த சுப்பிரமணிய தீட்சிதர் பிரயோக விவேக உரையில் (24) ''இனி வடநூலார் உம்மைத் தொகையில் வெகுவிரீகி (அன்மொழித்தொகை) வராதென்றும், 'ஆநகதுந்துபி' என்பதனை மத்திய பத லோபன் (உருபும் பயனும் உடன்தொக்க தொகை) மேல்வந்த வெகு விரீகியென்றும் அவருட் சில 'ஆநகதுந்துபி' என்பதனை உம்மைத் தொகைமேல்வந்த வெகுவிரீகியென்றும் கூறுவர். தமிழ்நூலினும் 'தகரஞாழல்' என்பதொன்றனையே தொல்காப்பியர், நன்னூலார் முதலாயினார் உம்மைத் தொகைப்புறத்து வந்த அன்மொழித்தொகைக்கு உதாரணம் காட்டியதல்லது வேறுதாரணம் இன்மையானும், செய்யுட்களில் யாண்டும் உம்மைத் தொகைப் புறத்து அன்மொழி வாராமையானும், 'தகரஞாழல்' என்பது தகரஞாழலாகிய சாந்தென்பதன்


றிச் சாந்து பூசினுனெனப் பொருள் விரிதலின் 'துவிரேபம்' என்பதுபோல அன்மொழிக்கு அன்மொழியாய் வருதலானும் அது பயின்று வாராமையறிக'' வென்று குறிப்பிட்டுள்ளார். எனவே ஒரே உதாரணத்தைப் பலரும் எடுத்தாளுதற்கு உதாரண அருமைப்பாடும் ஒரு காரணமாகலாம்.

அன்றியும் உரையாசிரியர்களிடையே பல்வேறு மரபுக் குழுக்கள் நிலவியிருக்க வாய்ப்புண்டு. கருத்துத் தழுவல், உரைத் தழுவல், உதாரணத் தழுவல் முதலியன இவர்களிடையே அமைந்த குழுத்தொடர்பையும், பரம்பரை உறவையும் புலப்படுத்திக்கொள்ள உதவும் வாயில்களாகும். அவிநயனுர், யாப்பருங்கல விருத்திகாரர், இளம்பூரணர் ஆகியோர் காட்டிய உதாரணங்களை மயிலைநாதர் எடுத்துக்காட்டுதற்கும், நச்சினர்க்கினியர் சொல்லதிகாரத்தில் எடுத்தாண்ட குறட்பாக்களைக் கல்லாடர் எடுத்துக்காட்டுதற்கும், சுவாமிநாத தேசிகர் காட்டிய மேற்கோள்களைச் சிவஞான முனிவர் நன்னூல் விருத்தியில் எடுத்தாள்வதற்கும் இதுவே காரணமாகும். ஆகவே உரையாசிரியர்களிடையே அமைந்த மரபுமாருக் கொள்கையும் திருக்குறளின் மேற்கோளெண்ணிக்கை மிகுதிக்கு ஒரு காரணமாயிற்று.

மேற்கோளாராய்ச்சியில் அவற்றின் பாகுபாடு சிறப்பிடம் பெறக்கூடியதாகும். மேற்கோள்களைப் பல வகைகளில் பாகுபடுத்தி வகைமை செய்யலாம். மேற்கோள்களின் தன்மைக்கேற்ப முறைகளும் மாறக்கூடும். எனினும் அடிப்படைப் பாகுபாடுகளுக்குரிய பொது முன்னேற்பாடுகள் சில உள்ளன. அனைத்து வகை மேற்கோள்களுக்கும் இவை பொருந்தக்கூடியனவாகும். இவற்றின்படி மேற்கோள்களை உலகவழக்கிலிருந்து எடுக்கப்பட்டவையெனவும் செய்யுள் வழக்கிலிருந்து எடுக்கப்பட்டவையெனவும் முதற்கண் பாகுபடுத்த வேண்டும். வழக்கு மேற்கோள்களை கிளைமொழிகளின் (dialects) அடிப்படையில் ஆராய்ந்து பாகுபாடு செய்யவேண்டும். செய்யுள் மேற்கோள்களை இடம் விளங்கியனவென்றும் இடம் விளங்காதனவென்றும் இரு பிரிவுகளாக்கிக் கொள்ள வேண்டும். பின்னர் இடம் விளங்கிய மேற்கோள்களை நூலடிப்படையில் இன்ன இன்ன நூல்களைச் சார்ந்தவை யென்றும் உரையாசிரியர்களால் இயற்றப்பட்டவையென்

றும் பிரித்துக்கொள்ளல் வேண்டும். இறுதியாகப் பொருளடிப் படையில் இலக்கியம் இலக்கணம் என்று வேறுபடுத்திக் கொள்ள லாம். இதுபோலவே இடம் விளங்கா மேற்கோள்களையும் பிரித் தல் வேண்டும். பொருளமைப்பு, யாப்பமைதி, அடிவரையறை, நடைத்திறம் ஆகியவற்றைக் கொண்டு இன்ன நூலைச் சார்ந் தவையாதல் வேண்டுமெனக் கருதும் உத்தேசப் பாடல்களை ஒரு பிரிவாகப் பிரித்துக்கொள்ளவேண்டும். வரலாற்றுக் குறிப்புக் கள், சமயக் கோட்பாடுகள், காவியப் பாத்திரங்களின் பெயர் கள் முதலியன உத்தேசப் பாடல்களை இனங் கண்டுகொள்ள நம்பகமான சான்றுகளை வழங்கக்கூடும். உறுதியாக நிர்ணயம் செய்யவியலாத தனிப்பாடல்களைக் கால அடிப்படையில் பாகு படுத்தி ஒரு பிரிவை அமைத்துக் கொள்ளலாம். பின்னர் இவற்றை இலக்கியமெனவும் இலக்கணமெனவும் இறுதியில் பாகு படுத்திக்கொள்ள வேண்டும். மேற்குறித்த முன்னேற்பாட்டுப் பாகுபாடுகளைப் பின்வரும் விளக்க வரைபடம் தெளிவுபடுத்தும்.

இவ்வாறு இலக்கியம் அல்லது இலக்கணம் என்று பாகுபடுத்திக் கொண்ட பின்னரே சிறப்புநிலை வகைமை செய்ய வியலும். இதற்குத் திருக்குறளை உதாரணமாகக் கொண்டு விளக் குதல் பொருத்தமாகும். திருக்குறளை எடுத்தாண்ட உரையாசிரியர் களின் காலமுறையைப் பின்பற்றி மேற்கோள்களைக் காலவரிசைப் படுத்திக் கொள்ளவேண்டும். எவ்வகைப் பாகுபாட்டுக்கும் கால வரிசை முறை அமைப்பு பயனுள்ள குறிப்புக்களைத் தருமாதலின் இவ்வமைப்பு அடிப்படையாக நின்றுதவும். இப்பாகுபாட்டு அமைப்புக்குப் பின்னர் மேற்கோள்களை அவற்றின் வடிவ அமைப்பு (Formal) பொருளமைப்பு (Content) ஆகிய இருவகை களில் பாகுபடுத்தலாம். திருக்குறள் மேற்கோள்களை அவற்றின் வடிவ அமைப்பைக் கொண்டு முழுப்பாடல் மேற்கோள், குறைப் பகுதி மேற்கோள், உரைநடை மேற்கோள் என்ற மூன்று வகையாகப் பாகுபாடு செய்யலாம். இம் மூவகை மேற்கோள் களில் எவ்வகையை எந்தெந்த ஆசிரியர்கள் பயன்படுத்தி யுள்ளனர்? எந்தெந்த நூல்களில் எவ்வகை மேற்கோள்கள் மிகுதி யாகக் காணப்படுகின்றன? இவைகட்குரிய காரணங்கள் யாவை? என்பவை நன்கு ஆராயப்பட வேண்டும். இவ்வகை ஆராய்ச்சி மேற்கோள்களை எடுத்தாண்ட ஆசிரியர்களைத் தெளி


மேற்கோள்கள்
வழக்கு மேற்கோள்கள்
செய்யுள் மேற்கோள்கள்
இடம் விளங்கியன
இடம் விளங்காதன
குறிப்பிட்ட நூல்கள்
உரையாசிரியர் பாடல்கள்
உத்தேச நூல்கள்
தனிப் பாடல்கள்
இலக்கியம்
இலக்கணம்
இலக்கியம்
இலக்கணம்
இலக்கியம்
இலக்கணம்
இலக்கியம்
இலக்கணம்

வாக உணர்ந்து கொள்ளக்கூடிய குறிப்புக்களைப் புலப்படுத்தும்.

யாப்பருங்கலவிருத்தி, யாப்பருங்கலக்காரிகை, சிதம்பரப் பாட்டியல், தொல்காப்பியச் செய்யுளியல் பகுதி ஆகியவற்றின் உரைகளில் பெரும்பகுதிக் குறட்பாக்கள் முழுநிலையில் எடுத்தாளப்பட்டுள்ளன. தண்டியலங்காரம், மாறனலங்காரம் போன்ற அணிநூல்களின் உரைகளிலும், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் போன்ற ஐந்திலக்கண நூல்களில் உள்ள அணியியற் பகுதிகளின் உரைகளிலும் காட்டப்பட்டுள்ள குறட்பாக்கள் முழுமையாகவே எடுத்தாளப்பெற்றுள்ளன. தொல்காப்பியக் களவியல், கற்பியல் ஆகியவற்றின் உரைகளிலும், இறையனார் களவியல், நம்பியகப்பொருள், களவியற்காரிகை போன்ற பொருள் நூல்களின் உரைகளிலும் முழுக்குறட்பாக்களையே மிகுதியாக உரையாசிரியர்கள் எடுத்தாண்டுள்ளனர். பொதுவாக அகத்திணை, புறத்திணைகளைப் பற்றிய பகுதிகளில் வரும் திணை, துறை விளக்கங்களையும், கூற்றுவகைகளையும் விளக்குதற்கு முழுக்குறட்பாக்களை உரையாசிரியர்கள் எடுத்தாளுதல் பெருவழக்காகும்.

பத்துப்பாட்டு, பரிபாடல், சிலப்பதிகாரம் போன்ற தொடர்நிலைப்பாடல்களை முழுநிலையில் எடுத்தாள முடியாது. கலித்தொகை, அகநானூறு, புறநானூறு போன்ற நெடும்பாடல்களையும் முழுப்பகுதிகளாகவும், குறைப்பகுதிகளாகவும் எடுத்தாளும் முறை ஆங்காங்கு காணப்படுகின்றன. கருத்து விளக்கத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தேடிப் பெறுத வகையில் தேவையுள்ள பகுதியைத் திரிபு ஏற்படாமல் எடுத்துக்காட்டுக்களைக் காட்டவேண்டுமென்ற நோக்கமே முழுப்பாடல்களை வெட்டிக் குறைத்துக் காட்டும் வழக்கத்தை ஏற்படுத்தியது. அளவிற் கூடிய நெடும் பாடல்களைத் துண்டித்துக் காட்டும் பயிற்சி காரணமாக உரையாசிரியர்கள் குறுந்தொகை, திருக்குறள் போன்ற அளவிற் குறைந்த பாக்களையும் வெட்டிக் குறைத்து எடுத்தாளத் தலைப்பட்டனரெனத் தோன்றுகிறது. எண்ணிறந்த மேற்கோள்களை எடுத்தாளும் உரையாசிரியர்கள் அளவுப் பன்மை கருதி மேற்கோள்களைத் துண்டித்துக் காட்ட வாய்ப்புண்டு. நூற்றுக்கணக்கில் திருக்குறள் மேற்கோள்களைப் பயன்படுத்திய சுப்பிரமணிய தீட்சிதர், சுவாமிநாத தேசிகர் போன்ற உரையாசிரியர்களிடம்

இவ்வழக்கத்தைக் காணலாம். மேலும் இவ்வாசிரியர்கள் எடுத்துக்கொண்ட சொல்லிலக்கணப் பொருண்மையும் இம்மரபிற்கு ஒரு காரணமாகலாம். உரை விளக்கத்திற்காக மீண்டும் மீண்டும் திருக்குறள் உரைப்பகுதிகளில் எடுத்தாளப்படும் குறட்பாக்களை முழுநிலையில் எடுத்தாளுதல் தேவையற்ற இரட்டிப்புக்கு வகை செய்யும். இதனால்தான் பரிமேலழகரும், நுண்பொருண் மாலையாரும் எடுத்தாண்ட குறள் மேற்கோள்களுள் பெரும்பகுதி குறைப்பாடல்களாக இருக்கின்றன.

பாடல்களின் அளவு கருதாமல் குறைப்பகுதிகளாகவும், முழுப்பகுதியாகவும் மேற்கோள் காட்டும் மரபு அனைத்துரையாசிரியர்களிடமும் காணப்படும் பொதுப்பண்பாகும். முழுப்பாடல்களை அல்லது குறைப் பகுதிகளை மாத்திரமே எடுத்துக் காட்டியவர் இவரென்று வரையறுத்துப் பெயர் சுட்டுமளவு உரையாசிரியர்களைக் காண்பதரிது. ஆனால் மேற்கோள் விளக்கத்திற்கு அமைந்த பொருள்களின் அடிப்படையில் மேற்கோள்களின் வடிவ அமைப்பை ஓரளவு ஊகம் செய்யவியலும். உரையாசிரியர்களின் வழக்கங்களையொட்டி மேற்கோள்களின் வடிவ நிலையை ஊகம் செய்வது நம்பகமானதாகத் தோன்றவில்லை. எனவே மேற்கோள் காட்டப்படும் பாடல்களின் அடியளவு, மேற்கோள் காட்டும் ஆசிரியர்களின் மரபுமுறை, மேற்கோள் விளக்கப் பொருண்மை, மேற்கோள்களின் எண்ணிக்கை ஆகிய அனைத்தையும் தொடர்புபடுத்தி நோக்கினால் மேற்கோள்களின் வடிவ அமைப்புப்பற்றி ஓரளவு முன்யூகம் செய்யவியலும்.

இனி மூன்றாவதாக உள்ள உருமாறிய உரைநடைப் பகுதிகளைப் பற்றிப் பார்ப்போம். உரையாசிரியர்கள் திருக்குறட்பாக்களை உரைநடை வடிவில் எடுத்தாளும் வழக்கம் பரவலாகக் காணப்படுகிறது. இதற்குத் தக்க உதாரணங்கள்

''இழிவறிந்துண்பான்கண் இன்பம் எய்தும்;
கழிபேர் இரையன் இன்பம் எய்தான்''
''இகழ்ச்சியிற் கெட்டான்;
மகிழ்ச்சியின் மைந்துற்றான்'' என்பனவாகும்.

இவை முறையே

இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்.
இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

என்ற குறட்பாக்களின் (946; 539) உரைநடைகளாகும். சேனாவரையர் எடுத்தாண்ட இந்த உரைநடைப் பகுதிகளை (தொல். சொல். 60; 78) நச்சினார்க்கினியர் (தொல். சொல். 61 ; 79) சொல்லதிகாரப் பழைய உரையாசிரியர் (தொல். சொல். 61; 79) வைத்தியநாத தேசிகர் (இல. விள. 322; 202) போன்றோரும் எடுத்தாளுவதைக் காணவியலும். இவைபோன்ற உரைநடையிலமைந்த குறள் மேற்கோள்களை நன்னூல் மயிலைநாதருரை, பிரயோக விவேக உரை, இலக்கணக் கொத்து உரை, தொன்னூல் விளக்க உரை ஆகியவற்றிலும் காணலாம். சிற்சில இடங்களில் சுப்பிரமணிய தீட்சிதரும், சுவாமிநாததேசிகரும் இருகுறட்பாக்களைக் கலவையாக்கி எடுத்தாளுதலும் உண்டு.

பொதுவாகத் திருக்குறள் உரைநடை மேற்கோள்கள் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன வெனினும் இவற்றைப் புறக்கணித்துவிட இயலாது. காரணம், பாட வேறுபாடுகளின் ஆராய்ச்சியில் இவை துணைச் சான்றுகளாகப் பயன்படக் கூடுமென்பதேயாகும். தாம் எடுத்து விளக்க விரும்பும் பொருண்மைக்கு ஏற்ற எடுத்துக்காட்டுக்களாகப் பழம் பாடல்கள் அமையாதபொழுது உரையாசிரியர்கள் அவற்றை மாற்றிவிடுகின்றனர். இவ்வாறு சொற்களின் அமைப்புமுறையும், சொற்கிடக்கையும் உரைநடையமைப்பில் மாறிவிடுவதால் இவ்வகை மேற்கோள்களை மிகவும் விழிப்போடு தொகுத்து ஆராய வேண்டும்.

இனி இம் மேற்கோள்களைப் பொருண்மை வகையில் பாகுபாடு செய்வது பற்றிச் சிறிது குறிப்பிடவேண்டும். இவ்வகைப் பாகுபாட்டிற்கு மேற்கோள் செய்வதற்குரிய காரணங்கள் பயனுள்ள குறிப்புக்கள் (clues) சிலவற்றை நல்குமென்பது முன்பே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. எனவே இலக்கண விளக்கம், உரை விளக்கம், ஒப்புமை விளக்கம், தொன்மொழி விளக்கம், முதற் குறிப்பு விளக்கம் என்று மேலே விளக்கப்பட்டுள்ள மேற்கோட்

காரணங்கள் ஐந்தும் அவற்றின் உட்பிரிவுகளும் பாகுபாட்டிற்குரிய அடிப்படைகளாக அமையக் கூடியனவாகும். இவற்றோடு மேற்கோள் விளக்கப் பகுதிகளையும் இயைத்து ஆராய்ந்தால் பொருண்மை வகைப் பாகுபாடு சிறப்புற அமையுமென்பதில் சிறிதும் ஐயமில்லை. இவ்வகையில் திருக்குறள் மேற்கோள்களைப் பாகுபாடு செய்தால் மேற்கோள்களைப் பயன்படுத்திய ஆசிரியர்களின் நோக்கமும் முறையும் மென்மேலும் தெளிவாகும்.

இலக்கணக் கோட்பாடுகளை விளக்குதற்காகவே பெரும் பகுதித் திருக்குறள் மேற்கோள்கள் உரையாசிரியர்களால் எடுத்தாளப் பெற்றுள்ளன. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திலக்கணக் கொள்கைகளையும் விளக்குதற்கு ஏறக் குறைய இரண்டாயிரம் திருக்குறள் மேற்கோள்கள் கையாளப் பட்டிருக்கின்றன. இவற்றுள்ளும் சொல்லிலக்கணக் கோட்பாடுகளின் விளக்கத்திற்காக எடுத்தாளப்பட்டுள்ள மேற்கோள்கள் மட்டும் ஆயிரத்திருநூறு என்பது குறிப்பிடத்தக்கதாகும். உரை விளக்க நோக்கில் ஏறத்தாழ இருநூறு மேற்கோள்களும், ஒப்புமை விளக்கத்திற்கு நூறு மேற்கோள்களும் எடுத்தாளப் பட்டுள்ளன. ஆனால் ஏனைய இருகாரணங்களுக்காகப் பயன் படுத்தப்பட்டுள்ள திருக்குறள் மேற்கோள்கள் மிகச்சிலவென்பது (2%) அறிய வேண்டியதொரு செய்தியெனலாம். ஏறக்குறைய ஐம்பது மேற்கோள்களே தொன்மொழி விளக்கத்திற்காகவும், முதற்குறிப்பு விளக்கத்திற்காகவும் எடுத்துக்காட்டப்பட்டுள் ளமை இதனை விளக்கும். சொல்லிலக்கண விளக்கத்திற்குப் பயன் படுத்தப்பட்டுள்ள மேற்கோள்களின் எண்ணிக்கையோடு (52%) இதனை ஒப்புநோக்கினால் உரையாசிரியர்களின் உள்ளம் ஓரளவு புலப்படும். ஆயினும் தொல்காப்பியம், யாப்பருங்கலம், நன்னூல் போன்ற இலக்கணங்களின் உரைகளிலும், பத்துப்பாட்டு, சிலப் பதிகாரம், சீவக சிந்தாமணி போன்ற இலக்கியங்களின் உரை களிலும் காணப்படும் மேற்கோள்களையும் இவ்வகையில் தொகுத்து வகை செய்தால் பொருண்மை வகைப் பாகுபாட்டிற் குரிய அடிப்படை, உரையாசிரியர்களின் போக்கு, மேற்கோள் செய்யப்பட்டுள்ள முறை ஆகியவற்றைப் பற்றித் தெளிவாக வரையறுத்துக் கூறவியலும்.

இவ்வகையில் முயன்று தொகுக்கப்படும் மேற்கோள் விளக்க நூல்கள் எவ்வகைப் பயன்களைத் தந்துவிடக் கூடுமென்ற ஐய வினா எழுதல் இயல்பே. எனவே இத்தகைய நூல்களால் விளையும் சில நன்மைகளை விளக்குதல் மேற்கோளாட்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள உதவியாகும். இலக்கிய வரலாறு, இடம் விளங்கா மேற்கோள்களின் ஆராய்ச்சி, தனிப் பாடல்களின் தொகுப்பு, ஆகிய துறைகளில் மேற்கோளாராய்ச்சி பொதுவாக உதவுமெனலாம். இவற்றைச் சிறிது விளக்கமாகப் பார்த்தல் வேண்டும்.

இலக்கிய வரலாற்றில் தெளிவான அகநிலைச்சான்றுகளை மேற்கோள்கள் வழங்குமென்பது தமிழிலக்கிய வரலாறு காட்டும் அழிவற்ற உண்மையாகும். நூற்களின் கால எல்லை, உரையாசிரியர்களின் காலம், சமயம் ஆகியவற்றை உறுதி செய்யவும் மேற்கோளாராய்ச்சி நன்கு பயன்படும். இதற்குத் தரமுள்ள சில எடுத்துக்காட்டுக்களைக் கொடுக்கவியலும். தெய்வந் தொழாஅள் என்னும் குறட்பாவைத் (55)

''தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேருய்'' என்று சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையில் (22: 59-61) எடுத்தாண்டுள்ளார். இந்த மேற்கோளாட்சியைக் கொண்டு திருக்குறள் காலத்தின் கீழெல்லை, மணிமேகலை காலத்தின் மேலெல்லை ஆகியவற்றை அறுதியிட்டுக் கூறலாம். அதாவது, திருக்குறளின் காலத்தை எவ்வாற்றானும் மணிமேகலையின் காலத்திற்குப் பிந்தியதாகக் கொண்டுவரவியலாது. இது போலவே மணிமேகலையின் காலத்தை எவ்வளவு முயன்றாலும் திருக்குறளின் காலத்திற்கு முந்தியதாகக் கொண்டு செல்லவும் முடியாது. இந்த அசைக்க வொண்ணு முடிபுகட்கு ஆதாரம் மேற்கோளாட்சியேயாகும்.

இனி உரையாசிரியர்களின் வரலாற்றில் மேற்கோளாராய்ச்சி பெருந்துணை புரிந்துள்ளமையையும் விளக்கத்தான் வேண்டும். மயிலைநாதரின் சமயத்தை ஆராய்ந்த டாக்டர் ஐயர் ''மயிலைநாதரென்னும் பெயரை உடைமையாலும் இவ்வுரையுள் சைன சமய

வழக்குகளையும் அச்சமய நூற் செய்யுட்களையும் ஆங்காங்கு எடுத்துக் காட்டியிருத்தலாலும், அருகதேவனைப் பலபடப் பாராட்டியிருத்தலாலும் இவர் சைன மதத்தினராக எண்ணப் படுகிறார்'' என்று குறிப்பிட்டுள்ளார்.[12] இதுபோலவே நச்சி னார்க்கினியரின் வரலாற்றை விரிவாக ஆராய்ந்த நாகமணியார் அவருடைய காலம், சமயம் பற்றிய ஆய்வில் மேற்கோளாட்சியை பயன்படுத்தியுள்ள அருமை பாராட்டிற்குரியது. இவர் தமது நூலில் ''தருமணற் றருப்பை யார்ந்த (சீவக.2468) என்ற செய் யுளுரையில் கபர்த்தி காரிகைச் சுலோகத்தை நம்மாசிரியர் எடுத் தாண்டிருக்கின்றார். இக்கபர்த்தி என்பவர் ஸம்ஸ்கிருத காவ்யங் களுக்கும் வேறுபல பிரபந்தங்களுக்கும் வியாக்கியானம் எழுதிப் பிரசித்திப் பெற்ற ஸ்ரீ மல்லிநாதருடைய தந்தையாரென்று டாக் டர் பந்தர்கர் முதலிய ஆராய்ச்சியாளர் கூறி ஸ்ரீ மல்லிநாதரது காலம் 13-ம் நூற்றாண்டின் பிற்பகுதியாம் என்று விளக்கியிருக் கின்றனர். அந்நூல் வழக்கத்தில் வர ஒரு நூற்றாண்டு சென்ற தெனக் கொள்ளின் நம்மாசிரியரும் 14-ம் நூற்றாண்டினரென்பது தெளிவாகும். 'ஓரெழுத்தொருமொழி' (மொழிமரபு. 45) என்னும் சூத்திரஉரையில் திருச்சிற்றம்பலம் ஆறெழுத்தொரு மொழி; பெரும்பற்றப்புலியூர் ஏழெழுத்தொருமொழி என்று உதாரணம் கூறி இருத்தலாலும், 'மேகமீன்ற' (சீவக : 362) என்னும் செய்யுள் உரையில் 'போக மீன்ற தான் சத்தியும் சிவனுமாய் உலகத்துக் கெல்லாம் போகத்தை உண்டாக்கிய புண்ணியன் என்றார், திரிபுரத்தை அழித்தும் நஞ்சுண்டும் பல்லுயிர்களையும் காத் தலின். எய்த கணை" திருமால் என்று கூறியிருத்தலாலும் ''பலி கொண்டு பேராத (சீவக. 653) என்ற செய்யுள் உரையில் .. சிவ துதிச்செய்யுளை எடுத்துக் கூறியிருத்தலாலும் (சீவக: 1141) வீடு மலி யுலகினர் (சீவக: 2483) என்ற செய்யுளுரையில் 'வீடுமலி உலகினவர்-சிவலோகம் பரமபதமென்கின்ற உலகிலுள்ள அரனும் அரியும்' என்று சிவலோகத்தையும் அரனையும் முதலிற் கூறியிருத் தலாலும், திருமுருகாற்றுப்படை உரையிற் காட்டிய சில நயங் களாலும், உரைகளிற் பலவிடங்களிற் சைவ சமயத்துச் சிறந்த நூல்களாகிய திருவாசகம், திருச்சிற்றம்பலக்கோவையார், திரு வுலாப்புறம் முதலிய நூல்களிலிருந்து இலக்கண இலக்கியப் பொருள்களுக்கும் தத்துவப் பொருளுக்கும் மேற்கோள்கள் எடுத்துக்காட்டியிருத்தலாலும் இவரது பெயராலும்'' இவரது

சமயம் விளங்குமெனத் தெளிவாக ஆராய்ந்து நிறுவியுள்ளார்.[18] இதுபோலவே இளம்பூரணர், பரிமேலழகர், தெய்வச்சிலையார் முதலிய பழைய உரையாசிரியர்களின் வரலாற்றுக்கும் இவ்வாசிரியர்கள் எடுத்தாண்ட மேற்கோள்களே அடிப்படையென்பது அனைவரும் அறிந்த செய்தியாகும்.

தமிழ் இலக்கிய, இலக்கண உரைகளில் இடம்விளங்காத மேற்கோள்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. சிலப்பதிகாரம் நன்னூல் ஆகியவற்றின் உரைகளில்மட்டும் ஆயிரத்துக்கு மேற்பட்ட இடம் விளங்காத மேற்கோள்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. இதுபோன்றே ஒவ்வொரு இலக்கிய இலக்கண உரையிலும் ஓரளவு இடம் விளங்கா மேற்கோள்கள் காணப்படாமலில்லை. இவையன்றி, உரையாசிரியர்கள் அகநானூறு, நற்றிணையென்று எடுத்துக்காட்டும் பாடல்கள் வெளிவந்துள்ள பதிப்புக்களில் காணப்படவில்லை. களவியற் காரிகை உரையில் குறுந்தொகை நற்றிணை, நெடுந்தொகையென்று சுட்டிக்காட்டப்பெறும் பாடல்களில் சில பயிற்சியில் உள்ள பதிப்புக்களில் காணப் பெறுமை இதற்கு நல்ல சான்றாகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் நேர்ந்துள்ள பேரிழப்புக்களுக்கு அளவில்லை. எண்ணற்ற நூல்கள் மறைந்து போயின. கிடைத்த நூல்களில் சில முதலிலும், இடையிலும், கடையிலும் சிதைந்தும் குறைந்தும் காணப்படுகின்றன. சிலவற்றின் பெயர்களைக் கூட அறிய வழியில்லை. சிலவற்றின் பெயர்களில் பல்வேறு குழப்பங்கள் நிறைந்துள்ளன. முழுமையாகக் கிடைத்துள்ள நூல்களின் அமைப்பு முறைகளிலும், இடமாற்றங்களும், பாடவேறுபாடுகளும், இடைச் செருகல்களும் குறைவின்றி நிகழ்ந்துள்ளன. மேற்கோள்கள் முறையாகத் தொகுக்கப்படின் இடம் விளங்கா மேற்கோள்களின் தொகை குறைவதோடு மற்ற சிக்கல்களும் விளக்கமுற்றுத் தீர வழியுண்டு. பரிபாடலின் முதற்பாடல் இளம்பூரணர் உரையினுலும், பதிற்றுப்பத்துப் பாடல்கள் சில நச்சினார்க்கினியர் உரையினுலும், பழமொழியின் முதற்பாடல் மயிலைநாதர் உரையினுலும் கிடைத்துள்ளமை மேற்கோளாராய்ச்சியின் பயனல்லவா? களவியலில் காணப்பட்ட பாடல்கள் பாண்டிக் கோவையைச் சார்ந்தவையென்பதும், சிற்றடக்கமெனவும், சிற்றட

டகமெனவும் பிழைபட வழங்கப்பட்டுவந்த நூற்பெயர் சிற்றெட்டகமெனத் திருத்தமுற்றதும் களவியற்காரிகையின் மேற்கோள் ஆட்சியினுல் அல்லவா? தரவு, கொச்சகம் முதலிய உறுப்புக்களின் பாகுபாடு அறியவியலாதவாறு சிதைந்த நிலையில் கிடைத்துள்ள பரிபாடலில் இருபாடல்களுக்காவது உறுப்பமைப்பு கிடைத்தது இளம்பூரணரின் மேற்கோளாட்சியினுலன்றே? ''ஒண்டொடி யரிவை'' யென்னும் ஐங்குறுநூற்றுப் பாடலின் (172) ''உரவுக்கட லொலித்திரை போல'' என்ற திருந்திய பாடத்திற்கு இளம்பூரணரின் மேற்கோளாட்சியல்லவா காரணம்? இவற்றையெல்லாம் மேற்கோளாராய்ச்சியின் பயன் களென்னுமல் வேறெங்ஙனம் குறிப்பிடுவது?

மேற்கோள் விளக்க அகராதித் தொகுப்புக்களினுல் அனைத்து மேற்கோள்களும் இடம் விளங்கிவிடுமென்று உறுதியாகக் கூறமுடியாது. சில பாடல்களின் இடம் விளங்கவில்லை என்பதற்காக

''எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னுகும் - மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்'' என்று பரிமேழகர்

(குறள் : 392) எடுத்துக் காட்டுவதும்

''தென்னனது செங்கோற் செழியனது தென்பாண்டி
மன்னனது மான்றேர் வழுதியது - கன்னித்
துறைவனது தோலாப்போர் மாறனது தொல்லை
அறைகடனீர் வேலி யகம்'' என்று தெய்வச்

சிலையார் (தொல். சொல். 99) எடுத்துக் காட்டுவதுமாகிய இனிய பாடல்களையெல்லாம் புறக்கணித்துவிட இயலுமா? காலந்தோறும் உரையாசிரியர்களால் எடுத்தாளப்பட்டுள்ள இவைபோன்ற நயமுடைய மேற்கோள் பாடல்களை உரையாசிரியர்களின் கால அடிப்படையில் தனிப்பாடற்றெகுப்புக்களாகத் தொகுத்தல் பயனுள்ள இலக்கியப் பணியாகும். இத்தகைய பணி மேற்கோளடைவுகளின்றிச் செவ்வையாக அமையாதென்பது கூறுமலே விளங்கும்.

இனி திருக்குறள் ஆராய்ச்சிக்கு இந்த மேற்கோள் விளக்கம் எவ்வகையில் பயன்படுமென்பதைச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். திருக்குறளின் திருத்தப்பதிப்பாராய்ச்சி, திருக்குறளின் இலக்கண அமைப்பு, பொருள் விளக்கம் ஆகியவற்றிற்கு இம் மேற்கோள் விளக்கம் பேருதவி புரியக் கூடியதெனலாம். எனவே இக்கருத்துக்களைத் தனித்தனியே சற்று விளக்கமாகப் பார்த்தல் இன்றியமையாததாகும்.

திருக்குறளுக்கு உத்தேசமாக ஆயிரம் பாடவேறுபாடுகள் காணப்படுகின்றன. இவற்றுள் ஐம்பது விழுக்காடு உரையாசிரியர்கள் பயன்படுத்திய பலவகைப்பட்ட ஏடுகளால்விளைந்த வேறுபாடுகளாகலாம். ஏறக்குறைய முப்பத்தைந்து விழுக்காடு தற்செயல்வகைப் (accidental) பாட வேறுபாடுகளாகலாம்; குறைந்த அளவு, ஐந்து விழுக்காடேனும், குறிக்கோள் வகைப் (deliberate) பாடவேறு பாடுகள் இருத்தல் கூடும். எஞ்சியுள்ள பத்து விழுக்காடு மேற்கோளாட்சியினால் நிகழ்ந்த பாடவேறுபாடுகளென உறுதியாகக் கூறலாம். ஆகவே திருக்குறளின் பாடபேத ஆராய்ச்சிக்கு இம்மேற்கோள் விளக்கம் இன்றியமையாததாகிறது. பாடபேத ஆராய்ச்சியினால் திருக்குறள் மூலபாட அறுதியீடும், குறளேடுகளின் மரபுவழி வரையறையும் தெளிவுபடுமென்பதில் சிறிதும் ஐயமில்லை. எனவே இத்தகு ஆய்வுகள் திருக்குறளின் திருத்தப்பதிப்பிற்குரிய (Critical edition) நம்பகமான துணைச் சான்றுகளையும் வலியுறுத்தற்சான்றுகளையும் வழங்குமென்பதில் ஆய்வாளர்களின் இடையே கருத்து வேறுபாட்டுக்கு வழியில்லை.

திருக்குறளின் இலக்கண அமைப்பில் உண்டாகும் சிக்கல்களை எளிதில் தீர்ப்பதற்கு இம் மேற்கோள் விளக்கம் எவ்வகையில் உதவுமென்பதற்குத் தக்கதொரு உதாரணம் கொடுக்கவேண்டும். திருக்குறளில் தக்கவென்னும் சொல் செய்தக்க (466), நயத்தக்க (580), நோதக்க (805), வெறுத்தக்க (993), இளித்தக்க (1288) என்று ஐந்திடங்களில் வினையடிகளோடு தொடர்ந்து வந்துள்ளது. இவைகளைந்தும் தனிச் சொற்களா அல்லது தொடர் மொழிகளா என்றும் அவற்றின் இலக்கண அமைப்பு என்னவென்றும் வினாஎழு

தல் இயற்கை. ஆனால் இதற்குரிய விடையை "செய்தக்க அல்ல செயக் கெடு"மென்னும் குறட்பாவின் (466) மேற்கோளாட்சி எளிதில் விளக்கும். இப்பாடலை இரத்தினகவிராயர், சுப்பிரமணிய தீட்சிதர், சுவாமிநாததேசிகர், சிவஞானமுனிவர், இராமானுஜ கவிராயர் முதலிய உரையாசிரியர்கள் முதனிலைத் தனிவினைகள் வினையெச்சமாதலுமுண்டென்னும் கோட்பாட்டின் விளக்கத்திற்கு எடுத்தாண்டுள்ளனர். எனவே செய்தக்க முதலியன தொடர்மொழிகளென்பதும் அவற்றின் முதற்கண் நிற்கும் தனி வினைகள் செயவெனெச்சங்களென்பதும் எளிதில் விளங்கும். விளங்கவே எஞ்சி நிற்கும் தக்கவென்பது வினைமுற்றுப் பெயர் அல்லது பெயரெச்சமென்பது தானே விளக்கமுறும். இம்முடிபு

"சாவ என்னும் செயவென் எச்சத்
திறுதி வகரம் கெடுதலும் உரித்தே"

என்னும் தொல்காப்பிய (எழு. 209) உபலக்கணத்தால் இது அமையுமென்ற விதிவிளக்கமும் தெரியவருகிறது. இம் முடிபிற்கு மாருக இவற்றைத் தனிமொழிகளாகக் கொண்டு செய்தகு, நயத்தகு, நோதகு, வெறுத்தகு, இளித்தகு என்பவற்றை முதனிலைகளாகக் கொள்வாருமுளர். ஆனால் இம் முடிபைவிட முன்னைய முடிபு இருகாரணங்களால் சிறந்ததாகும்.

அ) தக்கவென்னும் சொல் திருக்குறளில் வினையடியோடன்றி "மனைத்தக்க" (51) என்பது போலப் பெயரடியோடு தொடர்ந்தும் வந்துள்ளது. செய்தக்கவென்பதற்குச் செய்தகுவென முதனிலை கொண்டது போல ஈண்டு மனைத்தகுவென்பதை முதனிலையாகக் கொள்ள முடியாது. காரணம் மனையென்பது தனிப்பெயர் என்பதேயாகும். ஆகவே இதற்கு வேறுமுடிபு கூற வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு முடிபு கூறுவதைக்காட்டிலும் ஒப்புடைய தொடர்களை ஒரே அடிப்படையில் பகுத்தாராய்ந்து ஒரு முடிபில் அடக்குதல் இலக்கண நெறியில் போற்றப்படுவதல்லவா?

ஆ) வள்ளுவர் தாமே பிறிதோரிடத்தில் (1018) "பிறர் நாணத்தக்கது" "அற நாணத்தக்க"தென விரித்துக் காட்டியுள்ளார். ஆசிரியர் ஈண்டு கொண்டுள்ள தொடரமைப்பினைப்

போலவே செய்தக்க முதலியவைகளையும் அமைத்துக் கோடலே திருக்குறளின் மொழிநிலைக்கு ஏற்றதென்பது இரண்டாவது காரணமாகும். இவற்றிற்கு மேலாக விளையும் துணைமுடிபே (corollary) கருதத்தக்கது. திருக்குறளில் 'போல்' என்னும் சொல் முப்பத்தாறு இடங்களில் வந்துள்ளது. இதனை உவம இடைச் சொல்லென எளிதில் கூறிவிடலாம். ஆனால் இது வினையடியாகத் தோன்றியதொரு சொல் என்பதையும், அனைத்திடங்களிலும் இது வினையடையாகவே நிற்கிறதென்பதையும், இதன் தொடரியல் உறவு இயல்பாக விளக்கப்பட வேண்டுமென்பதையும் மறந்து விடக்கூடாது. வினையெச்ச விகுதியின்றித் தனிவினை முதனிலை கள் செய்தக்க முதலியவற்றில் நின்றவற்றை வினையெச்சங்களெ னக் கொண்ட முடிபோடு போலென்னும் சொல்லையும் இயைத்து எண்ணினால் இதனை வினையெச்சமெனக் கொள்ளுதலில் வழு வில்லையென்பது எளிதிற் புலனாகும். இத்தகைய இலக்கண முடிபுகட்கு உறுதுணையாவது திருக்குறள் மேற்கோள் விளக்க மென்பதே இங்கு நாம் நினைவிலிறுத்த வேண்டிய செய்தி.

திருக்குறளின் பொருள் விளக்கம் உரைகளின் வளர்ச்சி யால் நாளும் செழித்ததென்பது முன்பே வலியுறுத்தப்பட்டது. திருக்குறள் உரையாசிரியர்களேயன்றிப் பிற இலக்கிய இலக்கண உரையாசிரியர்களும் குறட்பாக்களின் பொருட் சிறப்பில் ஈடு பட்டுத் தாம் எடுத்தாளும் குறட்பாக்களுக்கு ஆங்காங்கு உரை யெழுதியுள்ளனர். இவர்களுள் தொல்காப்பிய உரையாசிரியர் களும், அடியார்க்கு நல்லார், மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், வீரமாமுனிவர் போன்ற உரையாசிரியர்கள் குறிப்பிடத்தக்கவ ராவர். இத்தகைய உரைப்பகுதிகளின் சிறப்பு நிலையை உணர்ந்து கொள்ள ஒரு எடுத்துக்காட்டு தருவது நல்லது. ''பெயர் வினை யும்மை''யெனத் தொடங்கும் நன்னூல் நூற்பாவின் (360) உரையில்

''இணரெரி தோய்வன்ன வின்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று'' என்புழிப் பிறவுயிர்க்கு இன்னா செயின் அவை பிழையாது தமக்கு வருதல் கருதித் தம் மாட்டன்பும் பிறவுயிர்கண்மாட்டு அருளும் இன்னா செய்தலான் மேன்மேல் வளரும் பிறப்பிறப்பின் அச்சமும், நம்மாலின்னா

செயப்பட்டாரை நாமடைந்திரத்தல் கூடினும் கூடும். அதனால் யார் மாட்டுமின்னா செய்யக் கடவமல்லமென்னும் வருங்கால உணர்ச்சியும் இலராய் ஒருவர் தன்னாற்றல் கூடாத இன்னாதவற்றைத் தன் கண் செய்தாராயினும் அவர் தமக்கு வேண்டுவதோர் குறை முடித்தல் கருதி நாணாது தன்னை அடைந்தாராயின் அவர் செய்த இன்னாமை கருதி அவரை வெகுளாது அவற்றை மறந்து அவர் வேண்டும் குறை முடித்து முன் செய்த இன்னாமையால் அவர் கூசியொழுகுதல் தவிர்தற்குக் காரணமாகிய மெய்ப்பாடு முதலின தன் கண் குறிப்பின்றி நிகழ அவர்க்கினியனாகியிருத்தல் தன் சார்புக்கு நன்றென நால் வகைச் சொற்களுள் வேண்டுவனவெல்லாம் தந்து அகலம் கூற வேண்டி நிற்பன இசையெச்சமாம் என்க'' என்று சங்கரநமச்சிவாயர் செய்துள்ள விரிவுரை [14] படித்தின்புறத்தக்கதல்லாவா? இது போன்ற நயவுரைகள் அனைத்தையும் தொகுத்தாலன்றி உரைவளம், உரைக்கொத்து, உரைவேற்றுமை போன்ற நூல்களெல்லாம் முற்றுப் பெற்றவையாகா. இவை போன்ற பயன்களை அறியவும், திருக்குறளின் செல்வாக்கையுணர்வும், திருக்குறட் பதிப்புக்களை மதிப்பிடவும், பதிப்பாளர்களின் உத்தி முறைகளை அறியவும் மேற்கோளாராய்ச்சி பெருந்துணை புரியுமென்றால் அது மிகைக் கூற்றாகாது.

இனி இந்த முன்னுரையில் இறுதியாகக் குறிப்பிட வேண்டியது இந்நூலாக்க முயற்சியில் எனக்குப் பல வகைகளில் உதவி செய்தவர்கட்கு நன்றி கூறலாகும். இஃதின்றி முன்னுரை முற்றுப் பெறுதல்லவா?

இந்நூலுக்குரிய திட்டங்கள் சிலவற்றை வகுத்துக் கொடுத்ததோடு இதன் கையெழுத்துப் பிரதியை ஒருமுறை படித்துப் பார்த்துப் பயனுள்ள சில திருத்தங்களையும், அரியதொரு அணிந்துரையையும் என் பேராசிரியர் டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம் வழங்கியுள்ளார். அவருடைய ஊக்க மொழிகளின்றேல் இந்நூல் உருவாகியிருக்க முடியாதெனலாம். எனவே அவருக்கு என் இதய நன்றியை முதற்கண் கூறிக்கொள்கிறேன்.

மேற்கோளடைவு, விளக்கம் முதலியவற்றை மூலநூல்களோடு ஒப்பிட்டு நோக்கிப் பல்வகைத் திருத்தங்களை உரிமை

யோடு செய்துதவியவர் புலவர் பி. பட்டுசாமி ஆவார். அவருடைய அயரா உழைப்பு என் பணியைப் பகுதியாகக் குறைத்த தென்றே கூறலாம். அன்னாருக்கும் என் உளங் கனி நன்றியைத் தெரிவிக்கக் கடப்பாடுடையேன்.

இந்நூலின் கையெழுத்துப் பிரதி முழுமையும் ஒருமுறை நோக்கி முன்னுரையிற் காணும் முடிபுகளிலும் நூலின் அமைப்பு முறையிலும் நல்ல பல திருத்தங்களை என் நண்பர்கள் பலர் கூறி உதவினார்கள். அவர்களுள் நண்பர்கள் செ. வை. சண்முகம் இராம. சுந்தரம், ந. குமாரசாமி ராஜா, பா. ரா. சுப்பிரமணியம், இரா. பன்னீர்செல்வம், கி. நாச்சிமுத்து, த. ப. சீனிவாசன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவராவர். இவர்களுடைய கருத்துக் களின் செல்வாக்கு நூல்முழுதும் பரந்து கிடக்கிறதென்பது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை. தம்முடைய பெரும் பணி களுக்கிடையே காலத்தின் அருமை கருதாது எனக்கு இப்பேரு தவியைச் செய்த இந்த நண்பர்கள் அனைவர்க்கும் என் நெஞ்சு நிறை நன்றி என்றென்றும் உரியதாகும்.

அச்சுப்பிரதிகளை ஒப்புநோக்கும் பணியை அன்போடு ஏற்றுதவிய நண்பர்கள் இராம. சுந்தரம், சு. சக்திவேல் ஆகியோருக்கும், குறித்த காலத்தில் அழகாகப் பதிப்பித்துத் தந்த சிவகாமி அச்சகத்தார்க்கும் என் அகங்கனிந்த நன்றியைப் புலப் படுத்திக் கொள்கிறேன்.

மேற்கோள் விளக்கத் துறை புதியது; மேலும் வளரவேண்டியது. இத்துறையில் என்னுடைய முதல் முயற்சி இந்நூல்; ஆர்வத்தின் விளைவு. எனவே இதன் கண் சிற்சில குறைபாடுகள் காணக்கூடும். அப்போதெல்லாம்

“நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்” என்னும் வள்ளுவத்தைத்

(373) தமிழறிஞர்கள் நினைத்துக்கொள்வார்களாக.

திருமூலத்தானம்
20—12—'70

இன்னணம்
அ. தாமோதரன்

அடிக்குறிப்புக்கள்

1. ச. தண்டபாணி தேசிகர், திருக்குறள் உரைவளம் தருமை யாதீன வெளியீடு, முதற்பகுதி (1950), மதிப்புரை.

2. அ.) உ. வே. வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யர், திருக்குறள், திருவல்லிக்கேணி, சென்னை-5 (1965).

   ஆ) ச. தண்டபாணி தேசிகர், திருக்குறள் உரைவளம் தருமையாதீன வெளியீடு, முதற்பகுதி (1950), இரண்டாம் பகுதி (1951), மூன்றும் பகுதி (1952)

   இ) கி. வா. ஜகந்நாதன், திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், கோவை (1963)

3. ம. ஆ. நாகமணி, தொல்காப்பியப் பொருளதிகார மேற்கோள் விளக்க அகராதி முதலியன, சாது அச்சுக்கூடம், சென்னை (1935)

4. அ. இரத்தினசபாபதி, 'குறள்மலர்', கோலார். தங்கவயல், (1965)

44. இல்லெலன்னும் ஐம்பால் மூவிடப் பொதுச்சொல் ஒன்றன்பாற் கண் வந்தமைக்கும் a, இல்வாழ்க்கையென்பது வாழ்க்கை யென நிற்பது குறையென விளக்கற்கும் b, செய்யுள் விகாரத்தால் சிதைந்ததனுல் மொழி வருவித்தலை விளக்க வும் c, இல்லையென்னும் ஐம்பால் மூவிடப் பொதுச் சொல் செய்யுளாதலின் இல்லெனக் கடைக்குறைந்து நின்றதெனற் கும் d மேற்கோள்.

48. விப்பியின்றித் திரிந்து ஒற்றுப்பெற்றுவரும் இயல்பு ஏவல் கருத்தாவின் வினைக்கு $ மேற்கோள்.

50 இல்லறத்தின் மறுமைப்பயன் இப்பாடலால் கூறப்பட்ட தெனச் சுட்டற்கும் a, இடமல்லா இடம் மூன்றனுள் பிரித்துக் கூட்டல் என்பதற்கும் b மேற்கோள்.

51. கழிவினும், நிகழ்வினும், எதிர்வினும் வழிகொளச் செவிவி நல்லவையுரைத்தற்கும் a, அறியவர்க்கும் உரியதாகிய நல் லவையுரைத்தற்கும் b, குணத்தின் பெயர் குணிமேல் நின்ற தென்ற பரிமேலழகர் உரையை விளக்கவும் c, விரவுப் பெயர்க்கண் இரண்டனுருபு தொக்கதற்கும் d, விரவுப் பெயர்க்கண் உறழப்படுவதாகிய இரண்டனுருபு திரிந்தே வருதலும் உண்டெனற்கும் e, தன்னினமுடித்தலென்னும் உத்தியால் சுட்டுமுதலாகிய காரணச் சொல்லும் சுட்டுப் பெயர் இலக்கணத்தின்பாற் படுமெனற்கும் f மேற்கோள்.

52. அறிவர் தலைவியைக் கழறியுரைத்தற்கு $ மேற்கோள்.

53. குணம் குணியாக வந்தமைக்கும் a, பகாப்பதங்கள் பகுபதங்களாகப் பொருள் கொள்ளப்படுதல், அது தமிழ் நூலாரால் ஆகுபெயருள் அடக்கப்பெறுதல் ஆகியவற்றை விளக்கவும் b மேற்கோள்.

55. கழிவினும், நிகழ்வினும், எதிர்வினும் வழிகொளச் செவிலி நல்லவையுரைத்தற்கும் a, கற்புடைப் பெண்டிரின் திறம்கூறற்கும் b, அறிவர்க்கும் உரியதாகிய நல்லவையுரைத்தற்கும் c, எனவெனச்சத்திற்கும் d, செய்தெனெச்சம் முன்பின்னாக நிற்றற்கும் e, தொழுதெழுவாளென்ற தொடருக்குத் தொழா நின்றெழுவாளெனத் துணைவினையாக விரித்துரைத்த பரிமேலழகர் உரையினை மறுப்பதற்கும் f, புணர்ச்சியில் விகாரத்துள் நிலைமாறுதலை விளக்கவும் g, எனவென்பது ஈண்டு எனவெனெச்சமன்றென மறுத்துக்கூறி அது இடைச்சொல்லடியாகப் பிறந்த செயவெனெச்சமென விளக்கவும் h மேற்கோள்.

56. கழிவினும், நிகழ்வினும், எதிர்வினும் வழிகொளச் செவிலி நல்லவையுரைத்தற்கும் a, புகழ்புரிந்தென்ற பாடலின் (குறள். 59) கருத்தை இவ்வாசிரிய மொழிகொண்டு விளக்கவும் b, அறிவர்க்கும் உரியதாகிய நல்லவையுரைத்தற்கும் c, விரவுப் பெயர்கண் இரண்டனுருபு தொக்கதற்கும் d மேற்கோள்.

57. காப்பு இரண்டனுள் நிறைகாவல் என்பதற்கும் a, சிறைகாவலென்பது தடுத்துக் காத்தலெனப் பொருள்படுதற்குச் சான்றாகவும் b, பாவிக அணிக்கும் c, எவனென்பது அஃறிணை வினாவாக வந்தமைக்கும் d, மேற்கோள்.

59. உவமையின் உயர்ச்சியான் பொருட்கும் உயர்ச்சி தோன்றிற்றெனற்கும் a, செய்தவென்னும் பெயரெச்ச வாய்பாட்டின் ஈற்றகரம் செய்யுள் விகாரத்தால் தொக்கதற்கும் b, தான் முன்னறிந்ததற்கு இது மாறாயின் என்னால் விதியோவென்று எண்ணுக என்பதனை விளக்கவும் c மேற்கோள்.

60. மணியென்பது ஆகுபெயரென்று ஒப்புமை காட்டி விளக்கு தற்கு $ மேற்கோள்.

61. பாவிக அணிக்கும் a, அல்லவென்பது ஈண்டு வினையெச்ச மாதல்போலன்றி அணியல்ல என்றவிடத்து (குறள்.95) வினை முற்று என்பதற்கும் b, வினைமுற்றுப் பெயர் தொழிற்பெயரா யதற்கும் c மேற்கோள்.

63. மகரக்குறுக்கம் வந்தமைக்கும் a, சிறப்பின்கண் உயர்திணை அஃறிணையாகிவந்த திணைவழுவமைதி எனற்கும் b, தாமென் பது தம்மென முதனிலை திரிந்து நின்று பன்மைப் பொருளு ணர்த்தியதற்கும் c மேற்கோள்.

64. மருட் செந்தொடைக்கும் a, விகற்பத் தொடையான் வந்த விகற்பக் குறள் வெண்பாவிற்கும் b, வெண்பாவின் ஈற்றயற் சீராக நிரையீற்றியற்சீர் நின்று நேரசைச் சீரோடு தளை கொள்ளுதற்கும் c, உயர்வு சிறப்பும்மை விளக்கத்திற்கும் d, வடமொழி ரகரம் தமிழில் ழகரமாதற்கும் e மேற்கோள்.

65. சுட்டுப்பெயர் வந்தமைக்கு $ மேற்கோள்.

66. குற்றியலிகரம் வந்தமைக்கும் a, குற்றியலிகரம் ஒற்றியற்றுகி அலகு பெறுமைக்கும் b, முன்மொழி ஆகுபெயராய் வந்த பண்புத்தொகைக்கும் c, குற்றியலுகரம் யகரத்தின் முன்னர் இகரமாகியதற்கும் d மேற்கோள்.

69. கேட்ட தாயென்பதனுல் அறிவறிந்தவென்பது பெண்மொழி மிகுசொல் லெனற்கு $ மேற்கோள்.

70. தந்தையென்பது ஒருமை, பன்மையாகிய இருமைக்கும் பொதுவெனற்கு $ மேற்கோள்.

71. அடியெதுகைக்கும் a, அனுமான அளவை வந்தமைக் கும் b மேற்கோள்.

72. மூன்றனுருபு விகாரத்தால் தொக்கு வந்தமைக்கு $ மேற் கோள்.

74. மெல்லின எதுகைக்கு a மேற்கோள்.

75. விகுதி பிரித்துக் கூட்டலை விளக்கற்கு $ மேற்கோள்.

76. எதுகை முரணுக்கும் a, வெட்சி முதலிய புறத்திணைகளும் அன்பொடு புணர்ந்தனவேயென விளக்கற்கும் b, துணையென்னும் அஃறிணைச் சொல் இருதிணைக்கண்ணும் நின்று ஆக்கம் கொடுத்து உரைசெய்யப்படுவதெனற்கும் c, குகரவுருபு இடையில் ஏற்ற சொல் பெற்றுப் பொருள் செய்யப்பட்டுத் துமர்த்தப் பொருளாதற்கும் d, மேற்கோள்.

77. அறம் கொல்லுமென்ற உண்மையை விளக்கவும் a, பாவிக அணிக்கும் b மேற்கோள்.

78. அன்பு உயிர்க்குணங்களுள் ஒன்றெனற்கு $ மேற்கோள்.

79. அன்பு என்னும் மெய்ப்பாட்டிற்கு $ மேற்கோள்.

82. பாவிக அணிக்கு $ மேற்கோள்.

84. அமர்தலென்பது மேவலெனப் பொருள்படும் உரிச்சொல்லெனற்கும் a, காரண காரியப் பொருளின்றிச் செய்தெனச்சம் சினைப்பொருட்கண் நின்று வினைமுதலோடு முடிதற்கும் a, மகரனகர மொழியிறுதிப் போலியை விளக்கற்கும் c, இடவாகு பெயர்க்கும் d மேற்கோள்.

86. இடவழுவமைதிக்கு $ மேற்கோள்.

87. சால்பின் வரைத்து என்ற தொடர் (குறள். 105) விருந்தின் துணைத்துணையென்பது போல அவரவர் குணத்தன்மையை விளக்குவதெனற்கு $ மேற்கோள்.

90. சுட்டிக் கூறு உவமத்திற்கும் a, செயவெனெச்சம் பிறிதின் வினையும் நிகழ்காலமும் கொண்டு முடிதற்கும் b, செயவெனெச்சம் பிறிதின் வினை கொண்டு முடிதற்கும் c, மோப்பவென்பது கருத்தாவைப் பற்றி முடிதலின் நிகழ்கால வினையெச்சமெனற்கும் d மேற்கோள்.

91. பாவிக அணிக்கும் a, ஆலுருபு அசைநிலையாயதற்கும் b மேற்கோள்.

94. துவ்வாமையென்பது வறுமையெனப் பொருளாதற்கு $ மேற்கோள்.

95. செவியுறைச் செய்யுட்கு $ மேற்கோள்.

98. நீக்கப்பொருள் புறப்பாட்டெல்லைக்கண்ணும் வருமெனற்கும் a, ஐந்தனுருபின்கண் நீக்கப்பொருள் வந்தமைக்கும் b, ஐந்தனுருபின் நீக்கப்பொருள் பண்பை நிலைக்களனாகக் கொண்டு வருதற்கும் c மேற்கோள்.

99. பண்பும் புலனும் மாறி வந்தமைக்கு a மேற்கோள்.

100. வெண்பாவின் ஈற்றயற் சீராக நிரையீற்றியற்சீர் நின்று நேர்பசைச் சீரோடு தளை கொள்ளுதற்கும் a, உவமை, பொருள் என்ற இரண்டனுள் பொருளாகிய ஒரு வழிக்கண் அடைமொழி வந்தமைக்கும் b, பண்பு பிரித்துக் கூட்டலை விளக்கவும் c மேற்கோள்.

102. பாடுபெறுதியோ (குறள். 1237) என்ற தொடருக்கு இவ்வாசிரிய'மொழி கொண்டு நயவுரை கூறவும் a, மூன்றனுருபு ஏழன்பொருளில் வந்து உருபேற்ற சொல்லும் உருபுநோக்கிய சொல்லும் தம்முளியையாது நிற்றற்கும் b, உருபு மாறுபட நிற்றற்கும் c மேற்கோள்.

105. படுசொல் படுபொருளல்லாத வேறு பொருளில் வந்தமைக்கும் a, படுசொல் தன் பொருட்கும் பிறபொருட்கும் பொதுவாய்ப் பொருந்துமெனற்கும் b மேற்கோள்.

108. பொருள் விளங்க இருத்தலான் இது புலனென்னும் உயிர் வந்த பாடலெனற்கும் a, விளங்கச்சொல்லல் என்னும் தந்திர குணத்திற்கும் b, வெண்பாவின் ஈற்றயற்சீராக நிரையீற்றியற்சீர் நின்று நேர்பசைச்சீரோடு தளை கொள்ளுதற்கும் c, மறவி உயிர்க்குணங்களுள் ஒன்றெனற்கும் d, மேற்கோள்.

109. விகற்பமும் இனமும் வாராமையின் இது செவ்வெதுகை என்பதற்கும் a, அன்னவென்னும் உவம இடைச்சொல் வினையுவமைக்கு வருமெனற்கும் b, வினையுவமத்தின் வகையெனற்கும் c, தொகைகட்குப் புணர்ச்சிவிகற்பத்தால் வரும் குறிகளுள் நித்தமென்பதற்கும் d, பெயரெஞ்சு அணி என்பதற்கும் e மேற்கோள்.

110. மூவகையினுற் சீராகி அவ்வளவில் ஓசையற்று நின்றதெனற்கும் a, கொன்றவென்பது சிதைத்தவெனப் பொருள்படுவதற்கும் b, பாவிக அணிக்கும் c, நான்கனுருபின் கொண்டு முடியும் சொல் செய்யுட்கண் முற்பட்டு நின்றமைக்கும் d மேற்கோள்.

111. தகுதி நடுவுநிலைமையெனப் பொருள்படுதலை இவ்வாசிரிய மொழிகொண்டு விளக்கவும் a, ஆனுநபு தோறுமென்னும் பொருள்படுவதற்கும் b மேற்கோள்.

113. பாவிக அணிக்கு $ மேற்கோள்.

114. வல்லின எதுகைக்கும் a, கடையாகு எதுகைக்கும் b, பெயரடுக்கி வந்தமைக்கும் c, இன எதுகைக்கும் d மேற்கோள்.

117. வினை முதனிலைதானே வினையை உணர்த்தும் தொழிற்பெயராய் நிற்றற்கும் a, கெடுவென் முதனிலை பொருள் விரிந்து சொல் விரியாது வந்த முதனிலைத்தொழிற்பெயரெனற்கும் b, புடைபெயர்ச்சியை உணர்த்தும் 'தல்' விகுதி கெட்டு கெடுவென நின்றதெனற்கும் c மேற்கோள்.

118. கட்டமையொழுக்கக் கண்ணுமைக்கண் நடுவுநிலைமையென்பதற்கும் a, நடுவுநிலைமையென்னும் மெய்ப்பாட்டிற்கும் b மேற்கோள்.

119. வினைச்சொல் எழுவாயாய் நின்றமைக்கு $ மேற்கோள்.

120. வணிகவேளாளர்கட்குரிய வாணிகச் சிறப்பிற்கு $ மேற்கோள்.

121. ஒரு சொல் நீர்மைத்தாகிய உய்த்துவிடும் என்பதற்கு உய்த்துவிடுவென்பதனை முதனிலையாகக் கொள்ளுதற்கும் a, உய்த்துவிடுமென்பதனைப் பரிமேலழகர் ஒரு சொல்லாய் நின்றதெனக் கூறுதற்குக் காரணம் சில விகுதிகள் முதனிலைத் தன்மைப்பட்டு மேல் வரும் விகுதிகளையேற்று நிற்றலேயாகுமென விளக்கற்கும் b மேற்கோள்.

124. மெய்யடக்கமென்னும் மெய்பாட்டிற்கு $ மேற்கோள்.

125. காதைகரப்பு வகைச் செய்யுளுள் போந்த செய்யுளாக வும் a, குவ்வுருபு தகுதிப் பொருளில் வந்தமைக்கும் b, வினைச்சொல் எழுவாயாய் நின்றமைக்கும் c மேற்கோள்.

126. கட்டமையொழுக்கக் கண்ணுமைக்கண் அடக்கமுடை மைக்கும் a, மனவடக்கமென்னும் மெய்ப்பாட்டிற்கும் b, நாலிரு வழக்கின் தாபதபக்கத்துள் தொகைநிலைக்கும் c, பாவிக அணிக்கும் d, ஒருமை, எழுமையென்பன எண்ணுப் பொருளன எனற்கும் e மேற்கோள்.

127. நெட்டெழுத்து மிக்க வந்த பாடற்கும் a, மொழியடக்க மென்னும் மெய்ப்பாட்டிற்கும் b, யாவென்பது வினுவாகி வினையொடு புணர்ந்து அஃறிணை இருபாலுக்குமேற்ப வருமெனற்கும் c மேற்கோள்.

128. ஆயினுமென்பது ஆனுமெனக் குறைந்து நின்றதெனற்கும் a, ஆனுமென்பது செயினெச்சப் பொருள்படுவதோர் இடைச் சொல் என்றுவது ஆயினுமென்பதன் இடைக் குறை என்றுவது கொள்கவெனற்கும் b மேற்கோள்.

131. கட்டமையொழுக்கக் கண்ணுமைக்கண் ஒழுக்கமுடை மைக்கு a மேற்கோள்.

133. குடிமையென்பது குடிப்பிறப்பிற்கேற்ற ஒழுக்கமென்ற பொருள் விளக்கத்திற்கு a மேற்கோள்.

134. பாவிக அணிக்கும் a, எதிர்மறையும்மைக்கும் b மேற்கோள்.

137. செய்தெனெச்சத்தின் கொண்டுமுடியும் சொல் செய்யுட்கண் முற்பட்டு நின்றமைக்கு $ மேற்கோள்.

140. திறனறிந்து சொல்லுதல் அறமாவது யாங்ஙனமென்பதனை இவ்வாசிரிய மொழிகொண்டு விளக்கவும் a, மூன்றனுருபாகிய 'ஒடு' உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தமைக்கும் b, மூன்றனுருபாகிய 'ஒடு' வினைமுதற் பொருளில்வந்தமைக்கும் c மேற்கோள்.

141. செவ்வெண்ணின் தொகை தொக்கதென்னும் உரையை விளக்கற்கு $ மேற்கோள்.

142. உண்டென்பதன் மறைப் பொருண்மையாய் இல்லென்னும் பொருட்டாய்ப் 'பேதையார் இல்' என்பதுபோல இல வென்பது (குறள். 4) நின்றதெனற்கும் a, ஐம்பால் மூவிடப் பொதுச்சொல்லாகிய இல்லென்பது படர்க்கைப் பன்மையில் நின்றமைக்கும் b, இடமல்லா இடவகை மூன்றனுள் கூட்டிப் பிரித்தலுக்கும் c மேற்கோள்.

143. ஐம்பால் மூவிடப் பொதுச்சொல்லாகிய வேறென்பது படர்க்கைப் பன்மையில் நின்றமைக்கு a மேற்கோள்.

144. அகப்பொருளில் அறக்கழிவுடையதாகிய பிறன்மனைக் கூட்டம் ஒழித்தற்குரியதெனற்கும் a, செறற்கண் பலர்பால் ஒன்றன்பாலாக மயங்கிவந்த பால்,திணை வழுவமைதிக்கும் b, ஒருமையிற் கூறினும் பன்மைப் பொருளுணர்த்தும் மெய்ந்நிலை மயக்கத்திற்கும் c, தேரான் பிறனென்னும் தொடர் தேராத பிறனெனப் பொருள்பட்டமையினைச் சொற்சோதனை செய்தற்கும் d, முற்றுப் பெயர் எச்சப்பொருள் பட்டமைக்கும் e மேற்கோள்.

146. கருமகருத்தாவினை விளக்கற்கும் a, எனவென் எண்ணிடைச் சொல் ஓரிடத்து நின்று பொருள்தோறும் பிரிந்து சென்றியைந்தமைக்கும் b, பின்னவையகத்திணை என்பதற்கும் c, ஏழுனுருபின் கொண்டு முடியும் சொல் செய்யுட்கண் முற்பட்டு நின்றமைக்கும் d மேற்கோள்.

147. பெண்மையென்பது மகளேச் சுட்டாமல் கட்புலனுயதோர் அமைதித் தன்மையைச் சுட்டி நின்றதெனற்கும் a, தன்மை யுணர்த்தும் தன்மைக் குறிப்புப் பெயர் விளக்கத்திற்கும் b, வினைமுற்றுப்பெயர் வடிவமாற்றம் பெறுதலினையும், அவ் வடிவமாற்றம் ஈற்றயற்கே பொருந்துவதென்பதனையும் விளக்கற்கும் c, வினைமுற்றுப்பெயர் ஈற்றயற்றிரிபு பெற்ற மைக்கும் d மேற்கோள்.

148. கடிமனை நீத்துபக்கமாகிய பிறனில் விழையாமைக்கும் a, கட்டமையொழுக்கக் கண்ணுமைக்கண் பிறனில் விழை யாமைக்கும் b மேற்கோள்.

149. உருபும் பயனும் உடன்தொக்க வேற்றுமைத் தொகைக்கு $ மேற்கோள்.

150. பாவிக அணிக்கு $ மேற்கோள்.

151. பிழைத்தோர்த் தாங்கும் காவலென்பதற்கும் a, பாவிக அணிக்கும் b, இடம் கருத்தவாகி நின்றதென்பதனை மறுத் தற்கும் c, விகாரத்தால் உயர்திணை மருங்கினுெழிந்து 'லுக்கு' வருமெனற்கும் d, அல்வழிக்கண் தனிக்குறிலல்லாத லகரம் தகரத்தோடு புணருங்காலைத் திரிதற்கும் e மேற்கோள்.

154. நிறையும் பொறையும் உயிர்க்குணங்கள் எனற்கு $ மேற்கோள்.

155. இடநோக்கிப் போந்த பொருள் கொள்ளுதல் வடமொழியில் உசிதமெனப்படுமெனற்கும a, சேர்ந்தாரென்பது சொல்லெச் சமென்றதன் (குறள். 10) காரணம் ஈண்டு வந்துள்ளது போலச் செயப்படுபொருட்கண் பொருள் பெற்றுச் சொற் பெருமையென விளக்கற்கும் b, வினைமுற்றுப்பெயர்க்கண் உருபுபெறல் வந்தமைக்கும் c, வினைமுற்றுப்பெயர் இரண் டனுருபேற்றுச் செயப்படுபொருளாயினமைக்கும் d மேற் கோள்.

156. வினைமுற்றுப்பெயர் நான்கனுருபேற்றுக் கொடைப் பொருட் கண் வந்தமைக்கு $ மேற்கோள்.

158. கட்டமையொழுக்கக் கண்ணுமைக்கண் பொறையுடைமைக்கும் a, மிகையென்னும் மெய்ப்பாட்டிற்கும் b மேற்கோள்.

161. கட்டமையொழுக்கக் கண்ணுமைக்கண் அழுக்காறுமைக்கு a மேற்கோள்.

165. கேடுபயத்தற்கு அழுக்காறுதானே அமையும்; பகைவர் கேடு தருதல் தப்பியும் வருமெனப் பொருளுரைக்க வேண்டுதலின் வருமென்பது ஈண்டு எஞ்சி நின்றதெனற்கு $ மேற்கோள்.

166. இவ்வாசிரிய மொழிகொண்டு ஒழுக்கமிலான் சுற்றத்திற்கும் உயர்வில்லையெனப் பொருணயம் கூறுதற்கும் a, உடுப்பது, உண்பது என்பனபோலக் கற்றதென்பதும் (குறள். 2) செயப்படுபொருளாயிற்றெனற்கும் b, உடுப்பது, உண்பது என்பன செயப்படுபொருளாதல் போலன்றி 1079வது குறட்பாவில் அவை தொழின்மேல் நின்றனவெனற்கும் c, பெயரடியாகப் பிறந்த வினை வந்தமைக்கும் d, வினைமுற்றுப்பெயர் செயப்படுபொருளாக வந்தமைக்கும் e, செயப்படுபொருளாக நின்ற வினைமுற்றுப்பெயர் படுசொல்லின்றியும் படுபொருளாக விரிக்கப்படுதற்கும் f மேற்கோள்.

167 ஔகாரக்குறுக்கம் வந்தமைக்கும் a, காட்டிவிடுமென்பது செய்துவிடல் (குறள். 314) போல இருசொல்லெனற்கும் b, கொடைப்பொருள் இரண்டனுருபோடு மயங்கி வந்த உருபு மயக்கத்திற்கும் c பெயரடியாகப் பிறந்த வினை வந்தமைக்கும் d, உயர்திணைச் சாதியொருமைக்கும் e, அடிமுதற்கண் வரும் நெடிலாகிய ஔகாரம் வகரவொற்றடுத்து வந்த குறிலாகவே கருதப்பட்டு எதுகைத்தொடை கொள்ளப்படுதலை விளக்கவும் f, காட்டிவிடுமென்பதனைப் பரிமேலழகர் ஒரு சொல்லென்றுரைத்தாரெனற்கும் g மேற்கோள்.

168. பொருமையென்னும் மெய்ப்பாட்டிற்கும் a, இன்மையென ஒருபாவி (குறள். 1042) என்பதற்கு அழுக்காறெனை ஒரு பாவிக்கு உரைத்ததுபோல உரைசெய்கவென ஒப்புமை

காட்டி விளக்குதற்கும் b, உயிர்க்குணங்களுளொன்று அழுக்காறெனற்கும் c, எனவென்னும் இடைச்சொல் பெயர்ப் பொருண்மையில் வந்தமைக்கும் d, பாவிக அணிக்கும் e, ஒரு சொன்னீர்மைத்தாகிய உய்த்துவிடுமென்பீதன்கண் உய்த்துவிடு என்பதனை முதனிலையாகக் கொள்ளவேண்டுமெனற்கும் f மேற்கோள்.

169. செவ்வியென்பது நடுவுநிலைமையெனப் பொருள்படுதற்குச் சொற்சோதனையாகவும் a, ஈரெழுத்துக்கள் கூடி ஓரெழுத்துப் போல வரும் ஒளகாரப்போலியைப் போற்றுக்கால் செய்யுளியலிற் கொண்ட எதுகையொடு மாறுபட்டு இலக்கண வழு நிகழுமெனற்கும் b, தொடைநோக்கி செய்யுட்கண் வரும் ஒளகாரப் போலிக்கும் c, ஒளகாரக்குறுக்கம் மொழிமுதற்கண் ஒன்றரை மாத்திரையாய்க் குறுகுமெனற்கும் d மேற்கோள்.

170. 'இல்' 'இல்லை' என்பன இருசொற்களென்பதற்கும், அவற்றின் செய்யுள் வழக்கிற்கும் a, பெயரடியாகப் பிறந்த வினை வந்தமைக்கும் b மேற்கோள்.

171. குலத்திற் குன்றுதலென்பதனைச் சொற்சோதனை காட்டிப் பொருளுரைக்கவும் a, பாவிக அணிக்கும் b, வடநூலார் அகநிலைச் செயப்படுபொருளாகக் கூறுதலைத் தமிழ்நூலார் எச்சத்திரிபாகக் கொண்டு பொருளுரைத்தற்குச் சான்றுரையாகவும் c, எண்வகைப் பிறவினை அமைப்புக்களுள் முதனிலைதிரியாது அமையும் பிறவினையை விளக்கவும் d, இல்வாழ்வானென்பான் என்புழிப் படுவிகுதி தொக்கது போலத் தெரிந்து என்பதன்கண் (தொல். பாயி.) 'வி' விகுதி தொக்கதெனற்கும் e மேற்கோள்.

172. கட்டமையொழுக்கக் கண்ணுமைக்கண் வெஃகாமைக்கும் a, படுபொருளென்பது தன் தேட்டத்தால் மிக்கபொருள் என்று பொருளுரைத்தமைக்குச் சொற்சோதனையாகவும் b மேற்கோள்.

173. மற்றை இன்பமென்பது மற்றின்பமென நின்றதென்ற பரிமேலழகரின் உரையை மற்றெல்லாம் (குறள். 1033) என்பதனுரையோடு ஒப்புநோக்கி விளக்கவும் a, சீர்முழுதுமொன்றிய சிறப்புத் தலையாகெதுகைக்கும் b மேற்கோள்.

175. ஆய்தம் பயின்றுவந்த பாடற்கும் a, அடியெதுகைக்கும் b மேற்கோள்.

178. ஆய்தம் பயின்று வரும் நலிபு வண்ணத்திற்கு a மேற்கோள்.

181. கட்டமையொழுக்கக் கண்ணுமைக்கண் புறங்கூறுமைக்கு a மேற்கோள்.

182. வினையெச்சம் புடைபெயர்ச்சித் தொழிற்பெயர் கொண்டு முடிதற்கும் a, ஐந்தன் இன்னுருபு உறழ்ச்சிப் பொருளில் வந்தமைக்கும் b மேற்கோள்.

184. பாவிக அணிக்கும் a, ஒரு பொருளின் வினை மற்றொரு பொருளின் வினையாக வந்தமைக்கும் b மேற்கோள்.

185. விகுதி பிரித்துக்கூட்டலை விளக்கவும் a, முதல் வேற்றுமைத் தொகை வினைக்குறிப்புப்பெயராக வருவதற்கும் b மேற்கோள்.

187. விகாரத்தான் உயர்திணை மருங்கினொழிந்து 'லுக்கு' வருவதற்கும் a, விப்பியின்றித் திரிந்து ஒற்றுப்பெற்றுவரும் இயல்பு ஏவற் கருத்தாவின் வினைக்கும் b, பகுதிப்பொருள் விகுதியாய் வந்த ஏவற்கருத்தாவினையெனற்கும் c, சொல்லொன்றே தன்வினையும் பிறவினையுமாய் நிற்குமெனக் கூறித் தன்வினையாயதற்கும் d, செய்வியென் வினையுள் செய்வினையும் சிலவுளவென்பதற்கும் e மேற்கோள்.

189. இரண்டாம் வேற்றுமையின் நோக்கல் நோக்கப் பொருளோடு மூன்று ஐந்து ஆகிய வேற்றுமைகள் மயங்குதற்கும் a, இடம் கருத்தாவாயிற்றென்பதனை மறுத்தற்கும் b மேற்கோள்.

190. அடக்கமுடைமையென்னும் அதிகார வைப்புமுறையின் விளக்கத்திற்கும் a, ஏதில் என்னுமிடைச்சொல் அயலென்னும் பொருளில் வந்தமைக்கும் b மேற்கோள்.

191. பாவிக அணிக்கு $ மேற்கோள்.

193. பெயரின் கொண்டுமுடியும் சொல் செய்யுட்கண் முற்பட்டு நின்றமைக்கு $ மேற்கோள்.

194. அகமென்பது ஏழனுருபாகிய கண்ணுருபின் பரியாயவுருபெனற்கு a மேற்கோள்.

196. எள்ளலென்பது எனல் போல அல்லீற்று வியங்கோள் வினைமுற்றெனற்கும் a, கொளலென்பது (குறள். 720) எனல் போல அல்லீற்று எதிர்மறை வியங்கோளெனற்கும் b, அல்லென்னும் வியங்கோள்விகுதி எதிர்மறையிலும் உடன்பாட்டிலும் வந்தமைக்கும் c, அல்லென்னும் வியங்கோள்விகுதி இருசொற்களிடத்தும் நின்று எதிர்மறை, உடன்பாடு என்ற இரு பொருள்களையும் தந்தமைக்கும் d, அல்லீற்று வியங்கோள் வினைமுற்றாகிய பகுபதம் எதிர்காலம் காட்டுமெனற்கும் e, அல்லீற்று வியங்கோள் விகுதி விதித்தற் பொருண்மையில் எதிர்மறை, உடன்பாடென்னும் இரு நிலைகளிலும் வந்தமைக்கும் f, உடன்பாடு, எதிர்மறையென்னும் இருவிதியும் பெற்ற இத்தொடரினைச் சொற்சோதனை காட்டிச் செய்யாவென்னும் (தொல். சொல். 450) நூற்பாவுக்கு நச்சினார்க்கினியர் செய்தவுரை வடநூலாரோடு மாறுபட்டதென நிறுவுதற்குரிய சான்றுகளுள் ஒன்றாகவும் g, சொல்லொன்றே உடன்பாடு, எதிர்மறையென்னும் இருவிதியும் பெற்றமைக்கும் h, மறை என்பதனை விளக்கவும் i, தொல்காப்பியர், நன்னூலார் எடுத்தோதிய விதிகளுள் அடங்காத வியங்கோள் விதியைச் சுட்டவும் j, எனல் இரண்டனுள் முன்னது எதிர்மறை ஒருமையேவல் என்பதற்கும், பின்னது வியங்கோள் என்பதற்கும் k மேற்கோள்.

199. பொச்சாப்பு என்னும் மெய்ப்பாட்டிற்கும் a, பெயரின் கொண்டுமுடியும் சொல் செய்யுட்கண் முற்பட்டு நின்றதற்கும் b மேற்கோள்.

200. கவ்வீற்று வியங்கோள் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வந்தமைக்கு $ மேற்கோள்.

201. கட்டமையொழுக்கக் கண்ணுமைக்கண் தீவினையச்சத்திற்கும் a, சேர்ந்தாரென்பது (குறள். 10) சொல்லெச்சம் என்றதன் காரணம் ஈண்டுவருவதுபோல வினைமுதற்கண் பொருள் பெற்றுச் சொல் பெருமையென விளக்கற்கும் b, காரணப் பெயர் காரியப்பெயராக மாறி வந்தமைக்கும் c மேற்கோள்.

204. குறள் வெண்பாக்கள் இரண்டனை நடுவண் தனிச்சொல் பெய்தமைத்த ஒருவிகற்ப நேரிசை வெண்பாவுள் முதற் பாடலாகவும் a, இணையெதுகை வந்தமைக்கும் b, பாவிக அணிக்கும் c, இரண்டனுருபின் கொண்டுமுடியும் சொல் செய்யுட்கண் முற்பட்டு நின்றமைக்கும் d மேற்கோள்.

205. இலனென்று என்பதன்கண் 'அன்' விகுதி தனித் தன்மையாய் வந்தமைக்கும் a, இலனும் என்பதன்கண் 'அன்' விகுதி படர்க்கை ஒருமையாய் வந்தமைக்கும் b மேற்கோள்.

207. தீயவை செய்தாரென்பது (குறள். 208) வினைப்பகை வீயாது பின்சென்றடுதலை உவமையான் விளக்கிற்றெனற்கும் a, வெண்சீரியற்சீர் விரவி முதலடி அளவடியும், ஈற்றடி சிந்தடியுமாகி ஈற்றுச்சீர் மலர் வாய்பாட்டான் வந்த வெண்பாவிற்கும் b மேற்கோள்.

208. தருக்கத்தில் எடுத்துக்காட்டுப்போலியெனற்கு $ மேற்கோள்.

209. கருத்தாக்கருமம் என்பதற்கு $ மேற்கோள்.

210. அருமை இன்மைமேல் நின்றமைக்கும் a, விகுதி பிரித்துக் கூட்டலை விளக்குதற்கும் b, முதல் வேற்றுமைத்தொகை வினைக்குறிப்புப் பெயராக வருதற்கும் c, ஒடியென்னும் வினையெச்சம் செய்யான் என்னும் எதிர்மறை வினையுள் செய்தலோடு முடிந்ததென்ற பரிமேலழகருரை துணைவினை நேர்ந்தநிலை மறுக்கும் இலக்கண விதியெனற்கும் d, புணர்ச்சியில் விகாரத்துள் நிலைமாற்றவிகாரம் வடமொழி விதியாலமைதற்கும் e மேற்கோள்.

214. ஒத்தலென்பது உலகநடையென்று பொருளாதற்குச் சான்றுரையாகவும் a, இடமல்லா இடம் மூன்றனுள் பிரித்துக் கூட்டலுக்கும் b, குறிப்புவினை விகுதி இடைச்சொல்லோடு வந்தமைக்கும் c, இடைப்பகுபதமெனற்கும் d, குறிப்புவினை முதனிலையாக மற்றையென்னும் எண்ணிடைச் சொல் வந்தமைக்கும் e மேற்கோள்.

215. முற்றியலுகரம் ஒரோவழிக் காசு வாய்ப்பாட்டிறுதிச் சீராக நிற்றற்கும் a, பயனுவமை வந்தமைக்கும் b, செயப்படு பொருளாகி வந்த இகர ஈற்று வினைமுற்றுப் பெயரெனற்கும் c, படுசொல்லின்றியும் படுபொருளாதற்கும் d, அஃறிணையோடு அஃறிணை சார்த்தி அஃறிணை முடிபுகொள்ளுதற்கும் e மேற்கோள்.

218. இடனென்பது செல்வமென்று பொருள்படுதற்குச் சொற்சோதனையாக $ மேற்கோள்.

219. பெயரடியாகத் தோன்றும் வினை வந்தமைக்கு $ மேற்கோள்.

220. பாவிக அணிக்கும் a, கோட்டக்கதென முதனிலையடுத்து வந்த வினைச்சொற்கு அறநாணத்தக்கதென (குறள். 1018) வள்ளுவர் விரித்தாற்போலவே பரிமேலழகரும் செயவெனெச்சமாக விரிப்பரென்பதற்கும் b, மேற்கோள்.

221. பகுபதம் பகாப்பதமாகப் பொருள் கொள்ளப்படுதல், அது தமிழ்நூலாரால் பகுதிப் பொருள் விகுதியென வழங்கப் படுதல் ஆகியவற்றிற்கு a, மேற்கோள்.

222. முரண் என்னும் அணிக்கும் a, இரட்டுறமொழிதலென்னும் தந்திரவுத்திக்கும் b, நல்லாறு எனினும் கொளல் தீதென்று கொள்ளாதொழிவான் குலனுடையானெனற்கும் c, மேலுலகம் இல்லெனினும் ஈதல் நன்றென ஈதல்செய்வான் குலனுடையானெனற்கும் d, மொழிந்தபொருளோடொன்ற வைத்தலென்னும் உத்தியின் விளக்கத்தில் மொழிந்த பொருளாகப் பொருத்திக் காட்டற்கும் e மேற்கோள்.

223. ஒன்பதெழுத்தாகிய ஈற்றடி வந்த வெண்பாவு அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கத்துள் ஈதலென்பதற்

கும் b, பலபொருட் கேற்பின் நல்லவைகோடலென்ற உத்தியை விளக்கவும் c, மொழிந்தபொருளோடொன்றவைத்தலென்ற உத்தியை விளக்கவும் d, உதாரச்செய்யுளுக்கும் e மேற்கோள்.

224. செயப்பாட்டுவினை தொழிற்பெயராய் வருதற்கு $ மேற்கோள்.

226. அற்றாது குணங்களை அழிக்கும் பசியைப் போக்கவே ஒருவன் தான்தேடிய பொருள் வைத்தற்குரிய இடம் பெற்றானும் என்று பொருளுரைக்க வேண்டுதலின் 'ஆம்' என்னும் வினைக்குறிப்பு எஞ்சி நின்றதெனற்கும் a, பாடற்குறிப்பிற்கும் b, பரிமேலழகர் நலிந்து பொருளுரைத்த பாடலாகவும் c, மேற்கோள்.

228. கடையியையுத் தொடைக்கும் a, மருட்செந்தொடைக்கும் b, ஈக்கவென்பது (சிலம்பு மனையறம். 45) ஈத்துவக்குமென்பது போல நின்றதெனச் சொற்சோதனை காட்டற்கும் c, அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கத்துள் ஈதற்சிறப்பிற்கும் d, வணிகவேளாளர்கட்குரிய ஈதற்சிறப்பிற்கும் e, பாவிக அணிக்கும் f மேற்கோள்.

230 குறள் வெண்பாவிற்கும் a, கடையென்பது ஏழனுருபெனற்கும் b, இயையாக்கடையென எதிர்மறை விகற்பமாக வரும் இதுவுமோர் வினையெச்ச வாய்பாடெனற்கும் c, கடையென்பது ஈண்டு இடப்பொருளிலன்றி ஈதலியையாதாயினெனப் பொருள்படுதலான் எதிர்மறைப் பெயரெச்சம் கொண்ட இடப்பெயரன்று; வினையெச்சவிகுதியே ஆகுமென நிறுவுதற்கும் d, கடையீற்று வினையெச்சத்தின் கொண்டுமுடியும் சொல் செய்யுட்கண் முற்பட்டு நின்றமைக்கும் e, மேற்கோள்.

231. இரு குறள்வெண்பாக்களை ஈரசை ஆசும், தனிச்சொல்லும் பெய்தமைத்த இருவிகற்ப நேரிசை வெண்பாவுள் ஈற்றதாகவும் a, மூன்றும் வேற்றுமைத் தொகை வந்தமைக்கும் b மேற்கோள்.

232. ஏழெழுத்தாகிய ஈற்றடி வந்த வெண்பாவுக்கும் a, குவ்வுருபு கொடைப்பொருளில் வந்தமைக்கும் b, சொல்லுத லென்ற தொழிற்பண்பை உணர்த்தும் உரிச்சொற்களுள் உரையென்பதும் ஒன்றெனற்கும் c, ஈதலான் புகழுண்டாகு மென்னும் கருத்திற்குச் சான்றுரையாகவும் d, 'ஆர்' ஈற்று எதிர்கால முற்றுவினைச்சொல் வேற்றுமையேற்று வருதற்கும் e, வினைமுற்றுப்பெயர்க்கண் உருபுபெறல் வருவதற்கும் f மேற்கோள்.

233. இம்மையும் மறுமையும் இன்பம் பயந்து உலகு உள்ளளவும் நிலைத்து நிற்பது புகழ் என்பதற்குச் சான்றுரையாக $ மேற்கோள்.

234. ஆறெழுத்தாகிய ஈற்றடி வந்த வெண்பாவுக்கும் a, இலக்கணம் அமைந்த அகலக் கவியைக் கொண்டோர் புகழ் பெற்றுத் தலைமை கொள்வரென்பதற்குச் சான்றாகவும் b, மேற்கோள்.

235. சுட்டாலும் நிறங்கெடாத சங்குபோலக் கெட்டாலும் தன்மை கெடாத குடியென்ற பொருளுக்குச் சான்றுரையாகவும் a, பகுதிப்பொருள்விகுதி வந்தமைக்கும் b, பகுபதம் பகாப்பதமாகப் பொருள கொள்ளப்படுதல், தமிழ்நூலாரால் அது பகுதிப்பொருள் விகுதியென்று வழங்கப்படுதல் ஆகியவற்றிற்கும் c மேற்கோள்.

236. ஆய்தம் ஒற்றெழுத்துப் போல அலகு பெறாது வந்தமைக்கும் a, காசு வாய்ப்பாட்டிறுதிச்சீர் வந்த செய்யுட்கும் b மேற்கோள்.

237. எட்டெழுத்தாகிய ஈற்றடி வந்த வெண்பாவுக்கும் a, கொடுக்காதவர் பழிக்கப்படுவதற்கும் b, பாவிக அணிக்கும் c மேற்கோள்.

238. வசையொழிதலென்பது இசையென்னும் எச்சம் பெறாதலென்று இவ்வாசிரியமொழிகொண்டு விளக்கற்கு $ மேற்கோள்.

239. வசையொழியவென்னும் குறள் (240) இசையிலா யாக்கையென்பதன் விளக்கமென்பதற்கும் a, இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றமைக்கும் b, இடம் கருத்தாவாகி நின்றதென்பதனை மறுத்தற்கும் c மேற்கோள்.

241. இன்னதல்லதிதுவென மொழிதலென்னும் தந்திரவுத்திக்கும் a, அருளொடு புணர்ந்த அகற்சியுள் அருளுடைமைக்கும் b, பாவிக அணிக்கும் c, முன்மொழியெண்ணப் பண்புத்தொகைக்கும் d மேற்கோள்.

245. மல்லலென்னும் உரிச்சொல் வளமெனப் பொருள்படுதற்கும் a, மல்லல்மாஞாலம் கரியென்பதற்கு, இந்திரனே சாலுங்கரியென்பதற்கு (குறள். 25) உரைத்தாங்கு உரைகொள்கவென இயைபு படுத்திக் கூறற்கும் b மேற்கோள்.

247. காஞ்சித்திணை வகையுள் முதுமையென்பதற்கும் a, தருக்கத்தில் எடுத்துக்காட்டுப்போலியென்பதற்கும் b, பிணிப்பறுத்தோர் பெற்றியாவது சுவர்க்கமென்று சான்று காட்டி விளக்கற்கும் c, அருள் உயிர்ப்பண்புகளுள் ஒன்று என்பதற்கும் d, இல்லாகியாங்கு என்பதற்கு இல்லையானாற் போலவென 'ஆனால்' என்பதனை விரித்தெழுதிச் சொற்குணம் வாளா போயினரென மறுப்பதற்கும் e, பகுபதம் உவமவுருபு பெற்று வந்தமைக்கும் f மேற்கோள்.

249. அரிய விதிகளின் திரட்டாகிய தமது நூலில் கூறப்பட்டுள்ள விதிகளுள் சில எளிதில் கிடைப்பது தெருளாதான் கண்ட மெய்ப்பொருள் போல்வதெனக் கூறுதற்கும் a, பகுபதம் உவமவுருபு பெற்று வந்தமைக்கும் b, செய்யானென்பதன் கண் ஆகார எதிர்மறையிடைநிலை உண்டென விளக்கவும் c மேற்கோள்.

250. அஃறிணைக்கும் பொருந்தும் உயர்திணை முடிபென்று கூறி இப்பொருளாற்றல் ஒருபாற்கிளவி ஏனைப்பாற்கண்ணும் இயையுமென்னும் விதியான் (தொல். பொருள். 218) அமையுமெனற்கு $ மேற்கோள்.

252 உவமையளவை வந்தமைக்கும் a, வினைமுற்றுப் பெயர் வடிவமாற்றம் பெறுதலினையும், அவ் வடிவமாற்றம் ஈற்ற யற்கே பொருந்துவதென்பதனையும் விளக்கற்கும் b, வினை முற்றுப் பெயர் ஈற்றயல் திரிந்து வந்தமைக்கும் c மேற் கோள்.

253. உவமையளவை வந்தமைக்கு $ மேற்கோள்.

254. குற்றியலிகரம் ஒற்றெழுத்துப்போல அலகு பெறுமைக்கும் a, அருளல்லதியாதெனின் என்புழிக் குற்றியலிகரமாதல் குறு மையும் (தொல். எழு. 50) என்ற விதியாற் கொள்கவெனற் கும் b, அருளும் அருளல்லதும் என்பது உம்மைதொக்கு அருளல்லதென நின்றாற்போலப் பொருள்கோளென்பதனைப் பொருளும் பொருள்கோளுமென உம்மைத்தொகையாகக் கொள்கவெனற்கும் c மேற்கோள்.

255. தாப்பிசைப் பொருள்கோளுக்கு a மேற்கோள்.

256. அருத்தாபத்தியென்னும் அளவை வந்தமைக்கு $ மேற் கோள்.

257. உண்ணல் பொதுவினையென நிறுவுதற்கு $ மேற்கோள்.

258. விதியாலன்றி எதிர்மறையாற் கூறினும் வேற்றுமையுருபு தத்தம் இலக்கணத்தான் வரும் பொருணிலைமையின் திரியா தென்பதற்கும் a, தலைப்பிரிதலென்பதன்கண் தலையென்பது உபசர்க்கமெனற்கும் b மேற்கோள்.

259. குறுவெண்பாட்டிற்கும் a, பாவிக அணிக்கும் b மேற்கோள்.

260. ஒழுகிசைச் செப்பலோசைக்கும் a, வாய்மையின் வழாது மன்னுயிரோம்புநர்க்கு எய்தா அரும்பொருள் யாதுமில்லை என்பதனைச் சான்றுகாட்டி விளக்கவும் b, ஒருபாற்கண் வரினும் ஐம்பாற்குமுரியதென விளக்கவும் c, காதைகரப்புச் செய்யுட்கண் போந்த செய்யுளாகவும் d மேற்கோள்.

264. உயர்திணைப் பெயர்க்கண் இரண்டனுருபு ஒரோவழித் தொக்கு வருவதற்கு $ மேற்கோள்.

265. தவத்தான் வீடுபேற்றினைப் பெறலாமென்ற கருத்திற்குச் சான்றுரையாகவும் a, தவத்தின் பயனையும் சிறப்பையும் இவ்வாசிரியமொழியால் விளக்கவும் b மேற்கோள்.

266. பாவிக அணிக்கு $ மேற்கோள்.

267. தலையாகுமோனைக்கும் a, மோனைத்தொடையான் வந்த இனக்குறள் வெண்பாவிற்கும் b, நிகழ்கால வினையெச்சத் திற்கும் c மேற்கோள்.

268. கூற்றம் குதித்தலுமென்பதன் கண்ணுள்ள உம்மையினை எச்சவும்மையாகப் பொருள் கொள்ளுதற்கு $ மேற்கோள்.

270. ஏதுவின் முடித்தலென்னும் தந்திரவுத்திக்கு $ மேற்கோள்.

272. கரிப்புறத்தினை விளக்கத்திற்கு $ மேற்கோள்.

273. அபூதவுவமை அணிக்கும் a, பாவிக அணிக்கும் b மேற் கோள்.

274. சிமிழ்த்தலென்னும் வினைச்சொல்லின் பொருள் விளக்கத் திற்கு $ மேற்கோள்.

276. நல்வினை தீவினையாக மாறுபட்டு நின்றமைக்கு $ மேற் கோள்.

277. 'ஏன்' என்பது ஆயினென்னும் எச்சமாதலின் கணமேயும் (குறள். 29) என்பதனைக் கணமேனுமெனப் பாடமோதுக என்பதற்கும் a, பொறியும் புலனும் வேருயவற்றை விரவி உவமித்த உவமையணிக்கும் b, பொருள் விளங்குதற்கேற்ற சொல்லெல்லாம் விரித்தெழுதிப் பிறரெல்லாம் சொற்குணம் வாளா போயினரென மறுத்தற்கும் c, ஈண்டு ஏனுமென்ப தற்கு ஆயினுமெனப் பொருளெழுதி வாளா போயினரெனற் கும் d, பகுபதம் உவமவுருபேற்று நின்றதெனற்கும் e, வெண்பாவிற்குச் சிறுமை ஈரடியெனற்கும் f மேற்கோள்.

279. செவ்வையுடையதனைச் செவ்விதென்ருற்போலக் கவ்வை யுடையதனைக் கவ்விதென்று பொருள் விரித்தற்கு $ மேற் கோள்.

281 உருப்புச் சொற்கள் வினையும் வினைக்குறிப்பாயும் அடங்குத லின் அவை எஞ்ச வருவனவும் வினையெச்சத்தின் பாற்படு மெனற்கு $ மேற்கோள்.

282. 'அல்'; விகுதி வியங்கோளெதிர்மறைக்கண் வந்ததெனப் பரி மேலழகருரையைக் கொண்டு விளக்கவும் a, பாவிக அணிக் கும் b, 'அல்' விகுதி வியங்கோளெதிர்மறைக்கண் வந்த தெனற்கும் c, அகக்கரண விளக்கத்திற்கும் d மேற்கோள்.

283 பெயரெச்சம் தொழிற்பெயரை முடிபாகக்கொண்டமைக்கு $ மேற்கோள்.

287. அருளொடு புணர்ந்த அகற்சியுள் கள்ளாமைக்கு a மேற் கோள்.

289. மற்றையென்னும் எண்ணிடைச்சொல் குறிப்புவினை முதனி லையாக வந்தமைக்கு $ மேற்கோள்.

290. நான்காம்வேற்றுமை பிறவேற்றுமைகள்போல அளவுபட்ட பொருண்மைத்தன்றி வருமாயினும் அவற்றையும் இதற்கிது வென்பதுபட நிற்றலாகக் கொள்க என்பதற்கும் a, குவ் வுருபு பகைப்பொருளில் வந்தமைக்கும் b மேற்கோள்.

291. அருளொடு புணர்ந்த அகற்சியுள் பொய்யாமைக்கு a மேற் கோள்.

292. பழியும் பாவமும் பயவாத உரை பொய்யுரையன்றென் பதற்குச் சான்றுரையாக்கற்கும் a, மூன்றுமெழுத்து ஒன்றி வந்த எதுகைக்கும் b மேற்கோள்.

293. அஃறிணைக்கண் இயற்றுதனவற்றை இயற்றுநபோலக் கூறு தற்கு a மேற்கோள்.

295. ஒடுவுருபு உடனிகழ்ச்சிக்கண் வந்தமைக்கும் a, ஒடுவுருபு ஆனுருபின் பொருளாயிற்றெனற்கும் b, மனம், வாய்மை, தவம், தானம் என்பனவற்றின்மேல் வினை நில்லாது செய் வான் வினையாக நின்றமைக்கும் c, இருதிணைப்பொதுச்

சொல்லாகிய தலையென்பது உயர்திணைக்கண் நின்றமைக்கும் d, வினையொடு முடிந்த செயப்படுபொருள் வினையொடு முடிந்த சொல்லாகக் கருதப்படுதற்கும் e மேற்கோள்.

297. கொல்லாமை, பொய்யாமையென்னும் ஈரறங்களுள் தலையாயது கொல்லாமையென்ற நூலாசிரியர் கோட்பாட்டினை விளக்கவும் a, வைதருப்ப நெறியின் தெளிவென்னும் குணத்திற்கு மறுதலையாகக் கௌடநெறியார் போற்றும் செய்யுள் தன்மைக்கும் b, பாவிக அணிக்கும் c, செய்யாமை செய்யாமையென்பன மையீறுபெற்ற தொழிற்பெயர் என்பதற்கும் d, அடுக்கல்லவையும் அடுக்கியவை போல வருவதற்கும் e மேற்கோள்.

298. கர்மணிப் பிரயோகம் செய்யுட்கண் வந்தமைக்கு $ மேற்கோள்.

299. இடையின எதுகைக்கும் a, எட்டாரைச் சக்கரக் கவியுள் கரந்துபோந்த செய்யுளாகவும் b மேற்கோள்.

300. வாய்மையின் வழாது மன்னுயிரோம்புநர்க்கு எய்தா அரும் பொருள் யாதுமில்லை என்பதனைச் சான்றுகாட்டி விளக்கவும் a, கொல்லாமை பொய்யாமை யென்னும் ஈரறங்களுள் தலையாயது கொல்லாமையென்ற நூலாசிரியர் கோட்பாட்டினை விளக்கவும் b மேற்கோள்.

304. நிகழ்காலத் தடைமொழியணிக்கு $ மேற்கோள்.

306. உவமையும் பொருளும் ஒருபால் குறைந்துவந்த ஏகதேச உருவகத்திற்கும் a, அஃறிணைக்கும் பொருந்தும் உயர்திணை முடிபென்றுகூறி இப்பொருளாற்றல் ஒருபாற்கிளவி ஏனைப் பாற்கண்ணும் இயையுமென்னும் விதியான் (தொல். பொருள். 28) அமையுமெனற்கும் b, உருபுதொகாமல் ‘அலுக்கு’ வருவதற்கும் c, இகரஈற்று அஃறிணை வினைமுற்றுப் பெயர் வந்தமைக்கும் d, இகரவிகுதி வினைமுதற் பொருண்மையை உணர்த்தியமைக்கும் e மேற்கோள்.

307. என்றென்னிடைச்சொல் பெயர் குறித்து நின்றமைக்கு $ மேற்கோள்.

308. வினையுவமை வகையுள் வினைப்பெயர்பற்றி உவமம் சென்றமைக்கும் a, பத்துவகை எச்சங்களுள் பெயரெச்சத்திற்கும் b, இசையெச்சத்திற்கும் c, மேற்கோள்.

309. கருத்தொப்புமைக்கும் a, அஃறிணைப் பன்மையுடன் ஒருமை மயங்கிய பால் மயக்கத்திற்கும் b, உள்ளியவெல்லாமெனற் பாலது நினைக்கப்படுதலென்னும் ஒருமை குறித்து உள்ளியதெல்லாமென வந்ததெனற்கும் c மேற்கோள்.

310. பாவிக அணிக்கும் a, அடுக்கல்லவையும் அடுக்கியவை போல வருதற்கும் b மேற்கோள்.

314. பாடலைக்குறிக்கும் முதற்குறிப்பாகவும் a, செய்துவிடலென்பது காட்டிவிடுமென்பதுபோல இருசொற்களெனற்கும் b மேற்கோள்.

315. அம்மையென்னும் யாப்பழகிற்கு a மேற்கோள்.

318. வெண்பாவிற்குச் சிறுமை ஈரடியெனற்கும் a, எதுகைத் தொடையான் வந்த இனக்குறள் வெண்பாவிற்கும் b, சாந்தச் சுவையென்பதற்கும் c, அருளொடு புணர்த்தலை விளக்கற்கும் d மேற்கோள்.

319. பிறநூல் முடிந்தது தானுடம்படலென்னும் தந்திரவுத்திக்கும் a, வைதருப்பநெறியாரின் தெளிவென்னும் குணத்தினை விளக்கவும் b, பாவிக அணிக்கும் c, முன்பின்னாகத்தொக்க ஆரும்வேற்றுமைத் தொகை வந்தமைக்கும் d, கருமகருத்தாவின் விளக்கத்திற்கும் e, வடமொழியில் முதல் வேற்றுமைத்தொகையெனக் கருதப்படும் முற்பகல், பிற்பகல் என்பவற்றைப் பரிமேலழகர் முன்பின்னாகத் தொக்கதொகை என்பாரெனற்கும் f, செயப்படுபொருள் தேற்றத்தோடு வினைமுதலாய்ச் செயப்படுபொருள் குன்றிய வினைகொண்டதெனற்கும் g, 'இன்' ஈற்று எதிர்காலத் தெரிநிலை வினையெச்சத்திற்கும் h, செயப்படுபொருட்கண் வினைமுதற் பொருள் வருதற்கும் i மேற்கோள்.

320. காரிய அகத்திணை விளக்கத்திற்கு $ மேற்கோள்.

321. தொகுத்துக்காட்டலென்னும் தந்திரவுத்திக்கும் a, அருளொடு புணர்ந்த அகற்சியுள் கொல்லாமைக்கும் b, பாவிக அணிக்கும் c, தொழிற்பெயர்க் கருத்தாவிற்கும் a, விலக்கியது ஒழிதலும் செய்தலோடொக்குமாதலின் கொல்லாமை அறவினை ஆயிற்றென்ற பரிமேலழகருரையை எடுத்துக் காட்டிப் பிரதியோகி நியோகியோடு ஒக்குமென்ற கருத்தை வலியுறுத்தற்கும் e, மறைச் சொல் விதிப் பொருண்மையில் வந்தமைக்கும் f, விலக்கிய வினையைச் செய்யாமையே நல்வினையாகுமெனற்கும் g, மூவகைத் துணிவுகளுள் இது பொருளன்று என்றறிந்தும் இதுவே பொருளெனத் துணிதலை விளக்கற்கும் h மேற்கோள்.

323. பயன் என்னும் செய்யுளுறுப்பின் விளக்கத்திற்கு $ மேற்கோள்.

324. வெளிப்படை மொழியென்பதற்கு $ மேற்கோள்.

326. கொலைஞர் வாழ்நாள் தேயுமென்னும் கருத்தொப்புமைக்கும் a, மறைச்சொல் விதிப்பொருண்மையில் வந்தமைக்கும் b மேற்கோள்.

327. மறுத்தலென்னும் ஆசிரிய மதத்திற்கு $ மேற்கோள்.

330. ஆகம அளவை வந்தமைக்கு $ மேற்கோள்.

331. மூவகைத் துணிவுகளுள் பொருளல்லதனைப் பொருளெனத் துணிதல் வழுவெனற்கு $ மேற்கோள்.

332. எதிர்மறையெச்சத்திற்கும் a, செய்வியென் வினையுள் செய்வினை சிலவுள என்பதற்கும் b மேற்கோள்.

334 எனவென்னிடைச்சொல் பெயர் குறித்து நின்றமைக்கும் a, காணப்பட்ட உலகு உயிர்மேல் நின்றால் காணப்படுதல் எங்ஙனமென்பது உயிரீரும் வாள் என்பதனுரையால் காணப்

படுமெனற்கும் b, குற்றுகரத்தீறன்றி அதுவென்னும் சுட்டீற்றுகரம் உயிரேருதாகலின் அஃதெனற்குரிய ஆய்தம் விகாரத்தால் தொக்கதென்று பரிமேலழகர் உரைசெய்தாரெனற்கும் c, எனவெனெச்சத்திற்கும் d மேற்கோள்.

337. பாவிக அணிக்கு $ மேற்கோள்.

338. எண்ணொடு நீண்டு நின்றமையை ஒப்புக்காட்டி விளக்கற்கும் a, பெயரடியாகத் தோன்றும் குறிப்பு வடமொழியில் அபிதா மூலத்தொனி என்றும் விருத்தலக்கணை என்றும் வழங்கப்படுமெனற்கும் b, அடிமடங்கி வந்து மறிநிலைப் பொருளாதற்கும் c மேற்கோள்.

339. வினைமுற்றுப்பெயர் தொழிற்பெயர்ப் பொருளாதற்கு a மேற்கோள்.

341. அருளொடு புணர்ந்த அகற்சியுள் துறவுநிலைக்கும் a, பத்துவகை எச்சங்களுள் பெயரெச்சத்திற்கும் b, வினைப்பெயர் வந்தபின் சுட்டுப்பெயர் வருதல் வடமொழி மதமாதலின் திருவள்ளுவரும் அவ்வாறே செய்யுள் செய்தாரெனற்கும் c, சிறப்பினின் வழா (நன். 439) என்று நூற்பா செய்ததற்குரிய காரணங்களுள் இச் செய்யுள் வழக்கும் ஒன்றெனற்கும் d மேற்கோள்.

342. பத்து வகை எச்சங்களுள் வினையெச்சத்திற்கு $ மேற்கோள்.

344. பாவிக அணிக்கும் a, இன்மையை உயர்ந்த வினையென அறிவுநூல் கூறுமெனற்கும் b, மேற்கோள்.

346. நீரொழியப் பாலுண் குருகில் தெரிந்து (நாலடி. 135) என்பதன் நயவுரை விளக்கத்திற்கும் a, உடைமைப்பொருளில் வரும் குறிப்புவினை விகுதி அஃறிணைக்கண் வருவதற்கும் b, மேற்கோள்.

348. காரணம் காரியத்தைப் பயந்தே விடும் துணிவு பற்றித் தலைப்பட்டாரென இறந்த காலத்தாற் கூறப்பட்டதெனற்கு $ மேற்கோள்.

350. ஒற்றெழுத்து மிக்கு வந்த பாடற்கும் a, தலையாகுமோனைக் கும் b, சொற்செறிவுடைமையின் சிலேட்டமென்னும் உயிர் வந்ததெனற்கும் c, இறைவனைக் குறித்தற்குரிய ஆசிரிய மொழியாகவும் d, ஆறும் வேற்றுமையுருபு செய்யுட் கிழமைக்கண் வந்தமைக்கும் e மேற்கோள்.

351. பொருளென்பது மெய்ப்பொருளெனப் பொருளாதற்கும் a, மூவகைத்துணிவுகளுள் பொருளல்லதனைப் பொருளெனத் துணிதல் வழுவெனக் கூறுதற்கும் b மேற்கோள்.

352. பயக்குமென்பது பரிமேலழகரால் செயப்படுபொருள் அடைந்த சொல்லாகக் கொள்ளப் பட்டமையை இப்பாட லில் காட்சியென்பதனை எழுவாயாக்கியமை வலியுறுத்து மெனற்கும் a, காட்சியவரென்னும் குறிப்பு வினைமுற்றுப் பெயரில் உள்ள காட்சியென்னும் தொழிற்பெயர் எழுவா யாகப் பிரிந்து நின்றமைக்கும் b, இருள் நீங்கியென்புழி 'வி' விகுதி தொக்க தென்பதனை உணராமையே பரி மேலழகர் ஈண்டு மெலித்தல் விகாரம், வினையெச்சத்திரிபு என்றெல்லாம் உரை விரித்து இடர்ப்படுதற்குரிய காரண மென்பதற்கும் c மேற்கோள்.

353. தன்னைத் தலையாகச்செய்வானும் தான் (நாலடி. 248) என்பதன் நயவுரை விளக்கத்திற்கும் a, ஐந்தனுருபின் கண் நீக்கப்பொருள் வந்தமைக்கும் b, ஐந்தனுருபின் நீக்கப்பொருள் பண்பை நிலைக்களனாகக் கொள்ளுவதற் கும் c மேற்கோள்.

354. நீரொழியப் பாலுண் குருகில் தெரிந்து (நாலடி 135) என்பதன் நயவுரை விளக்கத்திற்கும் a, பொருளொடு புணர்ந்த பக்கத்திற்கும் b, பாவிக அணிக்கும் c மேற் கோள்.

355. தலைமகனுக்குரிய குணங்களுள் அறிவு இன்னதென வரை யறுத்தற்கும் a, விழுமியது பயத்தலென்னும் தந்திரவுத்திக் கும் b, இடைச் சொற்களின் புறனடைவிதியால் எகர வினு வும் கொள்கவெனற்கும் c மேற்கோள்.

356. நீரொழிய பாலுண் குருகில் தெரிந்து (நாலடி. 135) என்பதன் நயவுரை விளக்கத்திற்கும் a, செம்பொருளென்பதனைக் காரணங் கூறி விளக்கிய உரையை மெய்ப்பொருளென்பதற்கும் இயைத்துப் பொருள் செய்தற்கும் b மேற்கோள்.

357. செம்பொருளென்பதனைக் காரணங்கூறி விளக்கிய உரையை உள்ளதென்பதற்கும் இயைத்துப் பொருள் செய்தற்கும் a, ஓர்ப்பு உயிர்க்குணங்களுளொன்று என்பதற்கும் b, பொருள் கருதி ஒருதலையா ஓர்த்தென்று இயைக்கப்பட்டமைக்கும் c மேற்கோள்.

358. விரியுருவக அணிக்கும் a, நீரொழியப் பாலுண் குருகில் தெரிந்து (நாலடி. 135) என்பதன் நயவுரை விளக்கத்திற்கும் b, காரியப்பெயர் காரணப்பெயராக மாறி வந்தமைக்கும் c மேற்கோள்.

359. பொருளொடு புணர்ந்த பக்கத்திற்கும் a, நல்வினையும் பிறவிக்கு ஏது என்னும் கருத்தினை நிறுவுதற்கும் b மேற்கோள்.

360 காமம் நீத்த பால் என்பதற்கும் a, மாசற்றார் என்று கூறுதலின் காரணத்தை இவ்வாசிரியமொழிகொண்டு விளக்குதற்கும் b, ஐவகைக் குற்றங்கள் விரித்துக் கூறப்பட்டுள்ளமைக்கும் c, கெடவென்பது எச்சத்திரிபென்னும் பரிமேலழகருரையை மறுத்தற்கும் d மேற்கோள்.

361. வேண்டாமை வேண்ட வருமென்னும் தொடருக்கு (குறள். 362) இவ்வாசிரியமொழிகொண்டு பொருணயம் கூறுதற்கு $ மேற்கோள்.

362. மற்றென்னும் இடைச்சொல் ஈண்டு வினைமாற்றுப் பொருளில் வந்துள்ளமையை உணர்தல் அரிதாகலின் விரித்துரைக்கப்பட்டதென்பதற்கு $ மேற்கோள்.

363. பாவிக அணிக்கு $ மேற்கோள்.

366. ஒருமென்பது அசைநிலைப் பொருளில் வருவதோரிடைச் சொல்லெனற்கு a மேற்கோள்.

370. நாலிரு வழக்கின் தாபத பக்கத்துள் நினைதலென்பதற்கு $ மேற்கோள்.

371. பெயரெச்சத் தொடர்போல வினைத்தொகைக்கண்ணும் காரியம் காரணப்பெயர் கொண்டு முடிதலுண்டெனற்கு a மேற்கோள்.

372. அகற்றுமென்பது அகலப்பண்ணுமென்று பொருளாதற்கு a மேற்கோள்.

373. தொட்டனைத்தூறுமென்ற பாடலோடு (குறள். 397) இப்பாடலின் கருத்து முரண்படாமையை விளக்கவும் a, பாவிக அணிக்கும் b, நூல், உரை, போதகாசிரியர் மூவரும் அதிமதி நுட்பமொடு அதிகலை கற்பினும் விதியது வசத்தால் விதி விலக்கு அயர்ப்பர் என்ற கருத்திற்குச் சான்று மொழியாகவும் c மேற்கோள்.

375. செயற்கைப் பொருட்குரிய காரணம் செய்யுட்கண் அதிகாரத்தான் வருவிக்கப்படுதற்கு a மேற்கோள்.

376. ஆறும் வேற்றுமையுருபாகிய அகரம் பிறிதினியைபுப் பொருளில் வந்தமைக்கும் a, உடைமைப் பொருளில் வரும் குறிப்பு வினை விகுதி அஃறிணைக்கண் வருதற்கும் b மேற்கோள்.

377. வேற்றுமையுருபு முதலிய சொற்கள் கெட்டுத் தனிநிலைச் சொற்கள் தம்முட் கூடுவது தொகை எனப்படும் தொகை நிலை வரையறையினை மறுத்துரைத்தற்கும் a, நல்வினை, தீவினை, வெறுவினையென வினையை மூவகைப்படுத்தி வெறுவினைக் கோட்பாட்டிற்குரிய நூல் வழக்குச் சான்றாகவும் b மேற்கோள்.

380. மற்றென்னிடைச்சொல் பிறிது பொருளில் வந்ததெனற்கும் a, வினைமாற்றுப் பொருளோடு பிறிது பொருட்கு ஈண்டு வேற்றுமை இன்மையான் மற்றென்னிடைச் சொல் இப்பாடற்கண் பிறிது பொருளில் வந்ததென்றது பொருந்தாதென மறுத்தற்கும் b மேற்கோள்.

381. உயிர்மெய்யெழுத்து மிக்கு வந்தமைக்கும் a, இருகுறள் வெண்பாக்களை நடுவண் தனிச்சொல்லிட்டு அமைத்த இருவிகற்ப நேரிசை வெண்பாவுள் முதற் செய்யுளாகவும் b, பொருளொடு புணர்ந்த பக்கத்துள் அரசர்க்குரிய அங்கங் களைக் குறிப்பிடுவதற்கும் c, அரச அங்கங்கள் ஆறினையும் பாதுகாவாமை துகளெப்படுமெனற்கும் d, ஒருமையிற் கூறி னும் பன்மைப் பொருளுணர்த்தும் மெய்ந்நிலை மயக்கத்திற் கும் e, வெண்பாவின் ஈற்றயற்சீராக நிரையீற்றியற்சீர் நின்று நேர்பசைச் சீரோடு தளை கொள்ளுதற்கும் f, செவ் வெண்ணிறுதி தொகை பெற்று வந்தமைக்கும் g, உபசார வழக்கினை விளக்குதற்கும் h, பாடற்கண் உடையது என் றின்றி உடையானென இருத்தலின் 'ஏறு' என்பதனை ஆகு பெயரென்னுமல் உபசாரவழக்கென உரைக்கப்பட்டதெனற் கும் i, இடமல்லா இடம் மூவகையுள் கூட்டிப் பிரித்தலுக் கும் j, உயர்திணைச் சாதியொருமைக்கும் k, செய்யுளின் பங்கருதி முறைமாற்றம் அமைந்ததற்கும் l மேற்கோள்.

382. முற்றியலுகரம் ஒரோவழி பிறப்பு வாய்பாட்டிறுதிச் சீராய் நின்றமைக்கும் a, இரு குறள் வெண்பாக்களை நடுவண் தனிச்சொல்லிட்டு அமைத்த இருவிகற்ப நேரிசை வெண்பா வுள் ஈற்றுச் செய்யுளாகவும் b, ஈண்டு எஞ்சாமைக்கு உரைத் தாங்கு நீங்காவென்பதற்கும் (குறள். 383) உரை கொள்க வெனச் சுட்டுதற்கும் c மேற்கோள்.

383. இறைமாட்சியை அடுத்து கல்வி வைக்கப்பட்டதன் அதிகார வைப்புமுறை விளக்கத்திற்கும் a, தூங்காமை யென ஈண்டுத் தொகுத்துக் கூறப்பட்டது தூங்குக வென்ப தன்கண் (குறள். 672) வகுத்துரைக்கப்பட்டதென விளக் கற்கும் b, நான்கனுருபின் கொண்டு முடியும் சொல் செய் யுட்கண் முற்பட்டு வந்தமைக்கும் c மேற்கோள்.

385. வகுத்தலும் வல்லதரசு என்பதற்கு ஈண்டுரைத்த உரையை மேல்வரும் ஆற்றினீதல் என்பதற்கும் (குறள். 477) இயைத் துக் கூறுதற்கும் a, பொருள் வரும் வாயில்களை விளக்கு தற்கும் b, பொருளும் சொல்லும் பெற்று ஈண்டு வருதல் போலன்றிக் கெடுப்பதூஉம் என்பதன்கண் (குறள். 15)

பொருள் பெற்றுச் சொல் பெருமையின் வல்லதென்பது அவாய் நிலையென உரைக்கப்பட்டதெனற்கும் c, தன்மை யை உணர்த்தாமல் தன்மையையுடைய பொருளையே உணர்த்திப் பகுதிப் பொருள் விகுதியில் வரும் தன்மைக் குறிப்பு வினைப்பெயர் விகுதி வந்தமைக்கும் d மேற்கோள்.

386. எழுவாய் வருவிக்கப்பட்டதென்பதும் அவாய் நிலையென் பதே பரிமேலழகர் கருத்தெனற்கும் a, சுற்றம்கெடுமெனவே அவன்கேடு சொல்லாமலே பெறப்பட்டதென்ற உரையோடு நிலத்தை மீக்கூறவே மன்னனை மீக்கூறுதல் சொல்ல வேண்டாமென்ற உரையை ஒப்புக்காட்டி எடுத்தமொழி இனம் செப்பலுமுரித்தே என்ற நூற்பாவிற்கு (தொல். சொல். 61) இளம்பூரணர் செய்த உரையோடு இயைத்துக் காட்டற்கும் b, மீக்கூறுமென்பதன்கண் மீயென்பது உப சர்க்கமெனற்கும் c மேற்கோள்.

388. நான்காம் வேற்றுமை வருமிடத்து ஆறும் வேற்றுமை வரு தலின் நிர்த்தாரணே சட்டி எனப்படுமெனற்கு $ மேற் கோள்.

389. பண்பும் புலனும் மாறி வந்தமைக்கு $ மேற்கோள்.

391. குற்றெழுத்து மிக்கு வந்த பாடற்கும் a, கசடறுதலென்ப தற்கு ஐயுறவு தீர்தலென்று பொருளுரைத்தமைக்குச் சொற் சோதனையாகவும் b, துறைபோதல் என்பதன் பொருள் விளக்கத்திற்கும் c, எழுத்துக்கள் பலவற்றைக் கூட்டி ஒரு தொடர்புபடக் கூறுமிடத்தும் அவை தத்தமியல்பிற் றிரியா வெனற்கும் d, நேரும் நிரையுமொன்றுது இயற்சீர் வெண்ட ளையாயதற்கும் e, சீர்வகை முற்று மோனைக்கும் f, பரிமேலழ கர் பெயரடுத்து வரும் தகுதிச் சொற்கு நான்கனுருபு விரித் துப் பொருள் செய்தமைக்குக் காரணம் நூலாசிரியர் அதற் குத் தகவென ஈண்டு அவ்வாறு விரித்துள்ளமையே என்ப தற்கும் g, சாதிப்பன்மையெனற்கும் h மேற்கோள்.

392. பத்துவகை எச்சங்களுள் பெயரெச்சமெனற்கும் a, 'என்' என்னுமிடைச்சொல் சொல்லுதல் தொழிலைக் குறித்துப்

பெயர்வினைகட்குரிய விகுதிகளோடு வருமெனற்கும் b பகர விகுதி அஃறிணைப் பன்மைக்கு வந்தமையைக் குறித்தற்கும் c, சாதிப்பன்மையெனற்கும் d, இருதிணைச் சாதிப் பன்மைகள் வந்தமைக்கும் e, எழுத்தென்பது இயற்றமிழ்ப் பொருளது என்ற விளக்கத்திற்குச் சான்றுரையாகவும் f, கணிதம் முதலிய பிறகலைகளும் உளவாயினும் தமிழ்நூலார் முத்தமிழை மாத்திரம் சிறப்பித்துக் கூறுதலின் காரணத்தை விளக்குதற்கும் g மேற்கோள்.

393. கட்டளைப் பொழிப்பு மோனைக்கு $ மேற்கோள்.

395. ஈரடியான் வந்த ஒருவிகற்பக்குறள் வெண்பாவிற்கும் a, இலக்கிய முதனிலைப்புக் காரிகைக்கண்ணும் b, இரவுள்ள வென்னும் தொடரின் (குறள். 1069) பொருள் விளக்கத்திற்கும் c, சொல்லெச்சம் வந்தமைக்கும் d, உலக வழக்கு வந்தமைக்கும் e மேற்கோள்.

396. இடத்து நிகழ்பொருள் செய்யுட்கண் வெளிப்படையாக வாராதாயின் ஆகுபெயர்க்கண் அடங்குதல் இப்பாடற்கண் இடத்து நிகழ் பொருளின்தொழில் இடத்தின்மேல் நின்றதெனப் பரிமேலழகர் எழுதாமையானும் பெறப்படுமெனற்கும் a, நூல், உரை, போதகாசிரியர் மூவரும் அதிமதிநுட்பமொடு அதிகலை கற்பினும் விதியதுவசத்தால் விதிவிலக்கு அயர்ப்பரென்ற கருத்திற்குச் சான்றுமொழியாகவும் b, தொகுத்தலென்னும் செய்யுள் விகாரம் வந்தமைக்கும் c மேற்கோள்.

397. வெண்சீர் வெண்டளையான் வந்த ஏந்திசைச் செப்பலோசைப் பாடற்கும் a, விறுதலென்னும் தந்திரவுரைக்கும் b, சீர்வகைத் துள்ளலோசை பிறத்தலை விளக்குதற்கும் c, சீர்வகைச் செப்பலோசை பிறத்தலை விளக்கற்கும் d, மூவசைச்சீர் வந்தமைக்கும் e, குறுவெண்பாட்டின் சிற்றெல்லை ஈரடியெனற்கும் f, ஆனென்பது 'ஏன்' 'ஏல்' போலப் பெரும்பான்மையும் செயினெச்சமாதலின் கணமேயுமென்பதனைக் (குறள். 29) கணமேனுமென்று பாடங்கொள்கவென்றற்கும் g, காய்ச்சீர்கள் வெண்பாவிற்குரியனவெனற்கும் h, வெண்சீர்

வெண்டளை விளக்கத்திற்கும் i, செப்பலோசையும், ஈரடியும், ஈற்றடி சிந்தடியுமாகிய வெண்பா இலக்கணத்தான் வந்த இருவிகற்பக் குறள் வெண்பாவிற்கும் j மேற்கோள்.

398. வெளிப்படை மொழியெனற்கும் a, பெயரெச்சம் தொழிற் பெயர் கொண்டு முடிதற்கும் b மேற்கோள்.

399. நெடில் மோனைக்கும் a, செயவெனெச்சம் காரணப் பொருட் டாயதற்கும் b மேற்கோள்.

400. பொருளென்னும் பொதுப்பெயர் கல்விப் பொருளைக் குறிக் கும்போது அடை பெற்றே வருதல் இயற்கையென்றும், சிறுபான்மை பல அடை பெற்றும் குறிக்கப் பெறுமெனற் கும் $ மேற்கோள்.

401. விகற்பக் குறள் வெண்பாவிற்கும் a, கொளலென்பதனை ஈண்டுத் தொழிற்பெயராகவும், அங்கணத்துள் (குறள். 720) வியங்கோளாகவும் பரிமேலழகர் உரைகண்டதற்குக் காரணம் உவம இலக்கணமெனற்கும் b மேற்கோள்.

402. வெண்சீரோடு வேற்றுச்சீர் ஒன்றிய சிறப்பில் வெண்சீர் வெண்டளைக்கு $ மேற்கோள்.

403. சீர்வகை ஒரூஉமோனைக்கு $ மேற்கோள்.

404. கட்டளை வருக்கமோனைக்கு $ மேற்கோள்.

405. பெயரை அடுத்து வரும் படுசொல் 'யக்கு' எனப்படு மென்பதற்கு $ மேற்கோள்.

406. முதலடி நாற்சீரும் ஈற்றடி முச்சீரும் பெற்றுவந்த குறள் வெண்பாவிற்கும் a, பயப்பென்னும் உரிச்சொல் பயனெனப் பொருள் படுதற்கும் b மேற்கோள்.

407. பத்துவகை எச்சங்களுள் வினையெச்சத்திற்கும் a, உரை யிறுதிக்கண் முடிவுரை மொழியாகவும் b, ஆகுபெயர் வந்துள்ளமைக்கும் c, சாவென் எச்சத்திறுதி குன்றுமென்ற

தொல்காப்பிய (எழு.209) உபலக்கணத்தால் செயவெனெச் சத்தொடர் இறுதி குறைந்து மாண்புனைபாவையென நின்ற தெனக்கொள்கவெனற்கும் d, சாவவென் எச்சத்திறுதி குன்றுமென்ற தொல்காப்பிய (எழு. 209) உபலெக்கணத் தால் செய்தெனெச்சத்து ஈறு குன்றி நுண்மாணெனவும், பெயரெச்சத்து ஈறு குறைந்து வினைத்தொகையாக நுழை புலமெனவும் நின்றன வெனற்கும் e, முதனிலைத் தனிவினை செயவெனச்சமாக நின்றமைக்கும் f மேற்கோள்.

408. தெரிதருதேற்ற உவமையணிக்கும் a, கண் ஏழனுருபெனற் கும் b, உவமையுள் ஓர் பேதம் என்பதற்கும் c, தேற்றவுவ மையின்பாற்படுவதென்பதற்கும் d, நிகழ்த்தப்படுபொருளின் வகையுள் உருவென்பதற்கும் e மேற்கோள்.

410. எதிர் நிரல்நிறைப் பொருள்கோளுக்கும் a, உவமையிலக்கண மரபில் இரட்டைக்கிளவி இரட்டை வழித்து என்பதனை விளக்கவும் b, சாதிக்கேற்ற உவமை வந்துள்ளமைக்கும் c, ஒப்பலொப்புப் பொருளில் ஒடுவுருபு வந்துள்ளமைக்கும் d மேற்கோள்.

411. செல்வமென்பது சுட்டொடு புணர்பெயரெனற்கும் a, உருபு பிரித்துக் கூட்டலை விளக்குதற்கும் b, சொல்லொடு உருபு பொருந்தும் பொருத்தமில் புணர்ச்சி விளக்கத்திற்கும் c மேற்கோள்.

412. எட்டாரைச் சக்கரத்துள் காதை காப்பாய் வந்தமையை விளக்கவும் a, ஈதலென்னும் வினை பெரும்பகுதி உண்ணும் பொருள்களையே குறித்து வழங்கப்படுவதெனற்கும் b மேற் கோள்.

413. ஒடுவுருபு ஒப்புப் பொருளில் நின்றமைக்கு $ மேற்கோள்.

415. வேண்டாது கூறி வேண்டியது முடித்தலென்னும் தந்திர வுத்தியின் விளக்கத்திற்கு $ மேற்கோள்.

418. தொட்டலென்பதும் தோட்டலென்பதும் வெவ்வேறு பொரு ளுடையன வென்பதற்கும் a, படுசொல்லின்றிப் படுபொருள்

விரிக்கப்படுமாயினும் சிறுபான்மை படுசொல் பெற்று வருமெனற்கும் b, படுசொல் தொக்கதாயின் வேறு பொருளாகுமாதலின் இது தொகுக்க வேண்டினும் தொகுக்கப்படாது என்பதற்கும் c மேற்கோள்.

419. அல்லாலென்பது அன்றியென்னும் செய்தெனெச்சக் குறிப் புணர்த்துவதோர் வாய்பாடெனற்கும் a, அல்லாலென்பது அல்லவாயினெனப் பொருளாயின் 'இன்' ஈற்று வினையெச்சக் குறிப்புடையதெனற்கும் b, நுணங்கென்னும் உரிச்சொல் நுண்மையென்று பொருள்படுதற்கும் c, வணங்குதல் சிறப்புவினையென்பது இப்பாடலின் உரையாலும் வலியுறுமெனற்கும் d மேற்கோள்.

420. வாயுணர்வு மூன்றும்வேற்றுமைத் தொகையென உரைக்கப் பட்டதனால் உருபிருந்து தொகுவது விகாரமன்றென விளக்கவும் a, உருபும் பயனும் உடன் தொக்க வேற்றுமைத் தொகை வந்தமைக்கும் b, செயினென்னும் வினையெச்சத்திற்கும் c மேற்கோள்.

422. பெருமையும் உரனும் ஆடூஉ மேனவாகலின் தலைவியின் வேட்கைக் குறிப்புணர்ந்த தலைவன் அந்நிலையே புணர்ச்சி நினையாது, களவு நீட்டியாது வரைந்தெய்தும் என்பதற்குச் சான்றுமொழியாகவும் a, செலவிடாவென்பது செய்யுட் டொடை காரணமாக வந்த கடைக்குறையெனற்கும் b, வினைக்கேற்ற செயப்படுபொருள் வருவித்துரைக்கப்பட்டமைக்கும் c மேற்கோள்.

423. பெயரடுக்கி வருதற்கும் a, வினைப்பெயர் வந்தபின் சுட்டுப் பெயர் வருதல் வடமொழி மதமாதலின் திருவள்ளுவரும் அவ்வாறே செய்யுள் செய்தாரெனற்கும் b, நூல், உரை, போதகாசிரியர் மூவரும் அதிமதி நுட்பமொடு அதிகலை கற்பினும் விதியதுவசத்தால் விதி விலக்கயர்ப்பரென்ற கருத்திற்குச் சான்றுமொழியாகவும் c மேற்கோள்.

424. அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கத்துள் ஓதுவித்தலுக்கும் a, காண்பதறிவு என்பதுபோல் காண்பரிதென்பது

(குறள். 16) நில்லாமையின் விகாரமாயிற்றெனற்கும் b மேற்கோள்.

425. யாப்பருங்கல விருத்தியாசிரியர் நாலசைச்சீர் வேண்டாது நடாத்தும் உபாயம் கண்டாராயினும் உலகம் தழுவியது ஒட்பமாதலின் அதனை விரித்துக் கூறினாரெனற்கு a மேற்கோள்.

426. ஒழுக்கப்புறத்திணைக்கும் a, முற்றுகரத்தோடு வந்த பிறப்பு வாய்பாட்டிறுதிச் சீர்வெண்பாவுக்கும் b மேற்கோள்.

427. அறிவு உயிர்ப்பண்புகளுள் ஒன்றெனற்கு $ மேற்கோள்.

